


# இந்து தமிழ் திசை

தமிழால் இணைவோம்


சென்னை / காஞ்சிபுரம் பதிப்பு ● திங்கள், ஜூலை 26, 2021

RNI No.TNTAM/2018/76449 Vol.4 No.206

● அச்சகம்: சென்னை, கோவை, மதுரை, திருச்சி, திருவனந்தபுரம், பெங்களூரு, திருப்பதி ●

https://www.hindutamil.in

● 10 பக்கங்கள் ₹ 7




### மகாராஷ்டிராவில் நிலச்சரிவில் சிக்கிய

# 73 பேரின் உடல்கள் மீட்பு; 47 பேர் மாயம்

● இரவு பகலாக நடைபெற்று வரும் மீட்புப் பணிகள்

■ மும்பை

மகாராஷ்டிரா மாநிலத்தில் நிலச்சரிவில் சிக்கிய 73 பேரின் உடல்கள் மீட்கப்பட்டன. இந்த சம்பவத்தில் மாயமான 47 பேரை தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

மகாராஷ்டிரா மாநிலத்தில் கடந்த 10 நாட்களுக்கும் மேலாக பெய்து வரும் கனமழையின் காரணமாக பல்வேறு பகுதிகளில் வெள்ள நீர் சூழ்ந்துள்ளது. இதனால் மாநிலத்தில் உள்ள பல்வேறு ஆறுகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகிறது.

இதன் காரணமாக கடந்த வியாழக்கிழமை முதல் மகாராஷ்டிராவின் பல மாவட்டங்களில் நிலச்சரிவு மற்றும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. கடலோர மாவட்டமான ராய்காட் மாவட்டத்தின் மகாத் தெஹ்சில் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி பலர் மாயமாகினர். இதற்கிடையில், கோலாப்பூர் மாவட்டத்தில் 47 கிராமங்களை வெள்ளம் சூழ்ந்ததால் மற்ற பகுதிகளில் இருந்து அவை துண்டிக்கப்பட்டன. சாலைகள் நீரில் மூழ்கியதால் போக்குவரத்தும் கடுமையாக பாதிக்கப்பட்டது.



▲ மகாராஷ்டிரா மாநிலம் கோல்ஹாப்பூர் மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து பல கிராமங்களை வெள்ளம் சூழ்ந்துள்ளது. இந்நிலையில் நேற்று வெள்ளம் பாதித்த பகுதிகளில் உள்ள மக்களை படகுகள் மூலம் ராணுவ வீரர்கள் மீட்டனர். படம்: பிடிஐ

இதனிடையே நிலச்சரிவு ஏற்பட்ட இடங்கள், வெள்ளம் சூழ்ந்த இடங்களில் மீட்பு பணிக்காக கடற்படை மீட்பு குழுக்கள் வரவழைக்கப்பட்டுள்ளன. அவை ராய்காட் மாவட்டத்தில் உள்ள மஹாத் தெஹ்சிலிலும் ரத்னகிரி மாவட்டத்தில் சிப்லூனிலும் முகாமிட்டுள்ளன. பாதிக்கப்பட்ட மக்களை தேசிய பேரிடர் மீட்பு படையினர் (என்டிஆர்எஃப்) பாதுகாப்பான இடங்களில் தங்க வைத்து வருகின்றனர்.

ராய்காட் மாவட்டம் மகாத் தெஹ்சிலில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 36 பேர் உயிரிழந்துள்ளனர். இதற்கு அருகில் உள்ள பகுதியில் 3 வெவ்வேறு நிலச்சரிவு சம்பவங்கள் நடந்தன. இந்த பேரிடரில் மொத்தம் 73 பேர் சடலங்களாக மீட்கப்பட்டனர்.

இதனிடையே மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் அடுத்த சில நாட்களில் கன மழை பெய்யக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக தேசிய பேரிடர் மீட்புக் குழுவின் இயக்குநர் ஜெனரல் எஸ்.என். பிரதான் கூறியதாவது: நிலச்சரிவு ஏற்பட்ட மகாத் தெஹ்சில் பகுதி உட்பட பல்வேறு இடங்களில் இருந்து மொத்தம் 73 சடலங்களை என்டிஆர்எஃப் குழுவினர் மீட்டுள்ளனர். மேலும் மாயமான 47 பேரைத் தேடி வருகிறோம்.நிலச்சரிவால் இதுவரை 112 பேர் இறந்துள்ளனர். 1 லட்சத்து 35,313 பேரை பாதுகாப்பான இடங்களில் தங்க வைத்துள்ளோம். மீட்புப் பணிகளில் 34 குழுக்கள் ஈடுபட்டுள்ளன.

கிருஷ்ணா, பஞ்ச்கங்கா உள்ளிட்ட நதிகளில் வெள்ளம் கரைபுரண்டோடி வருகிறது. தொடர்ந்து மீட்புப் பணிகள் இரவுபகலாக நடைபெற்றுவருகின்றன. நிவாரண முகாம்கள் அமைக்கப்பட்டு பாதிக்கப்பட்டவர்களுக்குத் தேவையான உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

# ஓபிஎஸ், பழனிசாமி தனித்தனியாக டெல்லி பயணம்

● பிரதமர் நரேந்திர மோடி, அமித் ஷாவுடன் இன்று சந்திப்பு

■ சென்னை

அதிமுக ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம், இணை ஒருங்கிணைப்பாளர் பழனிசாமி ஆகியோர் திடீரென நேற்று தனித்தனியாக டெல்லி புறப்பட்டுச் சென்றனர். பிரதமர் நரேந்திர மோடி, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா உள்ளிட்டோரை இன்று இருவரும் சந்திக்க உள்ளதாக கூறப்படுகிறது.

கடந்த 2019 மக்களவைத் தேர்தல் முதல், தமிழகத்தில் அதிமுக தலைமையிலான கூட்டணியில் பாஜக இடம் பெற்றுள்ளது. நடந்து முடிந்த சட்டப் பேரவைத் தேர்தலில் அதிமுக பிரதான எதிர்க்கட்சியாக அமர்ந்தது.

இந்தச் சூழலில், அதிமுக ஒருங்கிணைப்பாளர் ஓபிஎஸ் நேற்று காலை 10.30 மணி அளவில் சென்னையில் இருந்து டெல்லி புறப்பட்டுச் சென்றார். அதுபோல, அதிமுக இணை ஒருங்கிணைப்பாளரும் பேரவை எதிர்க்கட்சித் தலைவருமான பழனிசாமி நேற்று இரவு கோவையில் இருந்து டெல்லி சென்றார்.

இருவரும் இன்று நாடாளுமன்ற வளாகத்தில் பிரதமர் நரேந்திர மோடி, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா உள்ளிட்டோரை சந்திக்க இருப்பதாக அதிமுக எம்.பி. ஒருவர் 'இந்து தமிழ் திசை' நாளிதழிடம் தெரிவித்தார். பாஜக தேசியத் தலைவர் ஜே.பி.நட்டா, மத்திய அமைச்சர்கள் நிர்மலா சீதாராமன், நிதின் கட்கரி உள்ளிட்டோரையும் அவர்கள் சந்திக்க வாய்ப்பு இருப்பதாக கூறப்படுகிறது.

திமுக ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, தமிழகத்தில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றங்கள், நடப்பு அரசியல் சூழல், சசிகலா விவகாரம், மத்திய அமைச்சரவையில் அதிமுக இடம்பெறுவது, நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல், அதிமுக முன்னாள் அமைச்சர்கள் மீதான வருமானவரித் துறை சோதனை உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்து இந்த சந்திப்பின்போது ஆலோசிக்க உள்ளதாகத் தெரிகிறது. தமிழகத்தில் 3 மாநிலங்களவை உறுப்பினர் இடங்களுக்கு விரைவில் இடைத்தேர்தல் நடக்க உள்ளது.

மத்திய அமைச்சராகியுள்ள எல். முருகன் 6 மாதங்களுக்குள் எம்.பி.யாக வேண்டும். எனவே, பாஜக தலைவர்கள் உடனான சந்திப்பின்போது மாநிலங்களவை இடைத்தேர்தல் குறித்தும் முக்கியமாக விவாதிக்கப்படும் என்று கூறப்படுகிறது.

நீட் தேர்வு ரத்து, தடுப்பூசிகளை வழங்குவது, எய்ம்ஸ் மருத்துவமனை உள்ளிட்ட கோரிக்கைகள் அடங்கிய மனுவையும் அப்போது அவர்கள் அளிக்க இருப்பதாக கூறப்படுகிறது. தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பிறகு பிரதமரை அதிமுக தலைவர்கள் சந்திப்பது முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

வணிக வீதி
8-ம் பக்கத்தில்...




# 5 மாவட்டங்களில் மழை பெய்ய வாய்ப்பு

■ சென்னை

தமிழகத்தில் 5 மாவட்டங்களில் மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் நா.புவியரசன் தெரிவித்தார். நேற்று அவர் கூறியதாவது:

தென்மேற்கு பருவக்காற்று காரணமாக தமிழகத்தில் 26-ம் தேதி மேற்குத் தொடர்ச்சி மலையை ஒட்டிய நீலகிரி, கோவை, தேனி, திண்டுக்கல், தென்காசி ஆகிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழையும், மற்ற மாவட்டங்களில் பெரும்பாலும் வறண்ட வானிலையும், ஓரிரு இடங்களில் லேசான மழையும் பெய்யக்கூடும். மேலும் 27, 28, 29 தேதிகளிலும் இதே நிலை காணக்கூடும்.

சென்னையில் அடுத்த 48 மணி நேரத் தில் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 98 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கும். 26-ம் தேதி தெற்கு வங்க கடல் மற்றும் தெற்கு அந்தமான் கடல் பகுதிகளிலும், 27, 28, 29 தேதிகளில் தெற்கு வங்க கடல் மற்றும் அதனை ஒட்டிய மத்திய வங்க கடல் பகுதிகளில் பலத்த காற்று மணிக்கு 40 முதல் 50 கிமீ வேகத்தில் வீசக்கூடும். இவ்வாறு அவர் கூறினார்.

(C) KSL Media Ltd.




# எளிய காலங்களுக்கு ஒரு புகழ்மாலை



களத்தில் பயணம் - ஆயிரம் கதைகள் ஒற்றை நிறுத்தத்தில்தான் தொடங்குகின்றன

எளிய சந்தோஷங்கள்தான் எல்லாமே! குழந்தைப்பருவ நினைவுகளில் சஞ்சரிக்கையில் எளியதாக இருந்த அந்தக் காலங்கள் நம் உணர்வுகளைத் தூண்டிவிடும்– ஞாயிற்றுக்கிழமை மாலைகளில் மெரினா கடற்கரையோரம் நடந்து செல்வது, கடற்கரை மணலில் அமைந்துள்ள கடைகளில் பிடித்த தின்பண்டங்களையோ ரோஸ் மில்க்கையோ சுவைத்தபடி கடல் அலை நீர் கால்களைக் குளிர்வித்துச் செல்லக் காத்திருப்பது; பாட்டி சுடச் சுட வடைகளையும் முந்திரி பக்கோடாக்களையும் சமைத்துக்கொண்டிருக்கையில் முற்றத்தில் விழும் முதல் மழையில் நனைவது; அருகில் இருக்கும் கடைகளில் மிட்டாய்களை வாங்கித் தின்பதற்காக கஷ்டப்பட்டு சேர்த்த 50 பைசாவை எடுத்துச் செல்வது.

நாம் சைக்கிளில் சென்று வந்துவிடும் அளவுக்கு பள்ளிகள் வீட்டுக்கு அருகில் இருந்தன. ஒரே சைக்கிளில் இருவர் பயணிப்பது கூடுதல் குதூகலம். மரத்தாலான ஒரே பெஞ்சை பகிர்ந்து உட்கார்ந்து நாம் ஒவ்வொருவரும் வைத்திருந்த ஸ்லேட்டில் பல வண்ணங்களிலான சாக்பீஸைக் கொண்டு எழுதுவோம். பின்னர் பென்சிலுக்கு உயர்ந்து, இறுதியாக மை நிரப்பி எழுதப்படும் பேனாக்களைப் பயன்படுத்தத் தொடங்கியபோது முக்கியமானவர்கள் ஆகிவிட்டதாக உணர்ந்தோம். தினமும் இரவில் பேனாவுக்கு மை நிரப்புவது பெருமைக்குரிய சடங்காக இருந்தது. ஷூக்களுக்கு வெள்ளைச்சாயமும் கறுப்பு பாலீஷும் போடுவதும் அப்படியே.

நாம் விரும்பிச் சாப்பிட்ட தின்பண்டங்களும் எளிமையானவையே. அரிதான ஸ்டிக்கர் கிடைக்கும் என்பதற்காக குறிப்பிட்ட மணச்சுவை கொண்ட பபுள்கம்தான் வேண்டும் என்று கேட்டு வாங்குவோம். கமர்கட்டையும் தேன் மிட்டாயையும் ரசித்து உண்பதை ஒரு எழுதப்படாத விதியைப்போல் பின்பற்றினோம். வெணிலா அல்லது சாக்லேட் சுவைகளில்



சிறுவர்களும் பெரியவர்களும் ஒன்றுகூடி தொலைக்காட்சி பெட்டிக்கு முன் அசைவின்றி அமர்ந்திருந்தோம்



நம் அனைவருக்கும் பிடித்த வாரயிறுதி திட்டம், மணலில் அமர்ந்தபடி சுண்டல் கொறிப்பது

ஐஸ்கிரீம் கிடைக்கும். சில நேரம் மிக நல்ல பிள்ளையாக நடந்துகொண்டால் பந்து போன்ற குடுவையில் நிரப்பப்பட்ட ஐஸ்கிரீம் அல்லது மிக அரிதான சாக்கோபார் கிடைக்கும். மற்ற நாட்களில் வண்ணமயமான குச்சி ஐஸ்.



அண்ணா சாலையில் உள்ள திரையரங்குகளுக்குச் சென்று புதிதாக வெளியான திரைப்படங்களைப் பார்த்து மகிழ்வது. சிறப்பு முகாம்களோ கணினிகளோ இல்லாமல் பாண்டியோ பல்லாங்குழியோ விளையாடிக்கொண்டு எதற்கும் மெனக்கெடாமல் நாட்களைக் கடத்துவது. புகைப்பட ஸ்டூடியோவுக்குச் சென்று குடும்பத்துடன் புகைப்படம் எடுத்துக்கொள்வதற்காக பாவாடை அணிந்துகொண்டு செல்வது, ராட்சத ராட்டினங்களில் சுற்றுவதற்காக கோடைகாலச் சந்தைகளுக்குச் செல்வது.

கிரிக்கெட் ஸ்கோரைத் வானொலியில் கேட்டுத் தெரிந்துகொள்வது. பாடல் ஒலிநாடாக்களில் உள்ள நாடாவை பென்சில்களை வைத்து சுழற்றுவது அல்லது பிடித்த எஸ்.பி.பி பாடல்களின் தொகுப்பை அதில் பதிவுசெய்வது. இசையில் மேதமை அடையும் நம்பிக்கையுடன் நம் குரலிலேயே பாடி பதிவு செய்வது.

அதற்குப்பின் கறுப்பு–வெள்ளை தொலைக்காட்சி என்னும் புரட்சிகரக் கருவி வந்தது. தினமும் வாசிக்கப்படும் செய்திகளையும் ஆண்டின் முக்கியமான ஒளிபரப்பான சுதந்திர தின அணிவகுப்பையும் பார்ப்பதற்காக அண்டைவீடுகளில் வசித்த அனைவரும் ஒன்றுகூடினர். எல்லா வீடுகளிலும் தொலைக்காட்சி இருக்கவில்லை. ஆனால் அது ஒரு பிரச்சினையே இல்லை. யாரிடம் இருந்ததோ அவர்களுடன் நட்புகொண்டோம். அவர்கள் வீட்டில் இருந்த தொலைக்காட்சியைப் பார்க்க நம்மை வரவேற்றார்கள்.

காலம் செல்லச் செல்ல வானொலிகளின் இடத்தை டேப் ரிக்கார்டர்களும் வண்ணத் தொலைக்காட்சிகளும் பறித்துக்கொண்டன. ஆஹா! நமக்குப் பிடித்த நடிகர்களை கறுப்பு வெள்ளைக்குப் பதிலாக அவர்கள் நிஜமாக என்ன நிறத்தில் இருப்பார்களோ அப்படியே பார்த்தோம். இந்திய அணி நேர்த்தியான நீல நிற சீருடை அணிந்து விளையாடிய கிரிக்கெட் போட்டிகளைப் பார்த்தோம்.

தொலைக்காட்சி பார்க்கும்போது ஒவ்வொருவரும் உருளை வறுவல்களையோ பிஸ்கெட்டுகளையோ பகிர்ந்துகொண்டோம். பிரிட்டானியா மில்க் பிக்கீஸ் நம் அனைவருக்கும் பிடித்த பிஸ்கெட்டானது. அந்த பிஸ்கெட்டைத் தின்பதற்குப் பிடித்தமான ஒரு வழியும் இருந்தது! சிலர் முதலில் அதன் பூ வேலைப்பாடு போல் இருந்த ஓரங்களை மட்டும் மிகுந்த கவனத்துடன் கடித்துத் தின்போம். மற்றவர்கள் BRITANNIA என்னும் எழுத்துக்கள் மட்டும் தெரியும்படி சுற்றியிருந்த பகுதிகளைக் கடித்துத் தின்றுவிட்டு, அந்த தனித்துவமான திறமையை நம்மிடையே ஒருவருக்கொருவரிடமோ அல்லது அம்மா, அப்பாவிடமோ பெருமையுடன் காண்பிப்போம். வாழ்க்கை இதுபோன்ற எளிய தருணங்களால் சுவையூட்டப்பட வேண்டும் என்று அவ்வப்போது நினைவூட்டப்படுவது அழகானது.



நமக்கு எப்போதும் பிடித்த தாயம் விளையாடுவது




TAMILTH ALL 1 Calendar_Pg S.VENKATACHALAM Time



## பளிச் பத்து 26


தொகுப்பு: பி.எம்.சுதிர்



- ரோஜாக்கள் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே உலகில் தோன்றியிருப்பதாக அகழ்வாராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.
- ரோமானியர்கள் பண்டைய காலத்தில் கட்டிடங்கள், அறைகலன்கள் மற்றும் தங்களை அலங்கரித்துக்கொள்ள ரோஜா மலர்களை பயன்படுத்தியுள்ளனர்.
- உலகின் மிகப் பழமையான ரோஜாச் செடி ஜெர்மனி நாட்டில் உள்ள ஹில்டெஷிம் கதீட்ரலில் உள்ளது. இது 1,000 ஆண்டுகள் பழமையானது.
- அமெரிக்கா, இங்கிலாந்து, மாலத்தீவு, ஈரான், இராக் உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் தேசிய மலராக ரோஜா உள்ளது.
- ரோஜாக்களில் வைட்டமின் சி உட்பட பல்வேறு சத்துகள் உள்ளன.




- உலகில் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ரோஜா வகைகள் உள்ளன.
- சிவப்பு, மஞ்சள், ஊதா, வெள்ளை, ஆரஞ்சு என பல்வேறு வண்ணங்களில் ரோஜாக்கள் பூக்கின்றன.
- சிவப்பு ரோஜா காதலையும், மஞ்சள் ரோஜா நட்பையும், ஊதா நிற ரோஜா பெண்மையையும் குறிப்பதாக கூறப்படுகிறது.
- உலகின் மிகப்பெரிய ரோஜாப்பூ கலிபோர்னியாவில் பூத்துள்ளது. இதன் விட்டம் 33 அங்குலம்.
- உலகின் மிகப்பெரிய ரோஜாச் செடியும் கலிபோர்னியாவில் உள்ளது. இச்செடி 18.8 அடி உயரம் கொண்டது.



## நல்லதே நடக்கும்

• ஜோதிஷபூஷண் வேங்கடசுப்பிரமணியன் •

**26-07-2021** பிலவ 10 ஆடி

திங்கள்கிழமை

**திதி** : துவிதியை காலை 6.18 வரை, பிறகு திருதியை.
**நட்சத்திரம்** : அவிட்டம் பிற்பகல் 1.18 வரை, பிறகு சதயம்.
**நாமயோகம்** : சௌபாக்யம் பின்னிரவு 2.06 வரை, பிறகு சோபனம்.
**நாமகரணம்** : கரசை காலை 6.18 வரை, பிறகு வணிசை மாலை 5.43 வரை, பிறகு பத்திரை.
**நல்ல நேரம்** : காலை 6.00-7.00, 9.00-10.30, மாலை 3.00-4.00.
**யோகம்** : சித்தயோகம்
**சூலம்** : கிழக்கு, தென்மேற்கு காலை 9.12 வரை.
**பரிகாரம்** : தயிர்
**சூரிய உதயம்**: சென்னையில் காலை 5.53 **அஸ்தமனம்**: மாலை 6.37

| | | | |
|---|---|---|---|
| ராகு காலம் | காலை 7.30-9.00 | நாள் | தேய்பிறை |
| எமகண்டம் | காலை 10.30-12.00 | அதிர்ஷ்ட எண் | 8, 6, 2 |
| குளிகை | மதியம் 1.30-3.00 | சந்திராஷ்டமம் | புனர்பூசம், பூசம் |

நான்கு தலைமுறையாக பாரம்பரியமிக்க தங்க நகை நிறுவனம்
HOUSE OF L.K.S. LKS GH SINCE 1925
T.NAGAR LKS® GOLD HOUSE (P) LTD SINCE 1925
T.NAGAR | ANNA NAGAR | TAMBARAM
"LKS - GOLD" IS CASH IN HAND

**மேஷம்:** எக்காரியத்திலும் வெற்றி கிடைக்கும். புதிய முயற்சிகள் பலிதமாகும். குடும்பத்தில் சுப காரியங்கள் ஏற்பாடாகும். திருப்பணிகள், ஆன்மிக காரியங்களை முன்னின்று நடத்துவீர்கள்.

**ரிஷபம்:** வெளி வட்டாரத்தில் மகிழ்ச்சி பெருகும். பிரபலங்களின் உதவி கிடைக்கும். அவர்களது உதவியுடன் சில காரியங்களை செய்து முடிப்பீர்கள். பேச்சில் நிதானம் அவசியம்.

**மிதுனம்:** வீட்டை விரிவுபடுத்துவது, அழகுபடுத்துவது நல்ல விதத்தில் முடியும். சிலருக்கு அரசுப் பதவிகள் கிடைக்கும். இழந்ததைப் பெறுவீர்கள். சமூக அந்தஸ்து உயரும். பண வரவு உண்டு.

**கடகம்:** ஆன்மிகப் பயணங்கள் சென்று வருவீர்கள். தியானம், யோகா, ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். உங்களிடம் இருக்கும் அலட்சியப்போக்கால் சில சிக்கல்கள் வர வாய்ப்பு இருக்கிறது.

**சிம்மம்:** தடைபட்ட வேலைகள் முழுமையடையும். அரசு அதிகாரிகளின் உதவி கிடைக்கும். நல்ல இடவசதியுடன் கூடிய பெரிய வீட்டில் குடிபுகுவீர்கள். பிரபலங்களுடன் நெருக்கமாவீர்கள்.

**கன்னி:** மறைமுக எதிரிகளைக் கண்டறிந்து ஒதுக்குவீர்கள். புதிய நபர்கள் தக்க சமயத்தில் உதவுவார்கள். நீண்ட நாட்களாக எதிர்பார்த்துக் காத்திருந்த பயணம் சாதகமாக அமையும்.

**துலாம்:** நம்பிக்கை, தைரியம் பிறக்கும். மறைமுக எதிர்ப்புகளை வெல்வீர்கள். விஐபிக்களின் நட்பு கிடைக்கும். சொந்த ஊரில் மதிப்பு, மரியாதை கூடும். அனைவரையும் அரவணைத்துச் செல்வீர்கள்.

**விருச்சிகம்:** நேர்மறை எண்ணங்கள், உற்சாகம் பிறக்கும். நீண்ட நாட்களுக்குப் பிறகு, நிம்மதியாக தூங்குவீர்கள். தாய் உடல்நலத்தில் கவனம் தேவை. பயணங்களால் ஆதாயம் கிடைக்கும்.

**தனுசு:** இளைய சகோதர உறவுகளால் ஆதாயம் பெறுவீர்கள். விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். புதிய நபர்களால் நன்மை பிறக்கும். வாகனம் வாங்குவீர்கள்.

**மகரம்:** புதிய முயற்சிகளில் ஆர்வம் பிறக்கும். எப்போதோ வர வேண்டிய பணம் இப்போது வந்து உங்களுக்கு கைகொடுக்கும். பழைய கடனை தீர்ப்பீர்கள். சொத்தில் இருந்த சிக்கல்கள் தீரும்.

**கும்பம்:** உடல்நலக் குறைவு, மனச் சோர்வு, பதற்றம் வந்துபோகும். உடன்பிறந்தவர்கள் இடையே மனக் கசப்புகள் வந்து நீங்கும். யாருடனும் வீண் விவாதங்கள் வேண்டாம்.

**மீனம்:** சிலர் உங்கள் மீது வீண் பழி சுமத்துவார்கள். கோயில் விழாக்கள், ஆன்மிக காரியங்களை முன்னின்று நடத்துவீர்கள். பிரபலங்களின் அறிமுகத்தால் ஆதாயம் கிடைக்கும்.

### கரோனா நிவாரணத் தொகை பெறாதவர்கள்

# ரேஷன் கடைகளில் வரும் 31 வரை பெறலாம்

● புதிய அட்டைகளுக்கு ஆகஸ்ட் முதல் பொருள் விநியோகம்

■ **சென்னை**

கரோனா மற்றும் இதர காரணங்களால் கரோனா நிவாரணத் தொகை பெறாதவர்கள் வரும் 31-ம் தேதி வரை அவரவர் ரேஷன் கடைகளில் பெற்றுக் கொள்ளலாம். புதிய குடும்ப அட்டைதாரர்கள் ஆகஸ்ட் முதல் வாரத்தில் இருந்து ரேஷன் பொருள் பெற்றுக் கொள்ளலாம் என்று அரசு அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக அரசு நேற்று வெளியிட்ட அறிக்கை:

கரோனா பெருந்தொற்று காரணமாக வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில், அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கு கடந்த மே 15-ம் தேதி, முதல் தவணையாக ரூ.2 ஆயிரம், ஜூன் 15-ம் தேதி ரூ.2 ஆயிரம் என மொத்தம் ரூ.4 ஆயிரம் உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. மேலும், அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கு 14 வகையான மளிகைப் பொருட்கள் அடங்கிய தொகுப்பு ஜூன் 15-ம் தேதி முதல் விநியோகம் செய்யப்பட்டன.

இதில், 99 சதவீதத்துக்கு மேற்பட்ட அட்டைதாரர்கள் தற்போது நிவாரணத் தொகை, மளிகைப் பொருள் தொகுப்பினை பெற்றுள்ளனர்.

அதேநேரம் இவற்றை இது வரை பெறாதவர்கள் வரும் 31-ம் தேதிக்குள் அவர்களுக்குரிய பொது விநியோகத் திட்ட அங்காடிகளில் பெற்றுக் கொள்ளலாம்.

**ஆகஸ்ட் 1-ம் தேதி முதல்..**

கரோனா பாதிப்பு மற்றும் இதர காரணங்களால் வரும் 31-ம் தேதிக்குள் பெற இயலாத, கடந்த ஜூன் 15-ம் தேதியில் தகுதியுடன் இருந்த, அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு வரும் ஆகஸ்ட் 1-ம் தேதி முதல் மாவட்ட வழங்கல் அலுவலர் நிலையிலான அலுவலரிடம் நியாய விலைக் கடை மூலமாகத் தகவல் தெரிவித்து அனுமதி பெற்று, சம்பந்தப்பட்ட ரேஷன் கடையில் இருந்தே வழங்கப்படும்.

கடந்த மே 10-ம் தேதி முதல் புதிய குடும்ப அட்டைக்கு விண்ணப்பித்த சுமார் 3 லட்சம் மனுதாரர்களுக்கு குடும்ப அட்டைகள் அச்சிடப்பட்டு வழங்கப்படுகின்றன. இந்த குடும்ப அட்டைதாரர்கள் ஆகஸ்ட் 1 முதல் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட கடைகளில் ரேஷன் பொருட்களைத் தொடர்ந்து பெற வழிவகை செய்யத் தேவையான தொழில்நுட்ப ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

எனவே, புதிய குடும்ப அட்டைதாரர்கள் ஆகஸ்ட் முதல் வாரத்தில் இருந்து அத்தியாவசியப் பொருட்களை தங்கு தடையின்றி பெற்றுக் கொள்ளலாம்.

அட்டைதாரர்கள் அனைவரும் கரோனா நோய்த் தொற்று தீரும் வரை முகக் கவசம் அணிந்து, தனி மனித இடைவெளியைப் பின்பற்றி அவசியத் தேவையின்றிப் பொது வெளிக்கு வராமல் தங்களையும் காத்து சமூகத்தையும் காத்து கரோனா தொற்றை வென்றிடுவோம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### தமிழக நிதி நிலையை சரிசெய்ய

# லாட்டரி பற்றி சிந்திக்கவே இல்லை

● பழனிசாமிக்கு நிதி அமைச்சர் பதில்

■ **சென்னை**

அதிமுக அரசு சீரழித்த நிதி நிலைமையை சரிசெய்ய லாட்டரி பற்றி சிந்திக்கவே இல்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமிக்கு நிதி அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் விளக்கம் அளித்துள்ளார்.

இதுகுறித்து அவர் நேற்று வெளியிட்ட அறிக்கை:

லாட்டரி சீட்டை மீண்டும் திமுக அரசு கொண்டுவர முயற்சிக்க வேண்டாம் என்று உண்மைக்கு புறம்பான ஓர் அறிக்கையை வெளியிட்டிருக்கும் எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமிக்கு கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

கரோனா 2-வது அலையை திறமையாகக் கையாண்டு தினமும் கடின உழைப்பால் சிறப்பான நிர்வாகத்தை அளித்து வருவதற்காக இன்று அனைவராலும் பாராட்டப்படும் முதல்வர் மு.க.ஸ்டாலின் செயல்பாடுகள் மீது, லாட்டரி பற்றி ஒரு கற்பனையைத் தனக்குத் தானே உருவாக்கிக் கொண்டு பழனிசாமி இப்படி களங்கம் கற்பிப்பது கண்டனத்துக்குரியது.

தமிழக அரசு ஆலோசனைகளிலோ, ஆய்வுக் கூட்டங்களிலோ ஒருமுறைகூட லாட்டரி பற்றிய பேச்சே இதுவரை எழவில்லை.

இன்றைய எதிர்க்கட்சித் தலைவர் தனது மோசமான ஆட்சியால் நெருக்கடி மிகுந்த நிதி நிலைமையை விட்டுச் சென்றிருந்தாலும், சிதிலமடைந்த நிதி நிலைமையை சரிசெய்யும் கடும் நெருக்கடி மிகுந்த சூழலை இந்த அரசுக்கு ஏற்படுத்திவிட்டு சென்றிருந்தாலும் மாநில நிதி ஆதாரத்தை பெருக்கும் வழிகளில் லாட்டரி பற்றிய சிந்தனையே இந்த அரசுக்கு இல்லை.

நிதிப் பேரழிவில் மாநிலத்தை அதிமுக விட்டுச் சென்றிருந்தாலும் அதைச் சரிசெய்ய நாங்கள் சிந்திக்கும் சூழலில்கூட லாட்டரி எங்கள் சிந்தனை வட்டத்துக்குள்ளேயே இல்லை.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### 'இந்து தமிழ் திசை', அம்ரிதா விஷ்வ வித்யாபீடம் இணைந்து வழங்கும் 'உயர்வுக்கு உயர்கல்வி'

# எதிர்காலத்துக்கு ஏற்ற ஆட்டோமொபைல், மெக்கானிக்கல் படிப்புகள்

## ஆன்லைன் வழிகாட்டி நிகழ்ச்சியில் துறை வல்லுநர்கள் தகவல்

■ **சென்னை**

சிறப்பான எதிர்காலத்துக்கு ஏற்ற படிப்புகளாக ஆட்டோமொபைல், மெக்கானிக்கல் படிப்புகள் விளங்குகின்றன என்று 'இந்து தமிழ் திசை' நாளிதழ், அம்ரிதா விஷ்வ வித்யா பீடம் இணைந்து நடத்தும் 'உயர்வுக்கு உயர்கல்வி' ஆன்லைன் வழிகாட்டி நிகழ்ச்சியில் வல்லுநர்கள் தெரிவித்தனர்.

பிளஸ் 2 முடித்துள்ள மாணவர்கள் பயன்பெறும் வகையில், 'இந்து தமிழ் திசை' நாளிதழும், அம்ரிதா விஷ்வ வித்யாபீடமும் இணைந்து 'உயர்வுக்கு உயர்கல்வி' என்ற தொடர் நிகழ்ச்சியை ஆன்லைனில் நடத்துகின்றன. கடந்த 10-ம் தேதி தொடங்கிய இந்த நிகழ்ச்சி, இன்னும் 10 நாட்கள் நடக்க உள்ளது.

கடந்த 24-ம் தேதி நடந்த 7-வது நிகழ்வில் 'ஆட்டோமொபைல், மெக்கானிக்கல் படிப்புகள்' என்ற தலைப்பில் இத்துறை வல்லுநர்கள் பேசியதாவது:

**ஆந்திரா ஸ்ரீசிட்டியில் உள்ள அல்ஸ்ட்டம் (ALSTOM) குவாலிட்டி டைரக்டர் எஸ்.சண்முகசுந்தரம்:** பொறியியல் துறையின் ஒருங்கிணைந்த படிப்புகளாக மெக்கானிக்கல், சிவில், எலெக்ட்ரிக்கல் அண்ட் எலெக்ட்ரானிக்ஸ் படிப்புகள் விளங்குகின்றன. 'மெக்கானிக்கல் படித்தால் கடினமான வேலை செய்ய வேண்டும், சம்பளம் குறைவாக கிடைக்கும்' என்ற எண்ணம் தவறானது. இன்று அனைத்து பெரிய நிறுவனங்களிலும் மெக்கானிக்கல் படித்தவர்கள் நல்ல வேலையில் இருக்கின்றனர், அதிக சம்பளம் பெறுகின்றனர். முன்பு கம்பெனிகள் குறைவு. தற்போது மகேந்திரா, மாருதி, ஹோண்டா என பல நிறுவனங்கள் இருக்கின்றன. தென்னிந்தியாவில் கம்பெனிகள் தொடங்குவதற்கான சிறந்த மாநிலமாக தமிழகம் உள்ளது.

மெக்கானிக்கல் படிப்பை பொருத்தவரை மெகட்ரானிக்ஸ், ரோபோட்டிக்ஸ், நானோ டெக்னாலஜி, நியூ மெட்டீரியல், கம்ப்யூட்டர் எய்டட், ஜியோமெக்கானிக்கல் என பல நவீன படிப்புகளுடன் பெரிய துறையாக வளர்ந்துள்ளது. 4.0 எனப்படும் நவீன தொழில்நுட்ப வளர்ச்சியில், இந்த துறையிலும் நல்ல வளர்ச்சியும், அதிக தேவையும் ஏற்பட்டுள்ளது. மெக்கானிக்கல் படித்து வருபவர்களிடம் கம்பெனிகள் ஏராளமான புதிய கண்டுபிடிப்புகளை எதிர்பார்க்கின்றன. சிறப்பான எதிர்காலத்துக்கு ஏற்றதாக ஆட்டோமொபைல், மெக்கானிக்கல் படிப்புகள் உள்ளன.



▲ எஸ்.சண்முகசுந்தரம்



▲ எம்.ஜெய்குமார்



▲ பி.ஸ்ரீராம்

**சென்னை ஹிந்துஸ்தான் இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி & சயின்ஸ் பேராசிரியர் டாக்டர் எம்.ஜெய்குமார்:** பிளஸ் 2 முடித்த பிறகு என்ன படிக்க வேண்டும் என்பதை பெற்றோரோ, நண்பரோ தீர்மானிப்பதைவிட, தங்களுக்கான துறை எது என்பதை அந்த மாணவரே தேர்வு செய்ய வேண்டும். அப்போதுதான் அவர்களால் சிறப்பான எதிர்காலத்தை அடைய முடியும். ஒரு படிப்பை விரும்பி எடுத்தால் அதில் மாணவர்களின் ஆர்வமும், பிரச்சினை வந்தால் அதை சமாளிக்கும் திறனும், கூடுதல் ஈடுபாடும் உருவாகும். என்றைக்கும் சிறப்பான எவர்கிரீன் படிப்புகளாக ஆட்டோமொபைல், மெக்கானிக்கல் படிப்புகள் உள்ளன. கரோனா பெருந்தொற்று காலத்தில் கார் விற்பனை குறைந்தாலும், புதுப் புது கார்கள் தயாரிப்பில் கம்பெனிகள் முழு வீச்சில் ஈடுபட்டுள்ளன. முன்பைவிட கார்கள் தயாரிப்பு அதிகரித்துள்ளது.

இத்துறையில் தற்போது படிப்பதற்கான பல புதிய பாடங்கள் அதிக அளவில் உள்ளன. நிறைய சான்றிதழ் படிப்புகளும் உள்ளன. படிக்கும் கல்லூரிகளே மாணவர்களின் திறன் வளர்ப்புக்காக பல்வேறு கம்பெனிகளுக்கு அழைத்துச் செல்கின்றன. அங்குள்ள நிபுணர்களுடன் கலந்துரையாடச் செய்கின்றன. ஆண், பெண் பாகுபாடின்றி அனைவரும் இத்துறையில் படித்து, நல்ல வேலையில் சேர முடியும்.

**சென்னை கோகுல் ஆட்டோடெக் நிறுவன நிர்வாக இயக்குநர் பி.ஸ்ரீராம்:** வளர்ந்துவரும் நாடுகளில் ஒன்றான இந்தியாவில் இன்று மெக்கானிக்கல், ஆட்டோமொபைல் படிப்புகளுக்கான தேவையும், வேலை வாய்ப்பும் அதிகரித்துள்ளன. இன்ஜினீயரிங் டெக்னாலஜி வந்த பிறகு அடைந்துள்ள பெரிய வளர்ச்சியால் நாட்டில் தொழில் வளம் பெருகியுள்ளது. இந்த தொழில்நுட்பம் நமது பல பிரச்சினைகளுக்கு நல்ல தீர்வை தந்துள்ளது. இந்தியாவில் ஆட்டோமொபைல் துறைக்கு தேவையான உதிரி பாகங்கள் தயாரிப்பில் தமிழகத்தில் இருந்துதான் 30 சதவீத உதிரி பாகங்கள் தயாரிக்கப்படுகின்றன. சென்னை அம்பத்தூர் எஸ்டேட், கிண்டி எஸ்டேட் போன்றவற்றில் பல நூறு உதிரி பாகங்களின் தயாரிப்பு நிறுவனங்கள் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன.

இந்த படிப்பை படிக்கும்போது ஆர்வத்துடன் புரிந்து படிக்க வேண்டும். அப்போதுதான் புதுமையான கண்டுபிடிப்புகளை நம்மால் செய்ய முடியும். சிறு, குறு தொழில் செய்ய விரும்புவோருக்கு இத்துறை மிகவும் ஏற்றது. சிறு, குறு தொழில் முனைவோருக்கு மத்திய, மாநில அரசுகள் பல உதவிகளை வழங்குகின்றன. தவிர, புதுமையான சிந்தனையுடன், குறைந்த முதலீட்டில் செய்யப்படும் எந்த தயாரிப்புக்கும் மார்க்கெட்டில் நல்ல வரவேற்பு எப்போதும் உண்டு.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

ஆன்லைனில் நடந்த இந்த வழிகாட்டி நிகழ்ச்சியை 'இந்து தமிழ் திசை' நாளிதழின் முதுநிலை துணை ஆசிரியர் ம.சுசித்ரா நெறிப்படுத்தினார்.




### இணையத்தில் முழு நிகழ்வையும் காணலாம்

'உயர்வுக்கு உயர்கல்வி' நிகழ்ச்சியை சவீதா இன்ஜினீயரிங் காலேஜ், சென்னை இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி, ஸ்ரீஈஸ்வர் காலேஜ் ஆஃப் இன்ஜினீயரிங் ஆகியவை இணைந்து வழங்கின. இந்த நிகழ்வில் பங்கேற்கத் தவறியவர்கள் https://bit.ly/36ZIBR8https://bit.ly/3zzjDnE என்ற லிங்க் மூலம் முழு நிகழ்வையும் பார்க்கலாம். கடந்த 10-ம் தேதி தொடங்கிய இந்த நிகழ்ச்சி, இன்னும் 10 நாட்கள் நடக்க உள்ளது. இதில் பங்கேற்க விரும்புபவர்கள் https://bit.ly/3wxsbK6 என்ற லிங்க்கில் பதிவுசெய்து கொள்ளவும்.

## இந்து டாக்கீஸ் - திரை விமர்சனம்

# சார்பட்டா பரம்பரை



எழுபதுகளில், குத்துச் சண்டைப் போட்டிகளுக்கு புகழ்பெற்ற வடசென்னை. அங்கு, ஆங்கிலேயர்கள் உருவாக்கிய உத்திகளும் உள்வாங்கப்பட்ட 'ஆங்கில குத்துச் சண்டை'ப் போட்டிகள் நடக்கின்றன. அவற்றில் சார்பட்டா - இடியாப்ப பரம்பரையினர் இடியும், மின்னலுமாக மோதிக் கொள்கின்றனர். வெற்றி, தோல்விகளை, இரு தரப்பினரும் மானப் பிரச்சினையாகப் பார்க்கின்றனர். ஒரு போட்டியில், இடியாப்ப பரம்பரை வீரர் வேம்புலியிடம், சார்பட்டா பரம்பரை வீரரான மீரான் 'நாக் அவுட்' ஆகிறார். அப்போது, சார்பட்டா பரம்பரையின் குருவான ரங்கன் வாத்தியாரை எதிர் அணியினர் சீண்ட, அவர் சவால் விடுகிறார். அவரை மானசீக குருவாக ஏற்ற கபிலன், குருவின் சவாலை நிறைவேற்ற களம் காண்கிறான். அப்போது, எதிர்பாராத அரசியல் சூழ்நிலை ஏற்பட, கபிலன் பங்கேற்ற போட்டி தடைபடுகிறது. பிறகு கபிலன் வாழ்க்கையில் என்ன நடந்தது, சார்பட்டா பரம்பரையின் சவாலும், பெருமையும் என்ன ஆனது என்பது மீதிக் கதை.

கதை நடக்கும் கால கட்டத்தின் அரசியல், திரைக்கதையின் போக்கை தீர்மானிக்கும் முக்கிய கண்ணியாக பயன்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக, குத்துச் சண்டை போட்டிகளில் ஊடுருவியிருந்த இரு பெரிய திராவிடக் கட்சிகளின் அரசியல், கதாபாத்திரங்களின் வாழ்க்கையை எவ்வாறு பாதிக்கிறது என்பதை நுட்பமாகவும், துணிவாகவும் தங்கள் தேவைக்கேற்ப எடுத்தாண்டுள்ளனர் திரைக் கதையை இணைந்து எழுதியுள்ள பா.ரஞ்சித் - தமிழ் பிரபா.

மது உருவாக்கும் வாழ்க்கைச் சிதைவு, எத்தனை சிறந்த திறமையாளனையும் நடுத்தெருவுக்கு கொண்டுவந்துவிடும் என்பதை, சமூக அக்கறையுடன் இரண்டாம் பாதி முன்வைக்கிறது.

சாதி, மத வேறுபாடின்றி, பல சமூகங்களைச் சேர்ந்தவர்கள் வீரர்களாகவும் குத்துச் சண்டை சொல்லித்தரும் வாத்தியார்களாகவும் விளங்கியிருப்பது வடசென்னையின் குத்துச் சண்டை வரலாறு. அப்படியிருக்க, ஒடுக்கப்பட்ட மக்களே அதிகமும் புழங்கும் கதைக் களமாக சித்தரித்திருப்பதை இயக்குநர் தவிர்த்திருக்கலாம்.


ஒரு மாஸ் கதாநாயகனுக்காக சவால், இயல்பான கதைக் களத்தில் அமைந்துவிட்டபோதும், வணிகப் படங்களில் ஊதிப் பெருக்கும் நாயக பிம்பம்போல அல்லாமல், கபிலனை அவனது இயல்பிலேயே விட்ட இயக்குநர் ரஞ்சித்தை எவ்வளவு பாராட்டினாலும் தகும். கபிலன் எனும் முதன்மைக் கதாபாத்திரத்தை துலங்கச் செய்ய உருவாக்கப்பட்ட பல துணைக் கதாபாத்திரங்கள், காவிய முழுமையுடன் படைக்கப்பட்டிருப்பது இந்த படத்தை உயர்ந்த தரத்தில் வைத்து விடுகிறது.

'நான் கடவுள்', 'மகாமுனி' படங்களுக்குப் பிறகு கதாபாத்திரமாக உயர்வு பெறும் அரிய வாய்ப்பு, ஆர்யாவுக்கு அமைந்துவிட்டது. அதை உணர்ந்து, அவர் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறார். பசுபதி, கலையரசன், டான்ஸிங் ரோஸாக வரும் ஷபீர், வேம்புலியின் வாத்தியாராக வரும் ஜி.எம்.சுந்தர், டாடியாக வரும் ஜான் விஜய், மாரியம்மாவாக வரும் துஷாரா, கபிலனின் அம்மாவாக வரும் அனுபமா குமார் தொடங்கி உதிரிகளாக வரும் பூசாரி, குத்துச் சண்டை அறிவிப்பாளர் டைகர் கார்டன் தங்கமாக வரும் தங்கதுரை என ஒவ்வொரு வரும் கதாபாத்திரமாக மட்டுமே தெரிகிறார்கள்.

பின்னணி இசையில் பல இடங்களில், 'தி ஹேட்ஃபுல் எய்ட்' படத்துக்கு என்னியோ மாரிக்கோனி கொடுத்திருந்த டைட்டில் தீம் இசையின் சாயல். கதைக்குத் தேவையான அளவுக்கு கலை இயக்கத்தை கையாண்டுள்ளனர். குத்துச் சண்டையை அதற்குரிய நுட்பங்கள் எளிதாக வெளிப்படும் படி படமாக்கியிருக்கும் முரளி. ஜி.யின் ஒளிப்பதிவு, படத்துக்கு முதுகெலும்பு.

நேர்மையான வீரர்கள், கலையை ஆராதிக்கும் எளிய மக்களின் ஏகோபித்த ரசனை, பரம்பரை மானம் என்பதை சுய பகடிக்கு ஆளாக்குவது, காலகட்டத்தின் அரசியலை கச்சிதமாக கதையில் நுழைத்தது என ஆக்‌ஷனும் வாழ்க்கையும் கலந்த உணர்வுகளின் கலவை இந்த 'சார்பட்டா பரம்பரை'.

### இந்து டாக்கீஸ் கருத்து



## சினேகன் - கன்னிகா ரவி 29-ல் திருமணம்



பாடலாசிரியர் சினேகன், 2,500-க்கும் மேற்பட்ட திரைப்பட பாடல்களை எழுதியுள்ளார். மக்கள் நீதி மய்யம் கட்சியில் கமிட்டி உறுப்பினராக உள்ளார். இசையருவி தொலைக்காட்சியில் பல்வேறு நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கியவர் நடிகை கன்னிகா ரவி. சன் டிவியில் ஒளிபரப்பான 'கல்யாண வீடு' தொடர் வழியே பிரபலமானார். 'தேவராட்டம்' திரைப்படத்தில் முக்கிய கதாபாத்திரம் ஏற்று நடித்தார். இவர் நடித்துள்ள 'ராஜவம்சம்' திரைப்படம் வெளியீட்டுக்கு தயாராக உள்ளது. நண்பர்களாக அறிமுகமான சினேகன் - கன்னிகா ரவி இடையே சில ஆண்டுகளுக்கு முன்பு காதல் ஏற்பட்டது. இருவீட்டார் சம்மதத்துடன் இவர்களது திருமணம் வரும் 29-ம் தேதி சென்னையில் நடைபெற உள்ளது. திருமணத்தை மக்கள் நீதி மய்யம் கட்சித் தலைவர் கமல்ஹாசன் நடத்தி வைக்கிறார்.

## விஜய் ஆன்டனியின் 4 அவதாரம்

இசையமைப்பாளராக அறிமுகமாகி, நடிகர், தயாரிப்பாளராகவும் பல படங்களில் முத்திரை பதித்த விஜய் ஆன்டனி, 'பிச்சைக்காரன் 2' படம் வழியே இயக்குநராக களம் காண்கிறார். இதன் படப்பிடிப்பு சென்னையில் இன்று தொடங்குகிறது. இதுகுறித்து அவர் கூறும்போது, "இது நீண்டகால கனவு. இந்த புதிய அவதாரம் மகிழ்ச்சி அளிக்கிறது. அதிக செலவில் இப்படம் உருவாகிறது. இதை இயக்குவதோடு, நாயகன், இசையமைப்பு, எடிட்டிங் உள்ளிட்ட பணிகளையும் மேற்கொள்கிறேன். அடுத்தடுத்து ஜார்ஜியா உள்ளிட்ட இடங்களில் படப்பிடிப்பு நடக்க உள்ளது" என்றார்.



▲ சென்னையில் மாதவரம் - சிறுசேரி, மாதவரம் - சோழிங்கநல்லூர், பூந்தமல்லி - போரூர் - விவேகானந்தர் இல்லம் என 3 வழித்தடங்களில் 118 கி.மீ தூரத்துக்கான மெட்ரோ ரயில் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. கரோனா ஊரடங்கு தளர்வை தொடர்ந்து, போரூரில் மெட்ரோ ரயில் பணிகள் தற்போது தொடங்கி நடைபெற்று வருகின்றன. படம்: பு.க.பிரவீன்

தாம்பரம் - கூடுவாஞ்சேரி 3-வது பாதையில்

# அடுத்த மாதம் முதல் ரயில் சேவை தொடக்கம்

● பணிகள் நிறைவடைந்ததாக ரயில்வே அதிகாரிகள் தகவல்

■ சென்னை

தாம்பரம் - கூடுவாஞ்சேரி இடையே 3-வது புதிய பாதையில் அடுத்த மாதம் முதல் ரயில் சேவை தொடங்கும் என ரயில்வே அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சென்னை கடற்கரை - தாம்பரம் - செங்கல்பட்டு மார்க்கத்தில் தினமும் 280 மின்சார ரயில்கள் இயக்கப்படுகின்றன. இதில், 170 ரயில் சேவைகள் தாம்பரம் வரை மட்டுமே இயக்கப்படுகின்றன. மாநகரின் எல்லைப் பகுதிகள் விரிவடைந்துள்ளதால், மின்சார ரயில்களை செங்கல்பட்டு வரை அதிகரித்து இயக்கும் வகையில், தாம்பரம் - செங்கல்பட்டு இடையே சுமார் 30 கி.மீ தூரத்துக்கு 3-வது பாதை அமைக்கும் பணிகள் கடந்த 2016-ம் ஆண்டு முதல் நடைபெற்று வருகின்றன.

▼ ரயில்வே பாதுகாப்பு ஆணையர் கொண்ட குழுவினர் வந்து ஆய்வு செய்து, ஒப்புதல் அளிப்பார்கள். அதன்பிறகு, இந்த தடத்தில் ரயில் சேவையைத் தொடங்குவோம்.

ரூ.256 கோடியில் 3 கட்டமாக பணிகள் நடைபெற்று வருகின்றன. செங்கல்பட்டு - சிங்கப்பெருமாள் கோவில், சிங்கப்பெருமாள் கோவில் - கூடுவாஞ்சேரி வரை புதிய பாதை அமைக்கப்பட்டு, தற்போது இந்த தடத்தில் ரயில்களும் இயக்கப்பட்டு வருகின்றன. இதையடுத்து, கூடுவாஞ்சேரி - தாம்பரம் இடையே 3-வது புதிய பாதை பணிகள் இறுதி கட்டத்தை எட்டியுள்ளன.

இதுதொடர்பாக ரயில்வே அதிகாரிகளிடம் கேட்டபோது, "சென்னை புறநகர் பகுதியான தாம்பரத்தில் இருந்து செங்கல்பட்டு வரை, ரயில் போக்குவரத்து தேவை பல மடங்கு அதிகரித்துள்ளது. தாம்பரத்தில் இருந்து கூடுதல் ரயில்களை இயக்கும் வகையில் தாம்பரம் - செங்கல்பட்டு இடையேயான 3-வது புதிய ரயில் பாதையை அமைத்து வருகிறோம். இதில், கூடுவாஞ்சேரி - செங்கல்பட்டு வரை பணிகள் நிறைவு பெற்று, ரயில்களின் சேவையும் தொடங்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள முக்கிய இணைப்பு பணியான கூடுவாஞ்சேரி - தாம்பரம் இடையேயான ரயில் தண்டவாளம் அமைக்கும் பணிகளும் முடிந்துள்ளன. எஞ்சியுள்ள சில பணிகளை அடுத்த ஒரு வாரத்தில் நிறைவு செய்வோம். அதன்பிறகு, ரயில்வே பாதுகாப்பு ஆணையர் கொண்ட குழுவினர் வந்து ஆய்வு செய்து, ஒப்புதல் அளிப்பார்கள். அதன்பிறகு, இந்த தடத்தில் ரயில் சேவையைத் தொடங்குவோம். அடுத்த மாதம் இந்த தடத்தில் ரயில் சேவை தொடங்கும்போது, தாம்பரம் - செங்கல்பட்டு வரை கூடுதல் ரயில்களை இயக்க முடியும்" என்றனர்.

# வியாபாரிகளுக்கு புகையிலை ஒழிப்பு விழிப்புணர்வு பதாகைகள்

● வணிகர் சங்க பேரமைப்பு வழங்கியது

■ சென்னை

தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு சார்பில், அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் ஒழிப்பு விழிப்புணர்வு பதாகைகள், வியாபாரிகளுக்கு வழங்கப்பட்டன.

இது தொடர்பாக தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு வெளியிட்ட அறிக்கை:

தமிழகத்தில் மாவா, குட்கா, பான்பராக், கஞ்சா போன்ற புகையிலை பொருட்கள் மற்றும் போதைப் பொருட்கள் பயன்பாட்டை முற்றிலும் ஒழிக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. மக்களின் நலன் கருதி வணிகர் சங்கங்களின் பேரமைப்பும் மாநிலத்தில் உள்ள அனைத்து வணிகர்களுக்கும் இதுதொடர்பாக விழிப்புணர்வு கூட்டம் நடத்துவது என முடிவெடுத்துள்ளது.

அதன்படி சென்னை திருவல்லிக்கேணி வியாபாரிகள் சங்கம் சார்பில் நேற்று முன்தினம் புகையிலை மற்றும் போதைப் பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு கூட்டம் நடைபெற்றது. சங்கத் தலைவர் வி.பி.மணி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பேரமைப்பின் மாநிலத் தலைவர் ஏ.எம்.விக்கிரமராஜா, சென்னை மண்டல உணவு பாதுகாப்பு துறை நியமன அலுவலர் பி.சதீஷ்குமார், திருவல்லிக்கேணி காவல் சரக உதவி ஆணையர் பாஸ்கரன் ஆகியோர் பங்கேற்று, கடைகளில் பொதுமக்களுக்கு தெரியும் வகையில் வைப்பதற்காக தயாரிக்கப்பட்ட, தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்களை விற்பதில்லை என்ற விழிப்புணர்வு பதாகையை வெளியிட்டனர். அந்த விழிப்புணர்வு பதாகைகள் அனைத்து வணிகர்களுக்கும் வழங்கப்பட்டன.

இக்கூட்டத்தில், தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்களை அண்டை மாநிலங்களில் இருந்து தமிழகத்துக்கு கடத்தப்படும் முதல் நிலையிலேயே தடுக்கவும், கடத்தல்காரர்கள், மொத்த விநியோகஸ்தர்கள் மீது அரசு கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் பேரமைப்பின் மாநில பொருளாளர் ஹாஜி ஏ.எம்.சதக்கத்துல்லா, மாநில தலைமைச் செயலர் ஆர்.ராஜ்குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கூவம் ஆற்றின் முகத்துவாரத்தை

# ரூ.70 கோடியில் பராமரிக்க நடவடிக்கை

● சென்னை ஆறுகள் சீரமைப்பு அறக்கட்டளை தகவல்

■ சென்னை

கூவம் ஆற்றின் முகத்துவாரத்தை ரூ.70 கோடி செலவில் திறந்த நிலையில் பராமரிக்க நடவடிக்கை எடுத்து வருவதாக தேசிய பசுமை தீர்ப்பாயத்தில் சென்னை ஆறுகள் சீரமைப்பு அறக்கட்டளை தெரிவித்துள்ளது.



▲ நேப்பியர் பாலம் அருகே கூவம் ஆற்றின் முகத்துவாரப் பகுதியில் ஏற்பட்டுள்ள மணல் மேடால், ஆற்று நீர் கடலில் கலக்காமல் தேங்கியுள்ளது. (கோப்பு படம்)

சென்னை மாநகரப் பகுதியில் நுழையும் கூவம் ஆறு, பல்வேறு பகுதிகளில் மாசுபடுத்தப்படுவதால், சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. கூவம் ஆற்றின் முகத்துவாரம் கடல் மணலால் மூடப்பட்டுக் கிடப்பதால், கடல் அலைகள் கூவம் ஆற்றில் நுழைந்து அதன் தாக்கம் குறைக்கப்படுவதும் தடைபடுகிறது. இதனால் பல்வேறு இடங்களில் கடல் அரிப்பு ஏற்படுகிறது.

கடல் அலை கூவம் ஆற்றுக்குள் புகுந்து செல்லாததால், கூவம் ஆற்றில் உள்ள கழிவுநீர் ஒரே இடத்தில் நிலையாக தேங்கி, அவற்றில் கொசு உற்பத்தி அதிகமாகிறது. மீன்கள் உள்ளிட்ட நீர்வாழ் உயிரினங்கள் அவற்றில் வாழ முடியாமல், அவற்றை உண்ணும் விலங்குகளும் இல்லாமல், உயிர்ச் சங்கிலி உடைபட்டு சுற்றுச்சூழல் பாதிக்கப்படுகிறது. முகத்துவாரம் அடைபட்டு கிடப்பதால், மழைக் காலங்களில் மழைநீர் கடலுக்கு செல்லாமல் கரையோரப் பகுதிகளில் வெள்ள பாதிப்பு ஏற்படுகிறது.

இந்நிலையில் கூவம் ஆற்றை சீரமைக்கக் கோரி சென்னையை சேர்ந்த எட்வின் வில்சன் தொடர்ந்த வழக்கை, தேசிய பசுமை தீர்ப்பாயம் விசாரித்து வருகிறது. அண்மையில் நடைபெற்ற இந்த வழக்கின் விசாரணையின்போது சென்னை ஆறுகள் சீரமைப்பு அறக்கட்டளை தாக்கல் செய்த அறிக்கையில் கூறியிருப்பதாவது:

கூவம் ஆற்றின் முகத்துவாரத்தை திறந்த நிலையில் பராமரிப்பதற்காகவும், கடல் பரப்பிலிருந்து நேப்பியர் பாலம் வரை உள்ள 700 மீட்டர் நீள ஆற்றுப் பகுதியில் தூர்வாரவும் ரூ.70 கோடியில் பணிகள் மேற்கொள்ள அரசு நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது. அப்பகுதி கடலோர ஒழுங்குமுறை மண்டலப் விதிகளுக்கு உட்பட்ட பகுதியில் வருவதால், அது தொடர்பான அனுமதியும் பெறப்பட்டுள்ளது. இத்திட்டத்துக்கான கலந்தாலோசகர் நியமிக்கப்பட்டுள்ளார். பணிகளைத் தொடங்க அவர்களின் ஆய்வறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# அபராதமின்றி தொழில் உரிமம் புதுப்பிக்க டிசம்பர் வரை அவகாசம்

● சென்னை மாநகராட்சி உத்தரவு

■ சென்னை

சென்னை மாநகரப் பகுதியில் அபராதமின்றி தொழில் உரிமத்தைப் புதுப்பிக்க, வரும் டிசம்பர் 31-ம் தேதி வரை அவகாசத்தை நீட்டித்து மாநகராட்சி உத்தரவிட்டுள்ளது.

சென்னை மாநகராட்சிக்கு சொத்து வரி, தொழில் வரி மற்றும் தொழில் உரிமம் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் இருந்து ஆண்டுக்கு சுமார் ரூ.1,500 கோடிக்கு மேல் வருவாய் கிடைக்கிறது. இதில் சொத்து வரிக்கு அடுத்தபடியாக குறிப்பிடத்தகுந்த அளவில் தொழில் உரிமம் புதுப்பித்தல் மூலம் வருவாய் கிடைக்கிறது. சென்னை மாநகராட்சியில் இது வரை 73,665 பேர் தொழில் உரிமம் பெற்றுள்ளனர்.

வழக்கமாக தொழில் உரிமத்தை ஒவ்வொரு நிதியாண்டுக்குள் புதுப்பிக்க வேண்டும். ஏப்ரல் 1-ம் தேதிக்கு மேல் 30-ம் தேதிக்குள் புதுப்பிப்போருக்கு தொழில் உரிமக் கட்டணத்தில் 50 சதவீதம் அபராதமாக வசூலிக்கப்படும். மே 1-ம் தேதி முதல் புதுப்பிக்கப்படும் தொழில் உரிமங்களுக்கு 100 சதவீதம் அபராதம் விதிக்கப்படும். இந்த ஆண்டு மாநகராட்சி வருவாய் துறையினர் மார்ச் மாதம் தேர்தல் பணியில் ஈடுபட்டிருந்ததால், பொரும்பாலானோரின் தொழில் உரிமம் புதுப்பிக்கப்படவில்லை. அதனால் ஏப்ரல் 30-ம் தேதி வரை அபராதமின்றி தொழில் உரிமம் புதுப்பிக்க மாநகராட்சி அவகாசத்தை நீட்டித்திருந்தது.

ஏப்ரல் மாதத்திலும் கரோனா தடுப்பு பணிகளில் வருவாய்த் துறை அலுவலர்கள் ஈடுபடுத்தப்பட்டதால், தொழில் உரிம புதுப்பிப்பு பணிகள் பாதிக்கப்பட்டன. இதனிடையே, சிறு, குறு, நடுத்தர தொழில் நிறுவனங்களின் மாசுக் கட்டுப்பாட்டு வாரிய உரிமம், தீயணைப்புத் துறை அனுமதி உள்ளிட்டவை இந்த ஆண்டு டிசம்பர் மாதம் வரை செல்லும் என அரசு அறிவித்துள்ளது. இந்நிலையில் சென்னையில் தொழில் உரிமத்தை அபராதமின்றி புதுப்பிப்பதற்கான அவகாசத்தை டிசம்பர் 31-ம் தேதி வரை நீட்டித்து மாநகராட்சி உத்தரவிட்டுள்ளது.

சென்னை மாநகராட்சியில் ஏற்கெனவே 45,859 உரிமங்கள் புதுப்பிக்கப்பட்ட நிலையில், இந்த புதிய உத்தரவு மூலம், உரிமம் புதுப்பிக்காத 27,806 தொழில் நிறுவனங்கள் பயன்பெறும் என மாநகராட்சி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மெட்ரோ ரயில் நிலையங்களை இணைக்க

# சிறிய பேருந்துகளை இயக்க பயணிகள் வலியுறுத்தல்

■ சென்னை

மெட்ரோ ரயில் நிலையங்களை இணைக்கும் வகையில் சிறிய பேருந்துகளை இயக்க வேண்டுமென பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சென்னையில் தற்போது 2 தடங்களில் மொத்தம் 54 கி.மீ தூரத்துக்கு மெட்ரோ ரயில்கள் இயக்கப்பட்டு வருகின்றன. இதன்மூலம் விமான நிலையம், சென்னை சென்ட்ரல், எழும்பூர், கோயம்பேடு உள்ளிட்ட பகுதிகளுக்கு மக்கள் விரைவாகச் செல்ல முடிகிறது. இதனால் பயணிகளும் ஆர்வமாக மெட்ரோ ரயில்களில் பயணம் செய்து வருகின்றனர்.

கரோனா ஊரடங்கு தளர்வுக்குப் பிறகு பயணிகளின் தேவைக்கு ஏற்றார் போல மெட்ரோ ரயில்கள் அதிகரித்து இயக்கப்படுகின்றன. ஆனால் மெட்ரோ ரயில் நிலையங்களுக்கு பொதுமக்கள் வந்து செல்ல வசதியாக இணைப்பு வாகன சேவை மீண்டும் முழு அளவில் இல்லை என புகார் தெரிவிக்கின்றனர். குறிப்பாக போக்குவரத்து நெரிசல் அதிகமாக உள்ள வடசென்னை பகுதியில் போதிய அளவில் இணைப்பு வாகன வசதி இல்லாததால் பயணிகள் அவதிப்படுகின்றனர்.

இது தொடர்பாக பயணிகள் சிலர் கூறும்போது, "கரோனா ஊரடங்கு தளர்வுக்குப் பிறகு மக்கள் வழக்கம் போல் பயணம் செய்யத் தொடங்கி விட்டனர். பொது போக்குவரத்து வசதிகளும் தொடங்கப்பட்டுள்ளன. ஆனால், மெட்ரோ ரயில் நிலையங்களில் இருந்து முக்கிய நிறுவனங்கள், குடியிருப்புப் பகுதிகளை இணைக்கும் வகையில் சிறிய பேருந்துகளின் சேவை இல்லாததால், பயணிகள் வந்து செல்ல கஷ்டப்படுகின்றனர்.

எனவே, பயணிகளின் தேவையை கருத்தில் கொண்டு மாநகர போக்குவரத்துகழகம் சார்பில் போதிய அளவில் சிறிய பேருந்துகளை இயக்க வேண்டும். இதற்கான கால அட்டவணையும் அறிவித்தால் பயனுள்ளதாக இருக்கும்" என்றனர்.



▲ டெல்லி சென்றுள்ள அதிமுக ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம் நேற்றிரவு மத்திய இணையமைச்சர் எல்.முருகனை நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்தார். அருகில் ஓ.பி.ரவீந்திரநாத் எம்.பி.

# காங். பிற்படுத்தப்பட்டோர் பிரிவு பொதுச்செயலாளர் நியமனம்

■ சென்னை

காங்கிரஸ் பிற்படுத்தப்பட்டோர் பிரிவு மாநிலப் பொதுச்செயலாளராக கார்த்திகேயன் பலராமன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக தமிழக காங்கிரஸ் தலைவர் கே.எஸ்.அழகிரி நேற்று வெளியிட்ட அறிவிப்பில் கூறியிருப்பதாவது:

தமிழக காங்கிரஸ் பிற்படுத்தப்பட்டோர் பிரிவின் தலைவர் டி.ஏ.நவீன் பரிந்துரையின்பேரில், பிற்படுத்தப்பட்டோர் பிரிவின் மாநிலப் பொதுச்செயலாளராக வழக்கறிஞர் கார்த்திகேயன் பலராமன் நியமிக்கப்படுகிறார்.

இவ்வாறு கே.எஸ்.அழகிரி வெளியிட்ட அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

கரோனாவால் இறந்த மருத்துவர் சைமனின்

# உடல் தோண்டி எடுக்கப்பட்டு கீழ்ப்பாக்கத்தில் மறுஅடக்கம்

■ சென்னை

கடந்த ஆண்டு கரோனாவால் உயிரிழந்த மருத்துவர் சைமனின் உடல் தோண்டி எடுக்கப்பட்டு கீழ்ப்பாக்கம் கல்லறையில் மறுஅடக்கம் செய்யப்பட்டது.

சென்னை அமைந்தகரை பகுதியைச் சேர்ந்தவர் நரம்பியல் மருத்துவர் சைமன். இவர் கீழ்ப்பாக்கத்தில் தனியார் மருத்துவமனை நடத்தி வந்தார். கடந்த ஆண்டு கரோனாவால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தார். அப்போது இவரது உடலை அண்ணா நகரில் உள்ள வேலங்காடு சுடுகாட்டில் சுகாதாரத் துறை வழிகாட்டுதலின்படி அடக்கம் செய்ய சென்றபோது அங்கிருந்த பொதுமக்கள் கரோனாவால் இறந்த மருத்துவரின் உடலை இங்கு புதைக்கக் கூடாது என எதிர்ப்புத் தெரிவித்து கற்களை வீசி தகராறில் ஈடுபட்டனர். இந்த சம்பவம் பெரும் பரப்பரப்பை ஏற்படுத்தியது.

இது தொடர்பாக தகராறில் ஈடுபட்ட 20-க்கும் மேற்பட்டோரை கைது செய்தனர். காவல்துறை அவர்கள் மீது குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுத்தது. அதன் பிறகு மருத்துவரின் உடலை கீழ்ப்பாக்கம் கல்லறையில் அடக்கம் செய்ய போகும் போது அங்கு இருந்த டி.பி. சத்திரம் பகுதியைச் சேர்ந்த மக்கள் உடலை இங்கு அடக்கம் செய்ய கூடாது என்று எதிர்ப்பு தெரிவித்து சாலை மறியலில் ஈடுபட்டதால் மாநகராட்சி அதிகாரிகள் மருத்துவர் உடலை அடக்கம் செய்ய முடியவில்லை.

அதன் பிறகு போலீஸார் பாதுகாப்புடன் அவரது உடல் அண்ணாநகரில் உள்ள வேலங்காடு சுடுகாட்டில் அடக்கம் செய்யப்பட்டது. இதையடுத்து அவரது மனைவி ஆனந்தி கிறிஸ்தவ முறைப்படி தனது கணவரின் உடலை கீழ்ப்பாக்கம் கல்லறையில் புதைக்க வேண்டும் என சென்னை மாநகராட்சி அதிகாரியிடம் மனு அளித்தார். ஆனால் இந்த மனுவை பரிசீலித்த மாநகராட்சி ஆணையர் நிராகரித்து உத்தரவிட்டார்.

இந்த உத்தரவை ரத்து செய்யக்கோரி உயர் நீதிமன்றத்தில் ஆனந்தி வழக்கு தொடர்ந்தார். மருத்துவரின் உடலை கீழ்ப்பாக்கம் கல்லறையில் அடக்கம் செய்ய நீதிமன்றம் உத்தரவிட்டது. அதனடிப்படையில் நேற்று காலை சென்னை மாநகராட்சி அதிகாரிகள், சுகாதாரத் துறை அதிகாரிகள் முன்னிலையில் மருத்துவர் சைமன் உடல் புதைக்கப்பட்ட இடத்திலிருந்து தோண்டி எடுக்கப்பட்டது. கவச உடையணிந்து சென்று அவரது உடலை தோண்டி எடுத்து கிறிஸ்தவ முறைப்படி கீழ்ப்பாக்கம் கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டது. பலத்த போலீஸ் பாதுகாப்போடு இவை செய்யப்பட்டன.

சைமனின் மனைவி ஆனந்தி, அவரது மகன்கள் ஆண்டன், அசோக்குமார் ஆகியோர் முன்னிலையில் கிறிஸ்தவ முறைப்படியான சடங்குகள் நடத்தப்பட்டு கீழ்ப்பாக்கம் கல்லறை தோட்டத்தில் மருத்துவர் சைமனின் உடல் அடக்கம் செய்யப்பட்டது.


## ஆக்ஸில்ஸ் இந்தியா லிமிடெட்

CIN : U27209TN1981PLC008630

பதிவு பெற்ற அலுவலகம் : 21 பட்டுல்லாஸ் ரோடு, சென்னை 600 002.

இணையதளம் : www.axlesindia.com

### வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு

ஆக்ஸில்ஸ் இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் 39-வது வருடாந்திர பொதுக்கூட்டம் ஆகஸ்ட் 26, 2021 வியாழக்கிழமை அன்று இந்திய நேரப்படி காலை 10.30 மணிக்கு வீடியோ கான்பரன்ஸ் / இதர ஆடியோ விஷுவல் முறையில் நடைபெறும் என அறிவிக்கப்படுகிறது.

கோவிட்-19 உலக பரவல் காரணமாக ஏற்பட்டுள்ள பிரச்சினையில், கம்பெனியின் வருடாந்திர பொதுக்கூட்டம் வீடியோ கான்பரன்ஸ் / இதர ஆடியோ விஷுவல் முறையில் கார்ப்பரேட் விவகாரங்கள் துறை அமைச்சகத்தின் சுற்றறிக்கைகள் முறையே ஏப்ரல் 8, 2020, ஏப்ரல் 13, 2020, மே 5, 2020 மற்றும் ஜனவரி 13, 2021 அன்று வெளியிட்ட விதிமுறைகள்படி இந்த ஆண்டு பொதுக்கூட்டத்தில் வீடியோ கான்பரன்ஸ் / இதர ஆடியோ விஷுவல் முறையில் ஆஜராகி பங்கேற்கலாம்.

கார்ப்பரேட் விவகாரங்கள் துறை அமைச்சகத்தின் சுற்றறிக்கை எண். 20/2020, மே 5, 2020 தேதியிட்ட சுற்றறிக்கை மூலம் வழங்கப்பட்ட தளர்வுகளின்பேரில், 2020-21ம் நிதியாண்டுக்கான 39-வது வருடாந்திர பொதுக்கூட்ட நோட்டீஸ் மற்றும் வருடாந்திர அறிக்கை, ஜூலை 26, 2021 அன்று, கம்பெனி / டெபாசிட்டரி பங்கேற்பாளர்களிடம் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்த பங்குதாரர்களுக்கு, எலக்ட்ரானிக் வடிவத்தில் மட்டுமே அனுப்பப்படும். கம்பெனியின் நோட்டீஸ், 2020-21ம் ஆண்டுக்கான வருடாந்திர கணக்கு அறிக்கை ஆகியவை கம்பெனியின் இணையதளமான www.axlesindia.com-ல் பார்வையிடலாம். இந்த ஆண்டு பொதுக்கூட்டத்தில் உறுப்பினர்கள் வீடியோ கான்பரன்ஸ் / இதர ஆடியோ விஷுவல் முறையில் மட்டுமே பங்கேற்கலாம். ஆண்டு பொதுக்கூட்டத்தில் சேருவதற்கான குறிப்புகள் நோட்டீசில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வீடியோ கான்பரன்ஸ் / இதர ஆடியோ விஷுவல் முறையில் ஆஜராகி உள்ள உறுப்பினர்கள் எண்ணிக்கை 2013 கம்பெனிகள் சட்டம் பிரிவு 103ன் கீழ் 'கோரம்' காரணத்துக்காக கணக்கிடப்படும்.

கம்பெனிகள் சட்டம் 2013 பிரிவு 108ன்படி மற்றும் கம்பெனிகள் (நிர்வாகம் மற்றும் நிர்வாக முறை) 2014 விதிகள்படியும், கம்பெனியானது உறுப்பினர்களுக்கு எலக்ட்ரானிக் முறையில் வாக்களிக்கும் வசதியை (ரிமோட் இ-வாக்களிப்பு), சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட் (CDSL) மூலம் வழங்கி உள்ளது. கூடுதலாக எலக்ட்ரானிக் முறையில் வாக்களிக்க பொதுக்கூட்டத்தின்போது வசதி ஏற்படுத்தப்படும். ஏற்கனவே ரிமோட் இ-வாக்களிப்பு செய்யாதவர்கள் பொதுக்கூட்டத்தில் தங்களின் இ-வாக்கினை அளிக்கலாம். ரிமோட் இ-வாக்களிப்பு மற்றும் இ-வாக்களிப்பு நடைமுறை நோட்டீசில் குறிப்பிடப்பட்டு உள்ளது.

வாக்குப்பதிவிற்கான உரிமை பெறும் நாள், அதாவது ஆகஸ்ட் 18, 2021 அன்று டெபாசிட்டரிகளால் பராமரிக்கப்படும் பதிவேடு மற்றும் உறுப்பினர்களின் பதிவிலும் உள்ள அங்கத்தினர்கள், தொலைவில் இருந்து மின்னனு மூலமும், வருடாந்திர பொதுக்கூட்டத்திலும் வாக்களிக்கும் உரிமை பெற்றுள்ளனர். எந்த ஒரு நபரும் வருடாந்திர பொதுக்கூட்ட நோட்டீஸ் அனுப்பப்பட்டபின் ஆனால் வாக்களிக்க உரிமைபெறும் கடைசி நாளான ஆகஸ்ட் 18, 2021 தேதிக்கு முன் கம்பெனியின் பங்குகளை வாங்கி உறுப்பினரானால், helpdesk.evoting@cdslindia.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு விண்ணப்பம் செய்து உள்நுழைய அடையாள சொல் (login ID) மற்றும் கடவுச்சொல் (Password) ஆகியவற்றை கேட்டுப் பெறலாம் அல்லது பதிவாளர் மற்றும் பங்கு மாற்று பிரதிநிதியான கேமியோ கார்ப்பரேட் சர்வீசஸ் லிமிடெட், சுப்பிரமணியன் பில்டிங், எண்.1, கிளப் ஹவுஸ் ரோடு, சென்னை - 600 002 என்ற முகவரி மற்றும் தொலைபேசி எண் : +91 044 2846 0390 (5 lines); தொலை நகல் : +91 044 2846 0129; மின்னஞ்சல் முகவரி : investor@cameoindia.com ஆகியவற்றில் அணுகலாம்.

மின்னனு வாக்குப்பதிவு ஆகஸ்ட் 23, 2021 திங்கட்கிழமை காலை 9 மணிக்கு துவங்கி (IST) ஆகஸ்ட் 25, 2021 புதன்கிழமை மாலை 5 மணிக்கு (IST) அன்று முடிவடைகிறது. அதற்குப்பின் வாக்குப்பதிவு CDSLஆல் நிறுத்தப்படும். திரு. N ராமநாதன், கூட்டாளி, M/s.எஸ்.தனபால் & அசோசியேட்ஸ், ப்ராக்டிசிங் கம்பெனி செயலாளர்கள், தபால் வாக்கெடுப்பு மற்றும் மின்னனு வாக்குப்பதிவுக்கு செயல்முறை ஆராய்வாளராக நியமிக்கப்பட்டுள்ளார். தொலைவில் இருந்து மின்னனு முறையில் வாக்களித்த அங்கத்தினர்கள் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் பங்கு பெறலாம் ஆனால் அவர்கள் மறுபடியும் வாக்களிக்க முடியாது.

காகித வடிவில் பங்குகளை வைத்துள்ள உறுப்பினர்கள் மற்றும் கம்பெனி / டெபாசிட்டரியிடம் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்யாதவர்கள் கீழ்க்கண்ட ஆவணங்களின் ஸ்கேன் செய்யப்பட்ட நகல்களை நிறுவனத்தின் பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவர், அதாவது கேமியோ கார்ப்பரேட் சர்வீசஸ் லிமிடெட்டின் investor@cameoindia.com என்ற முகவரிக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பி வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பின் நகல்கள், 2020-21க்கான வருடாந்திர அறிக்கை மற்றும் மின்னனு வாக்குப்பதிவு உள்பட காணொளி காட்சி ("VC") மற்றும் இதர அங்கீகரிக்கப்பட்ட ஆடியோ விஷுவல் வழிமுறைகள் ("OAVM") மூலம் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் இணைவதற்கான விவரங்களை பெற்றுக் கொள்ளலாம் :

a. உங்களது பெயர், ஃபோலியோ எண், முழு முகவரி, பதிவு செய்ய வேண்டிய மின்னஞ்சல் முகவரியை குறிப்பிட்டு கையொப்பமிட்ட கோரிக்கை கடிதம்;

b. சுய சான்றளிக்கப்பட்ட நிரந்தர கணக்கு எண் (PAN); மற்றும்,

c. உறுப்பினரின் பதிவு செய்யப்பட்ட முகவரிக்காக ஓட்டுனர் உரிமை / பாஸ்போர்ட் / வாக்காளர் அடையாள அட்டை / ஆதார் ஆகியவற்றின் சுய சான்றளிக்கப்பட்ட நகல்கள் ஆகியவை.

டிமேட் வடிவில் பங்குகளை வைத்துள்ள உறுப்பினர்கள் தங்கள் மின்னஞ்சல் முகவரி / மின்னனு வங்கி பரிவர்த்தனை ஆகியவற்றை தங்கள் வைப்புத்தொகை பங்கேற்பாளர்களுடன் புதுப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இது சம்பந்தமாக ஏதேனும் விளக்கம் தேவைப்பட்டால், நீங்கள் திருமதி. R. கோமளவள்ளி, சீனியர் மேலாளர், கேமியோ கார்ப்பரேட் சர்வீசஸ் லிமிடெட் (தொலைபேசி எண். 044-28460395) தொடர்பு கொள்ளலாம்.

கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 91-ன்படி உறுப்பினர் பதிவேடு மற்றும் பங்கு மாற்றுப் புத்தகங்கள், 19.08.2021 வியாழக்கிழமை முதல் 26.08.2021 வியாழக்கிழமை வரை (இரு நாட்கள் உட்பட) மூடப்பட்டிருக்கும் என்று இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.

மின்னனு வாக்குப்பதிவு மீது சந்தேகம் மற்றும் குறைகள் இருந்தால் அவற்றை திருமதி. C. பாரதி, கம்பெனி செயலாளர், தொலைபேசி எண் 83740 22383 அல்லது கேமியோ காப்பரேட் சர்வீசஸ் லிமிடெட், தொலைபேசி எண் : (044) 28460390 – 395ல் தெரிவிக்கலாம். மின்னனு மூலம் வாக்களிப்போர் தங்கள் சந்தேகம் மற்றும் குறைகளை helpdesk.evoting@cdslindia.com-ல் தெரிவிக்கலாம்.

இயக்குநர்கள் குழுவின் உத்தரவுப்படி
S. ராம்
சேர்மன்
DIN 00018309

இடம் : சென்னை
தேதி : 26.07.2021

பொன்மொழி

அழகு என்றும் அஸ்தமிப்பதில்லை; அது மற்றொரு அழகில் ஐக்கியமாகி விடுகிறது.

- தாமஸ் பெய்லி

**இணையம்:** https://www.fishbase.in/ இணையதளத்தில் 34,700 வகையான மீன்கள் குறித்த விவரங்கள், 60 ஆயிரத்துக்கும் அதிகமான புகைப்படங்கள் உள்ளன. அறிவியல் பெயர், குடும்பம், நாடு, சூழல் அமைப்பு, பிராந்தியம் வாரியாக மீன்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

**பொதுஅறிவு:** அனைத்து விவசாயிகளுக்கும் பயிர் இன்சூரன்ஸ் வழங்கும் திட்டம் 'பிரதான் மந்திரி ஃபஸல் பீமா யோஜனா'. பழங்குடியினர் நலனுக்கான திட்டம் 'வனவந்து கல்யாண் யோஜனா'. கிராமங்களை பொருளாதார, சமூக நிலையில் உயர்த்தும் திட்டம் 'சியாம பிரசாத் முகர்ஜி ரூரல் மிஷன்'.

தனியார் மருத்துவமனைகளில் இலவச கரோனா தடுப்பூசி திட்டம்

# சென்னையில் வரும் 28-ம் தேதி முதல்வர் தொடங்கிவைக்கிறார்

● சுகாதாரத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்

■ சென்னை

முன்னாள் முதல்வர் கருணாநிதி பிறந்த நாளை முன்னிட்டு, சென்னை சைதாப்பேட்டையில் திமுக சார்பில் 5,300 பேருக்கு தலா ரூ.1,100 மதிப்பிலான மளிகைப் பொருட்கள் மற்றும் ஹாட்பாக்ஸ் ஆகியவற்றை அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கினார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

தற்போது கரோனா தொற்று பரவல் குறைந்துள்ளதால், திமுக சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் பணி மீண்டும் தொடங்கப்பட்டுள்ளது.

அதிமுக அரசு விலை குறைவான, தரமற்ற முகக்கவசங்கள் வாங்கி மக்களுக்கு அளித்தார்கள். அவற்றால் எந்த உபயோகமும் இல்லை. இதுகுறித்து விசாரணை நடைபெற்று வருகிறது.

### ரூ.5 கோடி நிதி

தொழில் நிறுவனங்களின் பெருநிறுவன சமூகப் பொறுப்பு நிதி (சிஎஸ்ஆர்) மூலம், தனியார் மருத்துவமனைகளில் பொதுமக்களுக்கு இலவசமாக கரோனா தடுப்பூசி போட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதுவரை ரூ.5 கோடிக்கும் அதிகமான நிதி கிடைத்துள்ளது.

இந்தியாவிலேயே முதல் முறையாக தமிழகத்தில்தான் இந்த திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. வரும் 28-ம் தேதி காலை சென்னை ஆழ்வார்பேட்டை காவேரி மருத்துவமனையில் இத்திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கிவைக்கிறார்.

இதேபோல, தமிழகம் முழுவதும் சிஎஸ்ஆர் நிதி மூலம் தனியார் மருத்துவமனைகளில் இலவச கரோனா தடுப்பூசி திட்டம் 29-ம் தேதி தொடங்க உள்ளது.

### மக்களைத் தேடி மருத்துவம்

தமிழகத்தில் விரைவில் 'மக்களைத் தேடி மருத்துவம்' திட்டம் தொடங்கப்பட உள்ளது. கேரளா, ஆந்திரா, கர்நாடகாவில் இருந்து தமிழகம் வருவோருக்கு பரிசோதனைகள் செய்யப்படுகின்றன.

அரசு மருத்துவர்கள் ஊதிய உயர்வு தொடர்பாக, அரசாணை 293, அரசாணை 354 ஆகிய இரண்டில் எது வேண்டுமென அவர்கள் முடிவு செய்ய செய்தபின், அந்த திட்டம் நிறைவேற்றப்படும். இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

தமிழகம் முழுவதும்

# அரசு கலை, அறிவியல் மற்றும் பொறியியல் கல்லூரிகளில் சேர இன்று முதல் ஆன்லைன் வாயிலாக விண்ணப்பிக்கலாம்

■ சென்னை

தமிழகம் முழுவதும் அரசு கலை, அறிவியல் கல்லூரிகள் மற்றும் பொறியியல் கல்லூரிகளில் சேர இன்று (ஜூலை 26) முதல் ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் கரோனா தொற்று காரணமாக கடந்த கல்வியாண்டில் பிளஸ் 2 பொதுத்தேர்வு ரத்து செய்யப்பட்டது.

இதையடுத்து, மாணவர்களின் எஸ்எஸ்எல்சி மதிப்பெண், பிளஸ் 1 பொதுத் தேர்வு மதிப்பெண், பிளஸ் 2 செய்முறைத் தேர்வு மற்றும் அகமதிப்பீடு அடிப்படையில் மதிப்பெண் கணக்கிடப்பட்டு, கடந்த 19-ம் தேதி பிளஸ் 2 தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டன. மாணவர்களுக்கு தற்காலிக மதிப்பெண் சான்றிதழ் கடந்த 22-ம் தேதி வழங்கப்பட்டது.

மருத்துவப் படிப்பு சேர்க்கைக்கான 'நீட்' தேர்வுக்கு ஆன்லைன் மூலம் விண்ணப்பங்கள் பெறப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், பொறியியல் மற்றும் அரசு கலை, அறிவியல் கல்லூரிகளில் சேர ஜூலை 26-ம் தேதி முதல் விண்ணப்பிக்கலாம் என்று உயர்கல்வித் துறை ஏற்கெனவே அறிவித்திருந்தது. அதன்படி ஆன்லைன் விண்ணப்பப் பதிவு இன்று தொடங்குகிறது.

இதுகுறித்து மாநில கல்லூரிக் கல்வி இயக்குநர் பூர்ணசந்திரன் நேற்று வெளியிட்ட அறிவிப்பில், "மாநிலம் முழுவதும் உள்ள 143 அரசு கலை, அறிவியல் கல்லூரிகளில் சேர ஜூலை 26-ம் தேதி முதல் (இன்று) முதல் ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம். www.tngasa.org & www.tngasa.in ஆகிய இணையதளங்களைப் பயன்படுத்தி, ஆகஸ்ட் 10-ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம்" என்று தெரிவித்துள்ளார்.

தனியார் கலை, அறிவியல் கல்லூரிகளில் ஏற்கெனவே விண்ணப்பப் பதிவு தொடங்கி, நடைபெற்று வருகிறது. மாணவர்களிடம் ஆன்லைன் மூலம் விண்ணப்பங்கள் பெறப்பட்டு வருகின்றன.

### 1.50 லட்சம் இடங்கள்

தமிழகம் முழுவதும் 500-க்கும் மேற்பட்ட பொறியியல் கல்லூரிகள் உள்ளன. இந்தக் கல்லூரிகளில் அரசு ஒதுக்கீட்டின் கீழ் சுமார் 1.50 லட்சம் இடங்கள் உள்ளன. இவை ஒற்றைச்சாளர முறையில் பொதுக் கலந்தாய்வு மூலம் நிரப்பப்படும்.

அந்த வகையில், நடப்பு கல்வியாண்டில் பிஇ, பி.டெக். படிப்புகளில் அரசு ஒதுக்கீட்டுப் பிரிவில் சேர இன்று முதல் ஆன்லைனில் (www.tneaonline.in) விண்ணப்பிக்கலாம் என்று மாநில தொழில்நுட்பக் கல்வி இயக்ககம் அறிவித்துள்ளது. ஆன்லைனில் விண்ணப்பிக்க ஆகஸ்ட் 24 கடைசி நாளாகும். விண்ணப்பித்த மாணவர்களுக்கு ஆகஸ்ட் 25-ல் ரேண்டம் எண் ஒதுக்கப்பட்டு, தரவரிசைப் பட்டியல் செப்டம்பர் 4-ல் வெளியிடப்பட உள்ளது.

### செப்.7-ல் கலந்தாய்வு தொடக்கம்

தொடர்ந்து, கல்லூரி மற்றும் பாடப் பிரிவை தேர்வு செய்வதற்கான கலந்தாய்வு செப்டம்பர் 7-ம் தேதி தொடங்கி அக்டோபர் 4-ம் தேதி முடிவடைகிறது. செப்டம்பர் 7 முதல் 11-ம் தேதி வரை சிறப்பு பிரிவினருக்கான (மாற்றுத் திறனாளிகள், முன்னாள் ராணுவத்தினரின் வாரிசுகள், விளையாட்டு வீரர்கள்) நேரடி கலந்தாய்வு நடைபெறும்.

பொதுப் பிரிவினருக்கான ஆன்லைன் கலந்தாய்வு செப்டம்பர் 14 முதல் அக்டோபர் 4-ம் தேதி வரை நடைபெறும் என்று தொழில்நுட்பக் கல்வி இயக்ககம் அறிவித்துள்ளது.

பாமக நிறுவனர் ராமதாஸின் 83-வது பிறந்த நாள்

# மோடி, அமித்ஷா, ஸ்டாலின், பழனிசாமி வாழ்த்து

■ சென்னை

பாமக நிறுவனர் ராமதாஸின் 83-வது பிறந்த நாளையொட்டி பிரதமர் மோடி, உள்துறை அமைச்சர் அமித்ஷா, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

ஏழைகளுக்கு உணவு அளித்தல், கட்சிக் கொடியேற்றி இனிப்பு வழங்குதல், மாணவர்களுக்கு பரிசு வழங்குதல் என பாமகவினர் நேற்று ராமதாஸ் பிறந்த நாளை விமரிசையாகக் கொண்டாடினர்.

நேற்று காலை பிரதமர் நரேந்திர மோடி தொலைபேசி மூலம் ராமதாஸை தொடர்புகொண்டு, பிறந்த நாள் வாழ்த்து தெரிவித்தார். அவரது உடல் நலம் குறித்து விசாரித்த பிரதமர், டெல்லிக்கு வரும்படி அழைப்பு விடுத்தார். மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவும் தொலைபேசியில் வாழ்த்துகளைத் தெரிவித்தார்.



தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தொலைபேசியில் வாழ்த்து தெரிவித்தார். அதை ஏற்றுக்கொண்ட ராமதாஸ், "உங்கள் தந்தை கருணாநிதி என்னுடன் நெருக்கமான நட்பு கொண்டிருந்தார். என்னைத் தவிர பிற்படுத்தப்பட்ட மக்களின் நலனுக்காகப் போராட வேறுயாரும் இல்லை என்று அனைவரிடமும் கூறுவார். பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களின் நலன்களுக்காக பல திட்டங்களை அவர் செயல்படுத்தினார். உங்கள் தந்தையின் அந்த இடத்தை நீங்கள் பிடிக்க வேண்டும்" என வாழ்த்தினார். அதற்கு முதல்வரும் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் ட்விட்டர் பதிவில், "இட ஒதுக்கீடு உள்ளிட்ட உரிமைகளுக்காகப் போராடி வரும் ராமதாஸ் நீண்ட காலம் நலமுடன் வாழ வாழ்த்துகிறேன்" என தெரிவித்துள்ளார்.

தெலங்கானா மற்றும் புதுவை ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜன், தொலைபேசியில் பிறந்த நாள் வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

அதிமுக இணை ஒருங்கிணைப்பாளர் மற்றும் சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி தொலைபேசியில் தொடர்பு கொண்டு பிறந்த நாள் வாழ்த்துகளைத் தெரிவித்து, எல்லா நலமும், வளமும் பெற்று தொடர்ந்து மக்களுக்கான அரசியல் தொண்டாற்ற வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதாக குறிப்பிட்டுள்ளார்.

பாஜக தமிழக தலைவர் கே.அண்ணாமலை ட்விட்டர் பதிவில், "காட்சிக்கு எளியவர். மனதால் வலியவர். எளியோரின் மருத்துவர். இளைஞர்களுக்கு வழிகாட்டும் பண்பாளர். தமிழக தேசிய ஜனநாயகக் கூட்டணியின் மூத்தவர். நம் மருத்துவர் ராமதாஸ் பிறந்த நாளில் வணங்குகிறேன்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதேபோல, மதிமுக பொதுச் செயலர் வைகோ, புதுவை சட்டப் பேரவைத் தலைவர் ஏம்பலம் செல்வம், அதிமுக ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம், தமிழக காங்கிரஸ் முன்னாள் தலைவர் மு.கிருஷ்ணசாமி, நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், சென்னை மாநகராட்சி முன்னாள் மேயர் சைதை துரைசாமி, மேல்மருவத்தூர் அருள்மிகு ஆதி பராசக்தி பீடம் கோ.ப.செந்தில், இதய சிகிச்சை நிபுணர் செங்கோட்டுவேலு முன்னாள் அமைச்சர்கள் எஸ்.பி.வேலுமணி, சி.விஜயபாஸ்கர் ஆகியோரும் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

# ஒடுக்கப்பட்ட மக்களுக்கான பாதுகாப்பை சட்டரீதியாக உறுதி செய்ய வேண்டும்

● மத்திய, மாநில அரசுகளுக்கு நல்லகண்ணு வலியுறுத்தல்

■ சென்னை

நாடு முழுவதும் தலித், மலைவாழ் மக்கள், சிறுபான்மை மக்கள் மீதான தாக்குதல்கள் குறித்து விவாதிப்பதற்கான கூட்டம் தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் சார்பில் சென்னை மயிலாப்பூரில் நேற்று நடைபெற்றது. அமைப்பின் மாநிலத் தலைவர் நல்லகண்ணு தலைமை வகித்துப் பேசியதாவது:

ஏராளமான சிந்தனையாளர்கள் கருத்து சொல்வது மற்றும் விமர்சனம் செய்யும் காரணத்தாலேயே வழக்கு பதிவு செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுகிறார்கள். இது ஜனநாயகத்தின் மீதான தாக்குதலாகும். தலித் மக்கள், பழங்குடியினர், சிறுபான்மையினர் ஆகியோர் மீதான அடக்குமுறைகள் நாடு முழுவதும் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு அதிகரித்துள்ளன. இதுதொடர்பாக நாடாளுமன்றத்தில் விவாதிக்க வேண்டும். ஒடுக்கப்பட்ட மக்களுக்கான பாதுகாப்பை, சட்டப்பூர்வமான உத்தரவாதங்களாக வழங்க வேண்டும்.



▲ சென்னை மயிலாப்பூரில் நேற்று நடைபெற்ற தமிழக ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்க மண்டலக் குழுக் கூட்டத்தில் பேசினார் அமைப்பின் மாநிலத் தலைவர் ஆர்.நல்லகண்ணு. படம்: க.ஸ்ரீபரத்

சென்னை ஐஐடியில் நிலவும் சாதியப் பாகுபாடுகள், பல்வேறு தனியார் நிறுவனங்களில் நிகழ்த்தப்படும் பெண்கள் மீதான தாக்குதல்கள், பாலியல் சீண்டல்கள் மிகவும் கண்டிக்கத்தக்கவை.

விவசாயத்தைப் பாதிக்கும் சட்டங்களை மத்திய அரசு திரும்பப் பெற வேண்டும். ஒடுக்கப்பட்ட மக்கள், ஏழைகளின் எதிர்பார்ப்புகளை தமிழக முதல்வர் நிறைவேற்ற வேண்டும். இவ்வாறு அவர் பேசினார். இதில் அமைப்பின் மாநிலப் பொதுச் செயலாளர் வீரபாண்டியன், மண்டலப் பொறுப்பாளர் எஸ்.கே.சிவா உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## தஞ்சாவூரில் ஆக.6-ல் அமமுக ஆர்ப்பாட்டம்

■ சென்னை

அமமுக தலைமைக் கழகம் நேற்று வெளியிட்ட அறிக்கை:

தமிழகத்தில் திமுக ஆட்சிக்கு வரும்போதெல்லாம் காவிரியிலும், அதன் துணை ஆறுகளிலும் அணைகள் கட்டுவதை வழக்கமாக வைத்திருக்கும் கர்நாடகா, இப்போது மேகதாட்டுவில் அணை கட்டியே தீருவோம் என்று அடம்பிடிக்கிறது.

இதைக் கண்டித்தும், மேகேதாட்டு அணை கட்டுவதை தடுத்து நிறுத்த மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும் அமமுக பொதுச் செயலர் டிடிவி.தினகரன் தலைமையில் ஆகஸ்ட் 6-ம் தேதி காலை தஞ்சாவூரில் ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

'இந்து தமிழ் திசை', எஸ்எஸ்விஎம் இன்ஸ்டிடியூசன்ஸ் நடத்தும்

# 'கலாமை கொண்டாடுவோம்' இணையவழி சிறப்பு கலந்துரையாடல்

● நாளை மாலை நடைபெறுகிறது

■ சென்னை

குடியரசு முன்னாள் தலைவர் அப்துல் கலாமின் 7-ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு 'இந்து தமிழ் திசை', எஸ்எஸ்விஎம் இன்ஸ்டிடியூசன்ஸ் இணைந்து நடத்தும் 'கலாமை கொண்டாடுவோம்' என்ற இணையவழி சிறப்பு கலந்துரையாடல் நிகழ்ச்சி நாளை (ஜூலை 27) மாலை 6 மணிக்கு நடைபெறுகிறது

எதிர்கால இந்தியாவை வளமானதாகவும். அறிவியல் சிந்தனையோடும் வளர்த்தெடுக்க விரும்பியவர் மறைந்த அப்துல் கலாம். இளைய தலைமுறையினரிடம் உரையாடும் போதெல்லாம் தொடர்ந்து இதை வலியுறுத்தி வந்தார். கலாமின் மறைவுக்குப் பின்னர், அவரது அறிவியல் சிந்தனைகளை இளைய தலைமுறையினரிடம் கொண்டுசேர்க்கும் வகையில் 'இந்து தமிழ் திசை' நாளிதழ் 'கலாமை கொண்டாடுவோம்' என்ற நிகழ்ச்சியை தொடர்ந்து நடத்தி வருகிறது.





▲ ஆ.சிவதாணுபிள்ளை



▲ வி.டில்லிபாபு

அந்த வகையில், நாளை மாலை 6 மணிக்கு 'கலாமை கொண்டாடுவோம்' எனும் இணையவழி கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெறுகிறது. இதில், பிரம்மோஸ் விண்வெளி நிறுவனத்தின் நிறுவனரும், விஞ்ஞானியுமான பத்மபூஷன் டாக்டர் ஆ.சிவதாணுபிள்ளை, தேசிய வடிவமைப்பு மற்றும் ஆராய்ச்சி மன்ற இயக்குநரும், ராணுவ விஞ்ஞானியுமான டாக்டர் வி.டில்லிபாபு ஆகியோர் கலந்துரையாட உள்ளனர்.

### கலாமுடனான அனுபவப் பகிர்வு

நவீன அறிவியல், தொழில்நுட்பத்தின் சிறப்பான பங்களிப்பு குறித்தும், அப்துல் கலாமோடு இணைந்து பணியாற்றிய அனுபவங்கள் குறித்தும் அவர்கள் பகிர்ந்துகொள்கின்றனர். இந்த நிகழ்ச்சியை எம்ஜிஆர் பல்கலைக்கழகமும் இணைந்து வழங்குகிறது.

இதில் பங்கேற்க விரும்புவோர் https://bit.ly/3wYWIWB என்ற லிங்க்-ல் இணைந்து பங்கேற்கலாம்.

சுற்றுலா செல்ல மக்கள் ஆர்வம்

# கூடுதல் ரயில்களை இயக்க தயாராகும் ஐஆர்சிடிசி

■ சென்னை

தமிழகத்தில் கரோனா ஊரடங்கு தளர்வுக்குப் பிறகு மக்கள் சுற்றுலா செல்ல ஆர்வம் காட்டி வருகின்றனர். எனவே, பல்வேறு சுற்றுலா பகுதிகளுக்குச் செல்லும் வகையில் சிறப்பு ரயில்களை இயக்க ஐஆர்சிடிசி தயாராகி வருகிறது.

இதுகுறித்து இந்திய ரயில்வே உணவு மற்றும் சுற்றுலாக் கழக அதிகாரிகள் (ஐஆர்சிடிசி) கூறியதாவது: நாடு முழுவதும் மாநில அரசுகள் பல்வேறு தளர்வுகளை அறிவித்துள்ளன.

அன்றாடப் பணி, வெளியூர்ப் பயணம் போன்றவை மேற்கொள்ளப்படுகின்றன. சுற்றுலாத் தலங்களும் படிப்படியாக திறந்து வருவதால், சுற்றுலா செல்ல மக்கள் விரும்புகின்றனர்.

எனவே, ஐஆர்சிடிசி சுற்றுலா ரயில்கள் மக்களின் தேவைக்கு ஏற்ப மீண்டும் இயக்கப்பட உள்ளன. பல்வேறு ஆன்மிக இடங்களுக்குச் செல்ல மக்கள் ஆர்வம் தெரிவித்துள்ள நிலையில், ஆடி அமாவாசை சிறப்பு சுற்றுலாவுக்கு இதுவரை 600-க்கும் மேற்பட்டோர் முன்பதிவு செய்துள்ளனர்.

இதேபோல, பிற இடங்கள் மற்றும் விமான சுற்றுலாவுக்கும் திட்டங்கள் தயாராகி வருகின்றன. விரைவில் திட்ட விவரங்கள் அறிவிக் கப்படும்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

# வங்கியிலிருந்து வருவது போன்ற போலி குறுஞ்செய்திகள்

● சைபர் க்ரைம் போலீஸார் எச்சரிக்கை

■ சென்னை

வங்கிகளிலிருந்து அனுப்புவது போன்று வரும் குறுஞ்செய்தியின் லிங்க்கை கிளிக் செய்து பணத்தை இழக்க வேண்டாம் என சைபர் க்ரைம் போலீஸார் எச்சரித்துள்ளனர்.

அண்மைக்காலமாக பலரது செல்போன்களுக்கு வங்கிகளிலிருந்து வருவதுபோல குறுஞ்செய்தி (எஸ்எம்எஸ்) வருகிறது. அதில், "அன்பான வாடிக்கையாளரே உங்களது வங்கிக் கணக்கு முடக்கப்பட்டுள்ளது. அதை புதுப்பித்துக் கொள்ள கேஒய்சி, பான் கார்டு, ஆதார்கார்டு உட்பட மேலும் சில விவரங்களை தெரிந்து கொள்ள இந்த லிங்க்கை (http://6328633cafe2.ngrok.io/bank) திறந்து பாருங்கள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

வங்கி வாடிக்கையாளர்கள் இதை உண்மை என்று நம்பி, லிங்க்கை கிளிக் செய்து விடுகின்றனர். அப்படிச் செய்தவுடன் தொடர்புடையவரின் வங்கி விவரம் மோசடிக்காரர்களின் கட்டுக்குள் சென்றுவிடுகிறது. 10 நிமிடங்களில் அவர்கள் ஆன்லைன் மூலமாக வங்கிக் கணக்கிலிருந்து பணப் பரிவர்த்தனை, பொருட்களை வாங்குவது, ஏடிஎம்மில் பணம் எடுப்பது உள்ளிட்ட பல்வேறு வகைகளில் மோசடி செய்து விடுகின்றனர். இதுபோல பல வங்கி வாடிக்கையாளர்கள் லட்சக்கணக்கான ரூபாயை இழந்துள்ளனர்.

எனவே, பொதுமக்கள் விழிப்புடன் இருந்து, வங்கியிலிருந்து வருவதுபோல லிங்க் எதுவும் செல்போனுக்கு வந்தால் கிளிக் செய்வதை அறவே தவிர்க்க வேண்டும். சந்தேகம் வந்தால் வாடிக்கையாளர்கள் தாங்கள் கணக்கு வைத்துள்ள வங்கிக்கு நேரில் சென்று விசாரிக்க வேண்டும் என்று சைபர் க்ரைம் போலீஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

## தலைமை காவலர்கள் குடும்பத்துக்கு ரூ.72.31 லட்சம் நிதி

■ சென்னை

தமிழக காவல் துறையில் 1999-ல் 3,500 காவலர்கள் தேர்வு செய்யப்பட்டனர். இவர்கள் தற்போது வெவ்வேறு மாவட்டங்களில் பணியாற்றி வருகின்றனர்.

இவர்களில், தலைமைக் காவலர்களான திருச்சி காந்தி, மதுரை சையது முகமது, சென்னை ஜீவானந்தம், நாராயணன், ஈரோடு ராமமூர்த்தி ஆகியோர் உடல்நலக் குறைவு உள்ளிட்ட காரணங்களால் உயிரிழந்தனர்.

இவர்களுக்கு உதவும் வகையில் 99 பேட்ச் காவலர்கள் 'உதவும் உறவுகள்' என்ற வாட்ஸ் அப் குழு அமைத்து, அதன் மூலம் நிதி திரட்டினர். அதன்படி, இதுவரை ரூ.72 லட்சத்து 31 ஆயிரத்து 740 சேகரித்து, அதை மரணமடைந்த காவலர்களின் குடும்பத்தினரிடம் ஒப்படைத்தனர். இதற்கு பல்வேறு தரப்பிலிருந்தும் பாராட்டுகள் குவிந்து வருகின்றன.

# டெல்டா வைரஸால் குழந்தைகளுக்கு ஆபத்தா?

பேராசிரியர் கலைமதி விளக்கம்

■ சென்னை

டெல்டா உருமாற்ற வைரஸால் குழந்தைகள் அதிகம் பாதிக்கப்படுவார்கள் என்பதற்கு முழுமையான ஆதாரங்கள் இல்லை என்று மருத்துவ ஆராய்ச்சியாளரும், பேராசிரியருமான கலைமதி கூறினார்.

பழம்பெரும் மலேசிய எழுத்தாளர் தமிழ்க்குயில் கலியபெருமாளின் மகள் கலைமதி, ஃப்ளோரிடா சர்வதேச பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக உள்ளார். மேலும், ஹெர்பர்ட் வெர்டெய்ம் மருத்துவக் கல்லூரியில் ஆராய்ச்சியாளராகவும் பணிபுரிகிறார்.

'இந்தியாவில் கோவிட்-19 தடுப்பூசிகள், மருந்துகள், கருப்பு பூஞ்சை நோய்' என்ற தலைப்பில் இணையவழியில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் கலைமதி பேசியதாவது:

தென்கிழக்கு ஆசிய நாடுகளில் கரோனா பரவல் அதிகரித்து வருகிறது. தென் அமெரிக்கா, இங்கிலாந்து, தென் ஆப்பிரிக்கா, ஸ்பெயின், மங்கோலியா, மலேசியா போன்ற நாடுகள் 'கரோனா ஹாட்ஸ்பாட்'-ஆக உள்ளன.

கரோனாவால் உலகம் முழுவதும் 41 லட்சத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். இதில் அமெரிக்கா, இந்தியா, பிரேசில் நாடுகள் முதல் 3 இடங்களில் உள்ளன. இந்தியாவில் கரோனா தொற்றால் பாதிக்கப்படும் 3,265 பேரில் ஒருவர் உயிரிழக்கிறார்.

இந்தியாவில் கோவாக்சின், கோவிஷீல்டு, மாடர்னா, ஸ்புட்னிக், ஆக்ஸ்ஃபோர்டு அஸ்ட்ராஜெனிக்கா ஆகிய 5 தடுப்பூசிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஒப்பீட்டு அளவில் மாடர்னா தடுப்பூசி சிறப்பாக செயல்படுகிறது.

டெல்டா வைரஸ், வழக்கமான வைரஸைவிட 6 மடங்கு வேகமாகப் பரவுகிறது. இத்தகைய உருமாற்ற வைரஸை எதிர்த்துப் போராட இஸ்ரேலில் ஊக்கத் தடுப்பூசி (பூஸ்டர்) செலுத்தப்படுகிறது.

இந்தியாவைப் பொறுத்தவரை டெல்டா வைரஸுக்கு எதிராக



▲ கலைமதி

கோவாக்சின் 2-வது தவணை தடுப்பூசி 65 சதவீதம் சிறப்பாக செயலாற்றுகிறது அஸ்ட்ராஜெனிகா 2-வது தடுப்பூசி 60 சதவீதமும், மாடர்னா தடுப்பூசி முதல் தவணையிலேயே 72 சதவீதமும் சிறப்பாக செயலாற்றுகிறது. 133 கோடி இந்திய மக்களில் 6.35 சதவீதம் பேர் மட்டுமே தடுப்பூசி போட்டுள்ளனர்.

கருப்பு பூஞ்சை என்பது 10 லட்சம் பேரில் ஒருவருக்கு ஏற்படும் அரிதான நோய் என்றாலும், இந்தியாவில் இந்த விகிதம் 80 சதவீதம் அதிகமாக உள்ளது. கருப்பு பூஞ்சையால் ஆண்களே (79 சதவீதம்) அதிகம் பாதிக்கப்படுகின்றனர்.

கரோனா குறித்து வாட்ஸ்அப் போன்ற சமூக ஊடகங்களில் வரும் அனைத்து தகவல்களையும் நம்ப வேண்டாம். டெல்டா உருமாற்ற வைரஸால் குழந்தைகள் அதிகம் பாதிக்கப்படுவார்கள் என்பதற்கு முறையான ஆய்வுகள், ஆதாரங்கள் இல்லை. எனவே, அதுபோன்ற செய்திகளை நம்ப வேண்டாம். எனினும் போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியம். இவ்வாறு அவர் கூறினார்.

பேராசிரியர் கலைமதியின் பேச்சை https://www.facebook.com/skcwebinar/videos/4691329510894389 தளத்தில் முழுமையாகக் காணலாம். இந்த நிகழ்ச்சியை, அமெரிக்க தேசிய அறிவியல் நிறுவன திட்ட இயக்குநரும், ஐஐடி குவாஹாட்டி கவுரவப் பேராசிரியருமான தீபங்கர் மேதி தொகுத்து வழங்கினார்.



▲ மீன்பிடி தடைக்காலம் முடிந்து மீனவர்கள் கடலில் மீன்பிடிக்க தொடங்கி உள்ள நிலையில், வேறு இடத்திலிருந்து காசிமேடு பகுதிக்கு வாகனத்தில் கொண்டு செல்லப்படும் மீன்பிடி படகு. படம்: எம்.முத்துகணேஷ்

## மின்சாரம் பாய்ந்து ஒருவர் உயிரிழப்பு

■ திருவள்ளூர்

திருவள்ளூர் மாவட்டம், ஆர்.கே.பேட்டையை அடுத்த வங்கனூர் கிராமத்தைச் சேர்ந்தவர் மண்ணப்பன் (50). நெசவுத் தொழிலாளியான இவர் நேற்று அதிகாலையில் வயல்வெளியில் நடந்து சென்றார்.

அப்போது, அப்பகுதியில் நேற்று முன்தினம் இரவு பெய்த மழையால் தேங்கிக் கிடந்த தண்ணீரில் அறுந்து கிடந்த மின்கம்பியை கவனிக்காமல் மிதித்து விட்டார். இதனால், மின்சாரம் பாய்ந்து மண்ணப்பன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இதுகுறித்து தகவல் அறிந்த ஆர்.கே.பேட்டை போலீஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று மண்ணப்பன் சடலத்தை மீட்டு பிரேதப் பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். மேலும், இதுகுறித்து வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# 320 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா

● நகர நிலவரி திட்டத்தின்கீழ் அமைச்சர் நாசர் வழங்கினார்

■ திருவள்ளூர்

ஆவடியை அடுத்த பருத்திப்பட்டில் நகர நில வரிதிட்டத்தின் கீழ் மொத்தம் 320 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்களை பால்வளத் துறை அமைச்சர் சா.மு.நாசர் நேற்று வழங்கினார்.

பின்னர், அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

'உங்கள் தொகுதியில் ஸ்டாலின்' திட்டத்தின்கீழ், இலவச பட்டா வழங்கக் கோரி, தமிழக முதல்வரிடம் பொதுமக்கள் மனுக்களை அளித்தனர். அதன்படி, ஆவடி மாநகராட்சிக்கு உட்பட்ட பருத்திப்பட்டு ஊராட்சியில் 320 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. வரும் காலங்களில் ஆவடி வட்டத்தில் உள்ள அனைத்து கிராமங்கள், வார்டுகளுக்கும், பட்டாக்களை வாரந்தோறும் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அமைச்சர் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் நகர நிலவரி தனிவட்டாட்சியர் வில்சன், ஆவடி வட்டாட்சியர் செல்வம், அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



▲ பருத்திப்பட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பயனாளிக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குகிறார் அமைச்சர் சா.மு.நாசர்.

# பிளஸ் 2 துணை தேர்வுக்கு விண்ணப்பிக்கலாம்

● கல்வித் துறை அறிவுறுத்தல்

■ செங்கல்பட்டு

செங்கல்பட்டு மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் ஆஞ்சிலோ இருதயசாமி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: கடந்த 2020-21-ம் கல்வி ஆண்டில் பிளஸ் 2 படித்த மாணவர்களுக்கு தேர்வு முடிவுகள் அண்மையில் வெளியிடப்பட்டன. இதில் மதிப்பெண் குறைவாக உள்ளதாகக் கருதும் மாணவர்கள் விரும்பினால் பிளஸ் 2 எழுத்துத் தேர்வு எழுதலாம் என அரசு அறிவித்துள்ளது.

இம்மாணவர்கள் வரும் 27-ம் தேதி வரை காலை 10:00 மணி முதல் மாலை 5:45 மணிக்குள் செங்கல்பட்டு அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, செங்கல்பட்டு தூய கொலம்பா மேல்நிலைப் பள்ளி, மதுராந்தகம் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, சோழிங்கநல்லூர் அரசினர் மேல்நிலைப் பள்ளி, பல்லாவரம் தூய செபாஸ்டியன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி ஆகிய அரசு தேர்வுத் துறை சேவைமையங்கள் மூலம் விண்ணப்பிக்கலாம்.

மாணவர்கள் கட்டாயம் தங்களுக்குரிய அனைத்து பாடத் தேர்வுகளையும் எழுத வேண்டும். தற்போது எழுதவுள்ள தேர்வில் பெறப்படும் மதிப்பெண்களே இறுதியானது.

# மாணவிக்கு தனியார் பள்ளியில் அனுமதி மறுப்பு

● மக்கள் நீதிமன்றத்தின் சமரச முயற்சியால் மீண்டும் சேர்ப்பு

■ திருவள்ளூர்

பள்ளி கட்டணம் செலுத்தாத காரணத்தால் பிரபல தனியார் பள்ளிக்குள் அனுமதிக்கப்படாத மாணவி நிரந்தர மக்கள் நீதிமன்றத்தின் சமரச முயற்சியினால் மீண்டும் அனுமதிக்கப்பட்டார்.

திருவள்ளூர் நிரந்தர மக்கள் நீதிமன்றத்தில், மனுதாரர் ஒருவர் மனு அளித்தார். அதில், "எனது பேத்தி திருவள்ளூர் மாவட்டத்தில் இயங்கி வரும் பிரபல தனியார் பள்ளியில் 12-ம் வகுப்பில் பயின்று வந்தார். கரோனா பேரிடரால் பள்ளி மூடப்பட்டதில் இருந்து ஆன்லைன் வகுப்பில் பயின்று வந்தார். திடீரென்று, ஒருநாள் எனது பேத்தியை ஆன்லைன் வகுப்பில் இருந்து நீக்கிவிட்டனர்.

இது தொடர்பாக பள்ளி நிர்வாகத்திடம் விசாரித்ததில் பள்ளிக் கட்டணம் செலுத்தாததால் பேத்தியை நீக்கி விட்டதாக தெரிவித்தனர். இதனால் எனது பேத்தியின் எதிர்காலம் பாதிக்கப்படும். என்னுடைய அரவணைப்பில்தான் என் பேத்தி இருக்கிறார். நான் ஓய்வுபெற்ற ஆசிரியர். எனது ஓய்வுக்கால பணப் பலன்கள் வருவதற்கு காலதாமதம் ஆவதால், பள்ளி கட்டணம் செலுத்த இயலவில்லை" என மனுவில் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக, பள்ளி நிர்வாகத்தின் சார்பில் முதல்வர், மற்றும் சம்பந்தப்பட்ட மாவட்ட கல்வி அலுவலர் மற்றும் மனுதாரர் ஆகியோர் திருவள்ளூர், நிரந்தர மக்கள் நீதிமன்ற மாவட்ட நீதிபதி முன்பு ஆஜராகினர். மக்கள் நீதிமன்றத்தின் சமரச முயற்சியினால் பள்ளி நிர்வாகம் மாணவியை உடனடியாக பள்ளியில் சேர்ப்பதாகவும், பள்ளிக் கட்டணம் செலுத்த அவகாசம் தருவதாகவும் ஒப்புக் கொள்ளப்பட்டது.

இதேபோல், மின் விளக்கு வசதி, சாலை வசதி மற்றும் மேல்நிலை நீர் தேக்கத் தொட்டி வேண்டி மனுக்கள் பூண்டி ஒன்றியம், குன்னவாசல் அஞ்சல், காந்தி கிராம மக்களிடமிருந்தும் மற்றும் பேருந்து வசதி வேண்டி சென்றான்பாளையம் பஞ்சாயத்து மற்றும் ஊத்துக்கோட்டை வெங்கடாபுரம் கிராம பொதுமக்களிடமிருந்தும், பேருந்து நிறுத்தம் வேண்டி திருத்தணி குன்னத்தூர் கிராம பொதுமக்களிடமிருந்தும் மனுக்கள் பெறப்பட்டன. தற்போது மனுக்கள் மீதான விசாரணை நிலுவையில் உள்ளது.

(C) KSL Media Ltd.

**FORM B**

**பொது அறிவிப்பு**

இந்திய நொடிந்த நிலை மற்றும் திவால் நிலை வாரியம், (இன்சால்வன்சி தீர்வு நடைமுறைகள்) ஒழுங்கு விதிகள் 2016, ஒழுங்கு விதி 12-ன் கீழ்

**"Nazar International P Ltd."-ன் நிறுவன பாத்தியதாரர்களின் (Stakeholders) கவனத்திற்கு**

| எண் | முக்கிய விபரங்கள் | |
|---|---|---|
| 1. | கடன் பெற்ற கார்ப்போரேட் நிறுவனம் | Nazar International P Ltd. |
| 2. | கடன் பெற்ற கார்ப்போரேட் நிறுவனம் நிறுவப்பட்ட தேதி | 27.02.2001 |
| 3. | அதிகார அமைப்பு | கம்பெனி பதிவாளர், சென்னை |
| 4. | CIN எண். | U52324TN2001PTC046708 |
| 5. | கடன் பெற்ற கார்ப்போரேட் நிறுவனத்தின் முகவரி | 7/A, E.K.குரு தெரு, பெரியமேடு, சென்னை-600 003. |
| 6. | இன்சால்வன்சி தீர்வு நடைமுறை முடிவுறும் தேதி | 31.03.2021 |
| 7. | கடன் பெற்ற கார்ப்போரேட் நிறுவனத்தின் கலைப்பு தொடங்கும் தேதி | 20.07.2021 |
| 8. | திவால் தொழில்முறையின் கலைப்பு அதிகாரியின் பெயர் & பதிவு எண். | ராமசந்திரன் சுப்ரமணியன் IBBI/IPA-001/IP/P-01440/2018-19/12136 |
| 9. | தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி | பழைய எண்.29, புதிய எண்.52, ராஜு நாயக்கன் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை - 33. subraman267@yahoo.com |
| 10. | திவால் தொழில்முறையின் கலைப்பு அதிகாரியின் முகவரி & மின்னஞ்சல் | பழைய எண்.29, ராஜு நாயக்கன் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை - 33. subraman267@yahoo.com |
| 11. | கோரிக்கைகளை சமர்ப்பிக்க இறுதி தேதி | 20.08.2021 |

மாண்புமிகு தேசிய கம்பெனி சட்ட தீர்ப்பாயம் (NCLT), சென்னை தனது ஆணை மூலம் குறியீட்டின் பிரிவு 33-ன் கீழ் 20.07.2021 அன்று Nazar International P Ltd. நிறுவனத்திற்கு நிறுவன கலைப்பு நடைமுறைகளை துவக்க உத்தரவிட்டுள்ளது, என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

எனவே Nazar International P Ltd நிறுவனத்திற்கு பாத்தியதாரர்கள் தங்களது கோரிக்கைகளுக்கான ஆதாரங்களை 20.08.2021 அன்று அல்லது அதற்கு முன்னர் மேற்படி வ.எண்.10-ல் காணும் முகவரியில் உள்ள கலைப்பலுவலரிடம் சமர்பிக்குமாறு இதன் மூலம் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

நிதிக்கடன் வழங்கியவர்கள் தங்களது கோரிக்கை ஆதாரங்களை மின்னணு முறையில் மட்டும் சமர்ப்பிக்க வேண்டும். கடன் வழங்கிய மற்றவர்கள் அனைவரும் தங்களது கோரிக்கை ஆதாரங்களை நேரில், அஞ்சலில் (அல்லது) மின்னணு முறையில் சமர்ப்பிக்கலாம்.

பொய்யான அல்லது திசைத்திருப்ப கூடிய கோரிக்கைக்கான ஆதாரங்களை சமர்ப்பித்தால் அது அபராதம் / தண்டனைக்கு வழிவகுக்கும்.

தேதி : 25.07.2021
இடம் : சென்னை

கலைப்பு அதிகாரியின் பெயர் & கையொப்பம்
ராமசந்திரன் சுப்ரமணியன்



▸▸ தி.நகர் எல்.கே.எஸ். கோல்டு ஹவுஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் அக்பர் ஷா, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினை சந்தித்து கரோனா நிவாரண பணிக்காக முதல்வர் பொது நிவாரண நிதிக்கு ரூ.25 லட்சத்துக்கான காசோலையை வழங்கினார். உடன் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தி.நகர் ஸ்ரீராம்.

செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில்

# பெண்ணுக்கு பாலியல் தொந்தரவு கொடுத்த கட்டிட மேஸ்திரி கைது

■ செங்கல்பட்டு

செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் பெண்ணுக்கு பாலியல் தொந்தரவு கொடுத்த கட்டிட மேஸ்திரியை போலீஸார் கைது செய்தனர்.

செங்கல்பட்டு அருகே பள்ளிஅகரம் பகுதியைச் சேர்ந்தவர் பிரியா ராணி(30) (பெயர் மாற்றப்பட்டுள்ளது). இவரது குழந்தைக்குஉடல்நிலை சரியில்லாததால் செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்துள்ளனர்.

இந்நிலையில் நேற்று காலை குழந்தைகள் நலப்பிரிவு வார்டு அருகே கழிப்பறைக்குச் சென்றபோது, அங்கு தனியார் ஒப்பந்த ஊழியர் சுரேந்தர் (41) கட்டிட பணிகளை கவனித்து வந்தார். அப்போது பிரியா ராணியை பார்த்தவுடன் அவரது கைக்குழந்தையை பிடித்து வைத்துக் கொண்டு அவருக்கு பாலியல் தொந்தரவு செய்துள்ளார். மேலும் தனக்கு இணங்கவில்லை எனில் குழந்தையை கொலை செய்து விடுவதாக மிரட்டியுள்ளார். இதனால், ஆத்திரமடைந்த அந்த பெண் சுரேந்தரைத் தாக்கிவிட்டு, அவரிடமிருந்து குழந்தையை மீட்டு அங்கிருந்து தப்பினார்.

மேலும் அந்த பெண்ணின் சத்தத்தை கேட்டு அங்கிருந்த நோயாளிகளின் உறவினர்கள் சுரேந்தரை, தாக்கினர். இதில் அங்கிருந்து சுரேந்தர் தப்பி ஓடினார். இதுதொடர்பாக செங்கல்பட்டு நகர காவல் நிலையத்தில் அளித்த புகாரின் பேரில் போலீஸார் வழக்குப் பதிவு செய்து குற்றவாளிகளை கைது செய்தனர். இந்த சம்பவத்தால் மருத்துவமனையில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

மருத்துவமனையில் குழந்தைகள், பெண்கள் வார்டுகள் அருகே தனியார் ஒப்பந்த ஊழியர்களை பணியில் ஈடுபடுத்தக் கூடாது என்றும், முறையாக அவர்களை ஆய்வுக்கு உட்படுத்திய பின் பணியமர்த்தவும் கோரிக்கை எழுந்துள்ளது.



▸▸ இந்துஸ்தான் பெட்ரோலியம் நிறுவனத்தின் (எச்பி) 'பவர்' பெட்ரோல் விற்பனையை ஊக்குவிக்கும் வகையில் பெட்ரோல் பங்க்குகளில் ரூ.200-க்கு பவர் பெட்ரோல் போடும் இருசக்கர வாகன வாடிக்கையாளர்களுக்கும், ரூ.500-க்கு பவர் பெட்ரோல் போடும் 4 சக்கர வாகன வாடிக்கையாளர்களுக்கும் பழரசம் இலவசமாக வழங்கப்பட்டது. எச்பி நிறுவனத்தின் பாந்தியன் சாலை பங்க்கில் துணைப் பொதுமேலாளர் ஸ்ரீதர் புலே, சைதாப்பேட்டையில் உள்ள பங்க்கில் துணைப் பொதுமேலாளர் என்.ராதிகா ஆகியோர் இந்நிகழ்ச்சியை தொடங்கிவைத்தனர்.




## ஜெனரேட்டர் திருட்டு 2 பேர் கைது

■ திருவள்ளூர்

மீஞ்சூரை அடுத்த ஊரணம்பேடு பகுதியில் வடசென்னை அனல்மின் நிலையத்தின் 4-வது நிலைய கட்டுமானப் பணி நடந்து வருகிறது. இங்கு விமல் என்பவர் ஒப்பந்ததாரராக உள்ளார்.

கடந்த ஒரு வாரத்துக்கு முன்பு அங்கிருந்த ரூ.8 லட்சம் மதிப்பிலான ஜெனரேட்டர் திருடுபோனது. இதுகுறித்து, காட்டூர் போலீஸில் விமல் புகார் அளித்தார். போலீஸார் விசாரணை நடத்தி அத்திப்பட்டு, நேரு நகரை சேர்ந்த ஜெயசூர்யா, காந்தி நகரை சேர்ந்த சூர்யா ஆகியோரை கைது செய்து, அவர்களிடம் இருந்த ஜெனரேட்டரை பறிமுதல் செய்தனர்.

மேலும், இந்த சம்பவத்துக்கு உடந்தையாக இருந்த அமிர்தராஜ், வினோத் ஆகிய இருவரை போலீஸார் தேடி வருகின்றனர்.

இந்து தமிழ் திசை

**பொறுப்பல்ல:** இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித்தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

**ஆக்ஸில்ஸ் இந்தியா லிமிடெட்**

CIN : U27209TN1981PLC008630
பதிவு அலுவலகம்: 21 பட்டுல்லாஸ் ரோடு, சென்னை 600 002. இணையதளம்: www.axlesindia.com

**பங்குதாரர்களுக்கான அறிவிப்பு**

(கம்பெனியின் சமபங்குகளை முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு ஆணையத்தின் கணக்கிற்கு கட்டாயமாக மாற்றுதல்)

கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 124(6) மற்றும் 2016ம் வருடத்தைய முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு ஆணையம் (கணக்கு, தணிக்கை மாற்றம் மற்றும் திருப்பி அளித்தல்), இவை சம்பந்தமான சுற்றறிக்கைகள் மற்றும் அவ்வப்போது மாற்றப்பட்ட விதிகளின்படி இந்த அறிவிப்பு வெளியிடப்படுகிறது. மேற்கண்ட விதிகளின்படி தொடர்ந்து ஏழு ஆண்டுகளுக்கு பங்கு ஆதாயத் தொகை வழங்கப்படாத அல்லது கோரப்படாத பங்குதாரர்களின் பங்குகளை முதலீட்டாளர்களின் கல்வி மற்றும் பாதுகாப்பு ஆணையத்திற்கு கட்டாயமாக மாற்றப்பட உள்ளது.

முதலீட்டாளர்களின் கல்வி மற்றும் பாதுகாப்பு ஆணையத்திற்கு மாற்றப்பட வேண்டிய அடுத்த கடைசி நாள் அன்று, அதாவது அக்டோபர் 28, 2021 அன்று வரை தொடர்ந்து ஏழு ஆண்டுகளாக பங்கு ஆதாயத் தொகை வழங்கப்படாமல் அல்லது கோரப்படாமல் இருக்கும் பங்குகள் வைத்திருக்கும் பங்குதாரர்களுக்கு அதுபற்றி தனித்தனியாக அறிவிப்புகள் அனுப்பப்பட்டுள்ளது. அத்தகைய பங்குதாரர்களின் Folio No அல்லது DP மற்றும் Client ID மற்றும் மாற்றப்பட வேண்டிய பங்குகளின் எண்ணிக்கை ஆகியவற்றை கம்பெனியின் இணையதளம் www.axlesindia.com-ன் இன்வெஸ்டார் செக்ஷனில் காணலாம்.

சம்மந்தப்பட்ட பங்குதாரர்கள் தங்கள் வசமுள்ள பங்குகளுக்கான கோரப்படாத பங்கு ஆதாயங்களை மீண்டும் கோரிப்பெற கம்பெனியின் பதிவாளர் மற்றும் பங்கு மாற்றுப் பிரதிநிதிகள், கேமியோ கார்ப்பரேட் சர்வீசஸ் லிமிடெட், சுப்ரமணியம் பில்டிங்ஸ், எண்.1, கிளப் ஹவுஸ் சாலை, சென்னை - 600 002, தொலைபேசி எண். 044-28460390/91/92/93/94, மின்னஞ்சல் முகவரி investor@cameoindia.com-ல் தொடர்பு கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு ஆணையத்தில் பங்குகள் சேர்க்கப்பட்டபின் பங்குதாரர்கள் பங்குகள் / பங்கு ஆதாயங்களை கோர விரும்பினால் அதற்காக முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு ஆணையத்திடம் தனியாக, விதிகளின் படியான படிவம் IEPF-5-ன் மூலம் விண்ணப்பம் செய்ய வேண்டும். இவ்விண்ணப்பப் படிவம் www.iepf.gov.in என்ற இணையதளத்தில் கிடைக்கும்.

ஆக்ஸில்ஸ் இந்தியா லிமிடெட்டுக்காக
இடம் : சென்னை — C. பாரதி
தேதி : 26.07.2021 — கம்பெனி செயலாளர்

## வரி விளம்பரங்கள்

### சுய செய்தி

**பெயர் மாற்றம்**

நான், A G நாயர், இங்கு அறிவிக்கிறேன், மற்றும் PPO எண். 33120181008,PPO பின்சேர்க்கை 0100-ன்படி எனதுபெயரின் விரிவாக்கம், அருண் G நாயர்(குரூப் கேப்டன், ஓய்வு, இந்தியன் விமானப்படை, சர்வீஸ் எண்.17593-L)என்று நான், பிரமாண பத்திரத்தின் மூலம் அறிவித்து உறுதிப்படுத்துகிறேன், ஆதார் கார்டு எண் 7649 7292 4686-ன்படிஎனது முழுப்பெயர் விரிவாக்கம் அருண் கோபாலக்கிருஷ்ணன் நாயர், தந்தை பெயர் R G K நாயர்,மனைவி பெயர் ஸ்வப்னர V தம்பி( ஆதார் கார்டு எண் 8709 3923 3279), மகன் - அய்யப்பன் நாயர் (ஆதார் கார்டு எண் 3777 3656 6452) மற்றும் மகள் - அக்ஷரா நாயர்(ஆதார் கார்டு எண் 6916 5148 7666), தற்போது குடியிருப்பு பிளாட் D1102,பூர்வ ஸ்வான் லேக் அப்பார்ட்மெண்ட்ஸ், கேளம்பாக்கம், OMR,சென்னை 603103 தமிழ்நாடு, இந்தியா நோட்டரி பப்ளிக் G.பத்மநாபன், பதிவு 9287 கேளம்பாக்கம், OMR,சென்னை 603103 தமிழ்நாடு, முன்பாக பிரமாண பத்திரம் நாள் 12.11.2020

### திருமண சேவை மையம்

1000 DAYS Validity + Free Benefits One Time Regn. Fees Rs.1000. brahminkalyanam.com, bkmatrimony.com. 89397 02500

### திருமண சேவை மையம்




### பொது

**பொது அறிவிப்பு**

**படிவம் எண். INC-26**

{நிறுவனங்கள் (இணைத்தல்) விதிகள், 2014-ன் விதி 30-க்கு இணங்க}
நிறுவனத்தின் பதிவு அலுவலகத்தை ஒரு மாநிலத்திலிருந்து மற்ற மாநிலத்திற்கு மாற்றும் அறிவிப்பை செய்திதாளில் வெளியிடுவதற்கான விளம்பரம்

**மத்திய அரசு முன்பாக மண்டல இயக்குநர், தெற்கு மண்டலம்**

நிறுவனங்கள் சட்டம் 2013, பிரிவு 13-ன் துணை-பிரிவு (4)-ன்கீழ் மற்றும் பிரிவு (a) நிறுவனங்கள் (இணைத்தல்) சட்டங்கள், 2014-ன் விதி 30-ன் துணை-விதி (5)-ன்கீழ் சம்மந்தமாக.

**மற்றும்**

இந்த விஷயமாக
**அப்சார்டெக் இந்தியா பிரைவேட் லிமிடெட்**
(CIN: U74120TN2011PTC079700)
பதிவு அலுவலகம் : **எண்.2, நூம்பல் கிராமம் சாலை, நூம்பல், சென்னை-600077**
...... **நிறுவனம் விண்ணப்பதாரர்/ மனுதாரர்**

**சனிக்கிழமை, 24வது ஜூலை 2021** அன்று நடைபெற்ற கூடுதல் சாதாரண பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட சிறப்புத் தீர்மானத்தின் அடிப்படையில் நிறுவனத்தின் பதிவு அலுவலகத்தை **"தமிழ்நாடு மாநிலத்திலிருந்து" "மகாராஷ்ட்ரா மாநிலத்திற்கு"** மாற்றப்படுவதை நிறுவனங்களின் மெமோரண்டம் உறுதிப்படுத்தக் கோரி, நிறுவனங்கள் சட்டம் 2013-ன் 13வது பிரிவின்கீழ் சென்னை கார்ப்பரேட் விவகார அமைச்சகத்தின் மண்டல இயக்குநருக்கு விண்ணப்பம் செய்ய நிறுவனம் முன்மொழிகிறது என்று பொது மக்களுக்கு அறிவிப்பு வழங்கப்படுகிறது.

முன்மொழியப்பட்ட மாற்றத்தினால், பாதிக்கப்படக்கூடிய எந்தவொரு நபரும், **முதலீட்டாளர் புகார் படிவத்தை பூர்த்தி செய்து MCA-21 போர்ட்டல் மூலமாக (www.mca.gov.in)** அனுப்பலாம் அல்லது அவர்/அவள் விருப்பத்தின் தன்மையைக் கூறும் பிராமணப் பத்திரத்தின் ஆதரிக்கப்படும் அவர்/அவள் ஆட்சேபனைகளை பதிவு தபால் மூலம் அனுப்பலாம் மற்றும் எதிர்ப்பின் அடிப்படையுடன் **மண்டல இயக்குநர், 5வது தளம், சாஸ்திரி பவன், 26, ஹாடோஸ் சாலை, சென்னை 600006,** அணுகலாம், இந்த அறிவிப்பு விளம்பரம் வெளியிடப்பட்ட பதினான்கு (14) நாட்களுக்குள் அதன் நகலுடன் கீழ்குறிப்பிட்டுள்ள மனுதாரர் நிறுவன பதிவு அலுவலக முகவரியை அணுகவும்:

**அப்சார்டெக் இந்தியா பிரைவேட் லிமிடெட், எண்.2, நூம்பல் கிராமம் சாலை, நூம்பல், சென்னை-600077**

**அப்சார்டெக் இந்தியா பிரைவேட் லிமிடெட்**
-க்காக மற்றும் சார்பாக
Sd/-
**தபுதான் அவினாஷ் மணவி**
(இயக்குநர்)
**DIN: 08340631**

**நாள் : 26.07.2021**
**இடம் : சென்னை**




எமது பதிப்புகள்: சென்னை, காஞ்சிபுரம், புதுவை, வேலூர், கோவை, திருப்பூர், சேலம் தருமபுரி, திருச்சி, தஞ்சாவூர், மதுரை, ராமநாதபுரம், நெல்லை, கன்னியாகுமரி

Published by N. Ravi at Kasturi Buildings, 859 & 860, Anna Salai, Chennai-600002 on behalf of KSL MEDIA LIMITED, and Printed by D.Rajkumar at Plot B-6 & B-7, CMDA Industrial Complex, Maraimalai Nagar, Chengleput Taluk, Kancheepuram Dist., Pin: 603209. Editor: K. Asokan (Editor responsible for selection of news under the PRB Act).

TAMILTH ALL 1 Edit_01 S SHUNMUGAM 20_15_58



இந்து தமிழ் திசை
உண்மை நின்றிட வேண்டும்
திங்கள், ஜூலை 26, 2021

# நீதிமன்ற விசாரணைகளின் நேரடி ஒளிபரப்பு நல்லதொரு தொடக்கம்

குஜராத் உயர் நீதிமன்றத்தில் இணையவழி நேரடி ஒளிபரப்பை முறையாகத் தொடங்கிவைத்துள்ளார் உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி என்.வி.ரமணா. அவர் அளித்திருக்கும் அறிவுரைகள், நீதிமன்ற விசாரணைகளை அறிந்துகொள்வதில் குடிமக்களுக்கு உள்ள அரசமைப்பு உரிமையை வலுப்படுத்தும் வகையில் அமைந்துள்ளன. உச்ச நீதிமன்றம், உயர் நீதிமன்றங்கள் ஆகியவற்றின் விசாரணைகளை நேரடியாக ஒளிபரப்புவது பற்றி அவ்வப்போது விவாதிக்கப்பட்டுவந்தாலும் அதன் நடைமுறைச் சாத்தியங்கள் குறித்த கேள்விகளும் இருந்துவந்தன. கரோனா பெருந்தொற்றுக் காலத்தில் நீதிமன்ற நடவடிக்கைகள் முழுவதும் முடங்கிப்போயிருக்கும் சூழலில், முக்கிய வழக்குகளின் விசாரணைகள் இணையவழியில் நடத்தப்பட்டதன் அனுபவங்கள், இனி வரும் காலங்களில் நேரடி ஒளிபரப்புக்கு வெற்றிகரமான முன்னோட்டங்களாக அமைந்துவிட்டன என்று சொல்லலாம். இணையவழி விசாரணையில், வழக்கறிஞர்கள் தங்களது அலுவலகத்திலிருந்தே வாதிடவும் வழக்காடிகள், அரசு அலுவலர்கள், பத்திரிகையாளர்கள் ஆகியோர் அவற்றைக் காணவும் வாய்ப்புகள் உருவாகின. இணையத்தின் வழி இணைகிறபோதே கணினியின் கேமரா, மைக் ஆகியவற்றை அமைத்துக்கொள்ளும் வாய்ப்புகளும் தற்போது வழங்கப்படுகின்றன. தற்போதுள்ள இந்த இணையவழி விசாரணை முறையின் சாத்தியங்களை, இனி வரும் காலங்களில் நீதிமன்ற நடவடிக்கைகளின் நேரடி ஒளிபரப்புக்கும் நீட்டித்துக்கொள்ளலாம்.

2018-ல் ஸ்வப்னில் த்ரிபாதி வழக்கின் தீர்ப்பில், நீதிமன்ற விசாரணைகளை அறிந்துகொள்வது ஒவ்வொரு குடிநபரின் அடிப்படை உரிமை என்று உச்ச நீதிமன்றம் உறுதிசெய்தது. உச்ச நீதிமன்றத்தின் முதன்மை அமர்வில் அரசமைப்பின் அடிப்படையிலான வழக்குகளின் விசாரணை நடக்கிறபோது அவற்றைப் பரிசோதனை அடிப்படையில் நீதிமன்றத்தின் வெளியேயும் ஒளிபரப்புவதற்கு அவ்வழக்கில் உத்தரவிட்டபோதிலும், இப்போதுதான் அதற்கு வேளை வந்திருக்கிறது. கடந்த ஜூன் மாதத்தில் உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி தனஞ்ஜெய ஒய்.சந்திரசூட் தலைமையிலான இ-கமிட்டி, நீதிமன்ற விசாரணைகளை நேரடியாக இணையத்தில் ஒளிபரப்புவது, அவற்றைப் பதிவுசெய்வது குறித்த விதிமுறைகளின் வரைவு மீது யோசனைகளை அளிக்குமாறு நாட்டிலுள்ள 24 உயர் நீதிமன்றங்களின் தலைமை நீதிபதிகளுக்கும் கடிதம் எழுதியிருந்ததும் குறிப்பிடத்தக்கது. உயர் நீதிமன்றங்கள் மட்டுமல்லாது விசாரணை நீதிமன்றங்கள், தீர்ப்பாயங்கள் ஆகியவற்றின் நடைமுறைகளும் அடுத்தடுத்து இணையவழி ஒளிபரப்பில் இணையவிருக்கின்றன.

சட்ட அறியாமை எப்போதுமே எதிர்வாதமாக நீதிமன்றங்களில் ஏற்றுக்கொள்ளப் படுவதில்லை என்பதால், குடிமக்களுக்குச் சட்டங்கள் குறித்த அறிமுகத்துடன் நீதிமன்ற விசாரணைகளைப் பற்றிய விழிப்புணர்வும் அவசியமாக இருக்கிறது. அதே நேரத்தில், நீதிமன்ற விசாரணைகளின் நேரடி ஒளிபரப்பை இருபுறமும் கூர்மைகொண்ட வாளுடன் ஒப்பிட்டு, உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி எச்சரித்துள்ளதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியது. பாதிக்கப்பட்டவர்களின், சாட்சிகளின் பாதுகாப்பு தொடர்பில் கூடுதல் கவனம் எடுத்துக்கொள்ளப்பட வேண்டியிருக்கும். வழக்கறிஞர்கள் இதைத் தங்களது பிரபல்யத்துக்கான வாய்ப்பாகவும் பயன்படுத்திக்கொண்டுவிடக் கூடாது. எது எப்படியிருப்பினும், விசாரணைகளின் நேரடி ஒளிபரப்பானது நீதித் துறையின் வெளிப்படைத் தன்மையை மட்டுமல்ல, பொறுப்புணர்வையும் அதிகப்படுத்தவே செய்யும்.




# இன்சுலின்: அற்புத மருந்தின் நூற்றாண்டு!

**இன்சுலின் கண்டுபிடிக்கப்பட்ட 100 ஆண்டுகளுக்குப் பிறகும் அது கடைக்கோடிச் சாமானியருக்கு எளிதாகச் சென்றடைய முடியவில்லை என்பதுதான் துயரம்!**

கு.கணேசன்

நூறு ஆண்டுகளுக்கு முன்பு இன்சுலின் கண்டுபிடிக்கப்பட்டதை கரோனா பெருந்தொற்றுக்கு இடையிலும் கொண்டாடுகிறது அறிவியல் உலகம். காரணம், இருபதாம் நூற்றாண்டின் அற்புதக் கண்டுபிடிப்புகளில் இன்சுலின் முக்கியமானது. நீரிழிவு நோயை எதிர்கொள்ளும் சிறந்த வழிமுறை இது. நவீன மருத்துவத்தில் ஒரு மைல்கல் இது!

இன்சுலினுக்கு முந்தைய காலத்தில், உலக அளவில் கோடிக்கணக்கான நீரிழிவுக் குழந்தைகள் கடுமையான பத்திய உணவுகளால் களைத்துப்போயினர். மரபுவழி மருந்துகளுக்கு நோய் கட்டுப்படாமல், பிறந்த சில வருடங்களில் இறந்துகொண்டிருந்தனர். இன்சுலினுக்குப் பிந்தைய காலத்தில் இந்தத் துயரங்கள் குறையத் தொடங்கின. இன்சுலினைக் கண்டுபிடித்து உலகளாவிய உயிரிழப்பைக் குறைத்தவர்கள் கனடாவைச் சேர்ந்த பாண்டிங் (Banting), பெஸ்ட் (Best) ஆகிய இரண்டு அறிவியலர்கள்.

**கனவு காட்டிய கண்டுபிடிப்பு**

பாண்டிங் டொரொன்டோ பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற அறுவைச் சிகிச்சை மருத்துவர். 1920 வரை உடலில் செரிமான நீரைச் சுரக்கும் கணையத்துக்கும் நீரிழிவுக்கும் தொடர்பு இருக்கலாம் என்பது மருத்துவர்களின் ஊகம். 1920 அக்டோபர் 30-ம் நாள் இரவில் பாண்டிங் கணையம் குறித்து மோசஸ் பேரோன் எழுதிய கட்டுரையைப் படித்துவிட்டு உறங்கச் செல்கிறார். நள்ளிரவில் அவருக்கு ஒரு கனவு வருகிறது. அதில் பாண்டிங் கணையத்தை அறுவைச் சிகிச்சை செய்து கணையக் குழாயை முடிச்சுப்போட்டு மூடிவிடுகிறார். அதனால் செரிமான நீர் வழக்கம்போல் முன்சிறுகுடலுக்குச் செல்ல வழியில்லை. சுரப்புச் செல்கள் தாமாகவே அழிந்துவிடுகின்றன. அதே சமயத்தில், கணையத்தில் 'லாங்கர்ஹான் திட்டுகள்' மட்டும் அழியாமல் இருக்கின்றன. கனவு கலைகிறது. இந்தப் பின்னணியில், 'கணையத் திட்டுகளில் நீரிழிவோடு தொடர்புடைய வேதிப்பொருள் இருந்தால், அதைத் தனியாகப் பிரித்தெடுத்து, நோயாளிகளுக்குக் கொடுத்து, நீரிழிவைக் கட்டுப்படுத்த சாத்தியம் இருக்கிறது' என்று பொறிதட்ட, மருத்துவப் பேராசிரியர் பணியிலிருந்து ஆராய்ச்சியாளராக மாறுகிறார் பாண்டிங். அப்போது அவரிடம் ஆராய்ச்சிக்கூடம் எதுவுமில்லை. ஆகவே, பேராசிரியர் மேக்ளியாடை அணுகுகிறார். அவரும் தன்னுடைய ஆராய்ச்சிக்கூடத்தைக் கொடுத்ததோடு, பெஸ்ட் என்பவரையும் அவருக்கு உதவியாளராக அமர்த்துகிறார்.

பாண்டிங், தன்னுடைய ஆராய்ச்சியின் முதல் படியாக, ஆரோக்கியமான ஒரு நாயின் கணையத்தை அகற்றுகிறார். அதைத் தொடர்ந்து, அந்த நாய்க்கு ரத்தச் சர்க்கரை அதிகரித்து, கடுமையான நீரிழிவு வந்து இறந்துவிடுகிறது. இப்படிப் பல நாய்களை ஆராய்ந்த பிறகு, நீரிழிவுக்கும் கணையத்துக்கும் உள்ள தொடர்பை உறுதிசெய்கிறார். பிறகு, நாயின் கணையத்திலிருந்து ஒரு திரவத்தைப் பிழிந்து, அதை நீரிழிவு நோயுள்ள நாய்க்கு ஊசி மூலம் செலுத்த, அதன் ரத்தச் சர்க்கரை குறைகிறதா என்பதை பெஸ்ட் கணிக்கிறார். ஆரம்பத் தோல்விகளுக்குப் பிறகு, 1921 ஜூலையில் அந்த அதிசயம் நிகழ்கிறது!

கணையத் திரவம் செலுத்தப்பட்ட நாயின் ரத்தச் சர்க்கரை குறையத் தொடங்குகிறது. அதே போன்ற திரவத்தைப் பல நாய்களிடம் சோதித்துப் பார்க்கிறார். எல்லா நாய்களுக்கும் ரத்தச் சர்க்கரை குறைவது உறுதியாகிறது. ஆரம்பத்தில் பாண்டிங் தயாரித்த கணையத் திரவம் சுத்திகரிப்பு இல்லாமல் இருந்ததால், நாய்களுக்கு ஊசி போட்ட இடத்தில் வீக்கம் ஏற்பட்டு காய்ச்சல் வந்தது. இந்தப் பிரச்சினையைத் தீர்க்க அறிவியலர் ஜேம்ஸ் கோலிப், பாண்டிங் தயாரித்த கணையத் திரவத்தைச் சுத்தப்படுத்திக் கொடுக்கிறார்.

ஆராய்ச்சியின் அதிமுக்கியமான அடுத்த பாய்ச்சலுக்குத் தயாராகிறார் பாண்டிங். நீரிழிவினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்த லியோனார்ட் தாம்சன் என்ற 14 வயதுச் சிறுவனுக்குச் சுத்திகரிக்கப்பட்ட திரவத்தை முதன்முதலில் செலுத்துகிறார். அவனுக்கும் நீரிழிவு கட்டுப்படுகிறது. அதன் மூலம், 'கணையத்தில் இன்சுலின் சுரக்காததுதான் நீரிழிவுக்குக் காரணம்; அதற்கான தீர்வு இன்சுலினைச் செலுத்துவது' என்று பாண்டிங் உறுதிசெய்கிறார். இது நடந்தது 1922 ஜனவரி 23-ல். இந்தச் சாதனைக்கு 1923-ல் பாண்டிங் நோபல் பரிசு பெறுகிறார்.

**இன்சுலின் ஓர் அருமருந்து**

பாண்டிங், தான் கண்டுபிடித்த திரவத்துக்கு 'ஐலெடின்' (Isletin) என்று பெயரிடுகிறார். ஆனால், அவருடைய ஆராய்ச்சிக்கு உதவிய மேக்ளியாட் 'இன்சுலின்' (Insulin) என்று அதை மாற்றிவிடுகிறார். அதைத் தொடர்ந்து லில்லி என்ற மருந்து நிறுவனம், வணிக முறையில் இன்சுலினைத் தயாரிக்கத் தொடங்குகிறது. நாயிடம் பெறப்பட்ட இன்சுலினுக்கு ஒவ்வாமை குணங்கள் தெரிய ஆரம்பித்ததால் அடுத்த முயற்சியாக மாடு/பன்றியின் கணையத்திலிருந்தும் இன்சுலினைத் தயாரித்தனர். 1978-ல் 'டி.என்.ஏ. மறுஇணைப்பு தொழில்நுட்ப'த்தைப் (DNA recombinant technology) பயன்படுத்தி மனித இன்சுலினைப் போன்று அதன் தயாரிப்புகளை மேம்படுத்தினர். இப்போது அதன் வேதிக் கட்டமைப்பில் பல மாற்றங்களைச் செய்து, பலதரப்பட்ட இன்சுலின்களைத் தயாரிக்கின்றனர். உலகில், முதலாம் வகை நீரிழிவு நோயாளிகள் 11 லட்சம் பேர் இருக்கிறார்கள். அவர்களுக்கு இன்சுலின்தான் ஒரே மருந்து. இப்போதைய உலகத் தரவுகளின்படி, ஆயுள் முழுவதும் இன்சுலின் போட்டுக்கொண்டவர்கள் 90 வயது வரை வாழ்ந்துள்ளனர்.

இன்சுலின் கண்டுபிடிக்கப்பட்ட 100 ஆண்டுகளுக்குப் பிறகும் அது கடைக்கோடிச் சாமானியருக்கு எளிதாகச் சென்றடைய முடியவில்லை என்பதுதான் துயரம். அதற்குப் பொருளாதாரம் உள்ளிட்ட பல காரணங்கள் தடையாக இருக்கின்றன. வளரும் நாடுகள் பலவற்றுக்கு இன்னமும் இன்சுலின் கிடைக்கவில்லை, உலகளவில் மூன்று மருந்து நிறுவனங்கள்தான் இன்சுலின் தயாரிப்பில் கோலோச்சுகின்றன. அதனால் அதன் விலை சமநிலையில் இல்லை. வளர்ந்த நாடுகளில்கூட நடுத்தரச் சமூகத்துக்கு இன்சுலினை ஆயுளுக்கும் வாங்கும் சக்தி இல்லை.

இந்தியாவில் சுமார் ஒன்றரை லட்சம் குழந்தைகள் முதலாம் வகை நீரிழிவு நோயாளிகள். இவர்கள் எல்லோருக்கும் இன்சுலின் கிடைப்பதில்லை. வடமாநிலங்களில் இலவச இன்சுலினுக்குத் தட்டுப்பாடு இருக்கிறது. அதனால் ஏற்படும் மரணங்களைத் தவிர்க்க முடியவில்லை. ஒன்றிய அரசு இந்தக் குறைபாடுகளைக் களைந்து, இலவசமாக இன்சுலின் கிடைக்கச் செய்வதைக் கொள்கை முடிவாக எடுத்துச் செயல்பட்டால், பல்லாயிரக்கணக்கான குழந்தைகளை ஆண்டுதோறும் காப்பாற்றலாம். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை அரசு மருத்துவமனைகளில் தடையின்றி இன்சுலின் இலவசமாக வழங்கப்படுவது பாராட்டுக்குரியது. இப்போது புதிதாகத் தொடங்கப்பட்டிருக்கும் 'மக்களைத் தேடி மருத்துவத் திட்ட'த்திலும் இன்சுலின் கிடைப்பதை உறுதிசெய்தால் இன்னும் சிறப்பு.

- கு.கணேசன், பொதுநல மருத்துவர்,
தொடர்புக்கு: gganesan95@gmail.com

இன்சுலினைக் கண்டுபிடித்து 100 ஆண்டுகள்




# இணையம் மட்டுமே உலகம் அல்ல!

ஜி.ஆர்.கோபிநாத்

அண்மையில் நிறைவடைந்த சொமேட்டோ நிறுவனத்தின் முதற்கட்ட பங்கு விற்பனை மூலம் அந்த நிறுவனம் வெற்றிகரமாக ரூ. 9,000 கோடியை, பங்குகளின் ரூ.66,000 கோடி என்ற மிகப் பெரிய சந்தை மதிப்போடு, பெற்றுள்ளது. பணம் மரத்தில் காய்க்கும் என்பதை இது நம்பவைக்கிறது.

150 ஆண்டுகளுக்கு முன்னர் உலகின் மிகப் பெரிய நாவலாசிரியர்களில் ஒருவரும் சிந்தனையாளருமான லியோ டால்ஸ்டாய், தான் எழுதிய 'நாம் செய்ய வேண்டியது என்ன?' என்ற புத்தகத்தில் இப்படி ஆச்சரியப்பட்டுக் கேட்கிறார்: கிராமப்புறப் பகுதிகளில்தான் மதிப்புமிக்க எல்லாப் பொருட்களும் உற்பத்தியாகின்றன. ஆனால், கிராமங்கள் வறுமையிலும் நகரங்கள் செழிப்பிலும் ஏன் இருக்கின்றன? அந்தக் கேள்வி நம்மைத் தொடர்ந்து குழப்பிக்கொண்டிருக்கிறது.

1980-களில் என் வாழ்க்கை தொடர்பான நினைவுகளை இந்த எண்ணங்கள் இழுத்துவந்தன. ஒரு விவசாயியாக மிகச் சிரமப்பட்ட நாட்கள் அவை. கர்நாடக மாநிலத்தின் ஒரு மூலையில், பழைய, விலைக்கு வாங்கிய ராணுவக் கொட்டகையில் தங்கிக்கொண்டு நாள் முழுவதும் நிலத்தில் உழைத்த நாட்கள் அவை. ஒருநாள், விளைந்த வாழைக் குலைகளை அறுத்து, அதிகாலைக்கு முன்பே ஏற்றிக்கொண்டு மாவட்டத் தலைநகர் ஹாசனில் உள்ள வார உழவர் சந்தைக்கு என் டிராக்டரை ஓட்டிச் சென்றேன். நான் சந்தைக்குச் செல்லும் பிரதான சாலையை நெருங்கியபோதே பிற விவசாயிகள் கொண்டுவந்த வண்டிகளும் டிரக்குகளும் நூற்றுக்கணக்கில் வரிசையாக எனக்கு முன்னால் நின்றுகொண்டிருந்தன. ஒரு கிமீ தூரத்தை நடந்து கடக்கும்போதே எரிச்சலுடன் சண்டை போட்டுக்கொண்டிருந்த ஆயிரக்கணக்கான விவசாயிகளைப் பார்த்துவிட்டேன். அப்போதுதான் பறித்துக் கொண்டுவந்த பச்சை மிளகாயையும் தக்காளிகளையும் சாலையில் கொட்டி இறைத்திருந்தனர். சாலையின் கருப்பு நிறம் மறைந்து சிவப்பும் பச்சையுமாக இருந்தது. மிதிபட்ட மிளகாய்களிலிருந்து வந்த கடுமையான கார நெடி சுவாசிக்க முடியாமல் ஆக்கியது. கொண்டுவந்த பொருட்களின் விலை சரிந்துவிட்டதை அறிந்து, போக்குவரத்துச் செலவுகளைக்கூட ஈடுகட்ட முடியாதென்று கூறி, அவர்கள் கூச்சலிட்டுக்கொண்டிருந்தனர். அதனால், அவர்கள் சாலைகளை மறித்திருந்தனர். நண்பகல் வேளையில், அந்தக் குழப்பச் சூழ்நிலையிலிருந்து இறுதியாக என்னை நான் விடுவித்துக்கொண்டு, எனது விளைச்சலையும் விற்க முடியாமல் ஏமாற்றமுற்று, வாழைக் குலைகளை மீண்டும் எனது பண்ணைக்கே கொண்டுவந்து எனது கால்நடைகளுக்கு உணவாக இட்டேன்.

சொமேட்டோவின் பங்குகள் விற்பனையான செய்தி, விவசாயக் கடனாக ஒரு லட்சம் கேட்ட எனது விண்ணப்பத்தைத் தொடர்ந்து புறக்கணித்த வங்கிகளை எனக்கு ஞாபகப்படுத்தின. ஆனால், இரண்டு தசாப்தங்களுக்குப் பிறகு, எனது மலிவு ரக விமானப் போக்குவரத்து நிறுவனத்தின் பங்குகள் வெளியிடப்பட்டபோது, மிகவும் மதிக்கப்படும் பங்குகளைக் கொண்ட நிறுவனம் என்ற அடிப்படையில் 500 கோடி ரூபாய்க் கடனை வங்கியொன்று சர்வசாதாரணமாக அளித்தது.

நிலத்தைச் சொந்தமாகக் கொண்டு, பாடுபட்டு, உழுது நம்மால் சாப்பிடவும் குடிக்கவும் தொடவும் உணரவும் முடியக்கூடிய நிஜமான பொருட்களை உற்பத்திசெய்பவர்கள், நமது வயிற்றை நிரப்பி, கதகதப்பாக நம்மை வைத்திருப்பவர்கள், ஏன் வறுமையில் இருக்கிறார்கள்? ஆனால், அந்த விவசாயிகள் உற்பத்திசெய்யும் பொருட்களை எடுத்துச் சென்று விற்பவர் அல்லது அதன் விலையை ஊகபேரம் செய்யும் தரகர் எப்படி பணக்காரராக இருக்க முடிகிறது? எஃகு ஆலைகள், வாகனங்கள், கட்டிடங்கள், பாலங்கள், கப்பல்கள், ரயில் பாதைகள் கட்டுமானம் மற்றும் ஹோட்டல் நிறுவனங்களை நடத்திக்கொண்டு, பலசரக்குகள் மற்றும் பிற உணவுப் பொருட்களைச் சில்லரைக்கு வாங்கும் பன்னாட்டு நிறுவனங்களைப் பங்குச் சந்தை மதிப்பில் அமேசானும் மைக்ரோசாஃப்ட்டும் டிசிஎஸ்ஸும் இன்ஃபோஸிஸும் பின்தள்ளும்போது, அந்த நிறுவனங்கள் நாம் ஏன் இத்தனை பிரயத்தனப்பட வேண்டுமென்று கருதலாம்.

இப்போது பைஜூஸ், சொமேட்டோ மற்றும் பேடிஎம் ஆகிய புதிய குழந்தைகள் வளாகத்துக்குள் புகுந்து, பல தசாப்தங்களாக அங்கே இருக்கும் நிறுவனங்களை மிஞ்சியுள்ளன.

தகவலும் தரவுகளும் நவீனப் பொருளாதாரத்தின் புதிய எரிபொருள் என்று சொல்லப்படுகின்றன. ஆனால், தகவலை உண்ண முடியாது. நமக்கு உணவு, துணி, தண்ணீர், வீடு, போக்குவரத்து, மின்சாரம், மருத்துவமனைகள் வேண்டும். அத்துடன் மலர்கள், கவிதை மற்றும் கலைகள் வேண்டும். பள்ளிகள் வேண்டும். பல்கலைக்கழக வளாகங்கள் வேண்டும். அங்கே ரத்தமும் சதையுமாக ஆசிரியர்கள் வேண்டும். குளிர்ந்த காற்றுடன் அங்கே சூடுபறக்கும் உரையாடல், விவாதம், நட்பு, இசை மற்றும் சிரிப்பு ஆட்சி செய்ய வேண்டும். நமக்கு உணவகங்களும் பயணமும் கடற்கரைகளும் சூரியனுடன் வேண்டும். வைனும் முத்தங்களும் உடன் வேண்டும். உலகம் முழுவதற்கும் தேவையானதைத் தங்கள் கைகளால் உழைத்து வழங்குவதற்கு மனம்நிறைந்த புஷ்டியான ஆண்களும் பெண்களும் வேண்டும். இத்தனையும் சேர்ந்துதான் நல்ல வாழ்க்கையை உருவாக்குவது.

இதெல்லாம் உங்களைக் கோடீஸ்வரனாக்காது, ஆனால், இணையப் பொருளாதாரம் உருவாக்கும் மலட்டு உலகத்தால் உங்களைக் கோடீஸ்வரனாக்க முடியும். ஆனால், ஏமாற்றமுற வேண்டிய அவசியமில்லை. மண்ணில் வேர்கொண்டிருக்கும் உண்மையான உலகத்திலிருந்து செல்வத்தை உருவாக்க முடியும். நமது பணியை ஆத்மார்த்தத்துடனும் நேசத்துடனும் செய்தால் அது அபரிமிதமான மகிழ்ச்சியையும் அர்த்தத்தையும் கொடுக்க முடியும்.

விவசாயிகள், மருத்துவர்கள், எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், கட்டுமானத் துறையினர், தச்சர்கள், கருமான்கள், கலைஞர்கள், கைவினைஞர்கள், பலசரக்குக் கடைக்காரர்கள் என்று இந்தியாவில் ஏராளமான துறைகளில் ஏராளமானோர் இருக்கிறார்கள். தங்கள் சமூகங்களுக்கு அவர்கள் சேவை செய்து வேலைகளைத் தந்து வாழ்வாதாரங்களையும் பாதுகாப்பையும் கொடுப்பவர்கள் அவர்கள். அவர்கள்தான் இந்த உலகத்தை அற்புதமாக மாற்றுகிறார்கள்.

மனிதர்கள் இணையத்தால் மட்டும் வாழ்ந்துவிட முடியாது.


- கேப்டன் ஜி.ஆர்.கோபிநாத்,
ராணுவ வீரர், விவசாயி மற்றும் ஏர்டெக்கான் நிறுவனர்.
© 'தி இந்து', தமிழில்: ஷங்கர்

ஒலிம்பிக் திருவிழா

# இந்தியாவைத் தூக்கிநிறுத்திய சானு

1996 அட்லாண்டா ஒலிம்பிக்குக்கு முன்னர் வரை இந்தியத் தனிநபர்கள் வென்ற பதக்கங்கள் வெறும் 3 (1900-ல் நார்மன் பிரிட்சார்ட் இரண்டு வெள்ளி, 1952-ல் கஷாபா ஜாதவ் வெண்கலம்). இடைப்பட்ட 44 ஆண்டுகளுக்குப் பிறகு, அட்லாண்டா டென்னிஸில் வெண்கலப் பதக்கம் வென்று பதக்க தாகத்தைத் தீர்த்துவைத்தார் லியாண்டர் பயஸ்.

2000 சிட்னியில் ஒலிம்பிக் நிறைவடைய இருந்த தருணத்தில் பளுதூக்குதலில் வெண்கலம் வென்று, தனிநபராகப் பதக்கம் வென்ற முதல் இந்தியப் பெண் ஆனார் கர்ணம் மல்லேஸ்வரி. இப்போது பளுதூக்குதலில் வெள்ளி வென்று இந்தியாவின் 2021 ஒலிம்பிக் பதக்கக் கணக்கைத் தொடங்கி வைத்துள்ளார் மணிப்பூரைச் சேர்ந்த சாய்கோம் மீராபாய் சானு. அதிலும் ஒலிம்பிக் வெள்ளி வென்றுள்ள இரண்டாவது பெண் என்கிற பெருமையையும் அவர் சேர்த்துப் பெறுகிறார்.



கடந்த ஒலிம்பிக் வரை 17 தனிநபர் பதக்கங்களையே இந்தியா வென்றுள்ளது. அவற்றில் 5 பதக்கங்கள் பெண்கள் வென்றவை. கடந்த முறை வெள்ளிப் பதக்கம் வென்ற பி.வி.சிந்து (பேட்மின்டன்), வெண்கலம் வென்ற சாக்ஷி மாலிக் (மல்யுத்தம்) இருவருமே பெண்கள். 2012 ஒலிம்பிக்கில் இந்தியா வென்ற ஆறு பதக்கங்களில் சானியா நேவாலும் (பேட்மின்டன்), மேரி கோமும் (குத்துச்சண்டை) வெண்கலங்களை வென்றிருந்தார்கள்.

சமீபத்திய ஆண்டுகளில் ஒலிம்பிக்கில் இந்தியாவைத் தூக்கிநிறுத்துபவர்கள் பெண்களாக இருப்பதைக் கவனிக்கலாம். பொதுவாகப் பெண்கள், உடல்ரீதியில் வலுவற்றவர்கள் என்கிற கற்பிதம் இருக்கிறது. ஆனால், இந்தியப் பெண்கள் இதுவரை வென்றுள்ள 6 ஒலிம்பிக் பதக்கங்களில் நான்கு பதக்கங்கள் பெரும் உடல்வலு தேவைப்படும் பளுதூக்குதல், குத்துச்சண்டை, மல்யுத்தம் ஆகிய விளையாட்டுகளில் பெற்றவை என்பது, அந்தக் கற்பிதத்துக்கு விழுந்த பெரிய அடி.

- ஆதி

இணையத்திலும் இந்து தமிழுடன் இணைந்திருக்க...
www.hindutamil.in
சமூக வலைதளங்களில் எங்களைத் தொடர...
facebook.com/TamilTheHindu/
twitter.com/tamilthehindu
Youtube.com/tamilthehindu

கட்டுரைகளை editpage@hindutamil.co.in; வாசகர்கள் விமர்சனங்களை feedback@hindutamil.co.in ஆகிய மின்னஞ்சல்களுக்கு அனுப்பிடுங்கள். பத்திரிகையில் வெளியாகும் கட்டுரையாளர்கள் / பேட்டியாளர்களின் கருத்துகள் அவர்களுடைய சொந்தக் கருத்துகளே. அவை எந்த வகையிலும் இப்பத்திரிகையின் கருத்துகள் ஆகா. அஞ்சல் முகவரி:
ஆசிரியர் இலாகா, இந்து தமிழ், கஸ்தூரி மையம், 124, வாலாஜா சாலை, சென்னை - 2.

TAMILTH Kancheepuram 1 TNadu_02 21_40_48



மீட்டர் பேசுது

| | | | | |
|---|---|---|---|---|
| 34.6°c | 35.4°c | 35.6°c | 36.3°c | 31.2°c |
| சென்னை | வேலூர் | திருச்சி | மதுரை | கோவை |
| 33.1°c | 35.0°c | 17.5°c | 18.1°c | |
| சேலம் | நெல்லை | உதகை | கொடைக்கானல் | |

தமிழ்நாடு, புதுச்சேரியின் ஓரிரு இடங்களில் மழை பெய்யக்கூடும். சென்னையில் ஓரளவு மேகமூட்டம் காணப்படும். வெப்பநிலை அதிகபட்சம் 37 டிகிரி செல்சியஸ் ஆகவும் குறைந்தபட்சம் 28 டிகிரி செல்சியஸ் ஆகவும் இருக்கக் கூடும்.





▲ தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல் காவிரியில் நீர்வரத்து விநாடிக்கு 30 ஆயிரம் கனஅடியைக் கடந்த நிலையில், ஆற்றின் இரு கரைகளையும் தொட்டபடி ஓடும் தண்ணீர். (அடுத்த படம்) ஒகேனக்கல் அடுத்த ஆலம்பாடி பகுதியில் கரையோரம் வைக்கப்பட்டுள்ள எச்சரிக்கை பலகைகளை நெருங்கி ஓடிக் கொண்டிருக்கும் தண்ணீர்.

ஒகேனக்கல் காவிரியில் வெள்ளப் பெருக்கு

# நீர்வரத்து விநாடிக்கு 30 ஆயிரம் கனஅடியானது

● மேட்டூர் அணை நீர்மட்டம் உயர்கிறது

■ தருமபுரி/சேலம்

ஒகேனக்கல் காவிரியாற்றில் நீர்வரத்து நேற்று மாலை விநாடிக்கு 30 ஆயிரம் கனஅடியைக் கடந்தது. இதனால், காவிரியில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

கர்நாடக அணைகளில் இருந்து காவிரியில் தண்ணீர் திறந்து விடப்பட்டதைத் தொடர்ந்து தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து கடந்த சில நாட்களாக அதிகரித்து வருகிறது. நேற்று முன்தினம் மாலை விநாடிக்கு 25 ஆயிரம் கனஅடியைக் கடந்த நீர்வரத்து நேற்று காலை 28 ஆயிரம் கனஅடியாக அதிகரித்தது. மேலும், பகலில் நீர்வரத்து படிப்படியாக அதிகரித்தது. நேற்று மாலை விநாடிக்கு 30 ஆயிரம் கனஅடியைக் கடந்தது. இதனால், தமிழக, கர்நாடக வனப்பகுதி எல்லையை தொட்டபடி ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது.

மேலும், ஆற்றில் உள்ள பெரும் பாறைகளுக்கு இடையிலான பள்ளங்கள் நீரில் மூழ்கியபடி தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. பிரதான அருவி, சினிபால்ஸ் உள்ளிட்ட அருவிகளில் தண்ணீர் ஆர்ப்பரித்து ஓசையுடன் கொட்டி வருகிறது.

வெள்ளப் பெருக்கு காரணமாக அசம்பாவிதங்களை தடுக்க வருவாய், வனம் உள்ளிட்ட அரசுத் துறை அதிகாரிகள் ஒகேனக்கல் உள்ளிட்ட தருமபுரி மாவட்ட காவிரிக் கரையோரப் பகுதிகளை தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

### 19,665 கனஅடி நீர்வரத்து

மேட்டூர் அணைக்கு நேற்று முன்தினம் விநாடிக்கு 6 ஆயிரத்து 841 கனஅடியாக இருந்த நீர்வரத்து, நேற்று காலை 19 ஆயிரத்து 665 கனஅடியாக உயர்ந்தது. அணையில் இருந்து டெல்டா பாசனத்துக்கு விநாடிக்கு 12 ஆயிரம் கனஅடி தண்ணீர் திறந்துவிடப்பட்டு உள்ளது.

நீர்வரத்து அதிகரிப்பால் அணை நீர்மட்டம் படிப்படியாக அதிகரித்து வருகிறது. நேற்று முன்தினம் 72.55 அடியாக இருந்த நீர்மட்டம் நேற்று காலை 73.27 அடியாக உயர்ந்தது. நீர் இருப்பு 35.57 டிஎம்சி-யாக உள்ளது.

பாதிரியாரின் அவதூறு பேச்சு விவகாரம்

# அருமனை கிறிஸ்தவ இயக்க செயலாளர் கைது

● தூத்துக்குடி சிறையில் அடைப்பு

■ நாகர்கோவில்

இந்துக்கள் மற்றும் பிரதமர் குறித்து பாதிரியார் ஜார்ஜ் பொன்னையா அவதூறாக பேசிய வழக்கில் தேடப்பட்டு வந்த கன்னியாகுமரி மாவட்டம் அருமனை கிறிஸ்தவ இயக்கச் செயலாளர் ஸ்டீபன் நேற்று கைது செய்யப்பட்டார்.

அருமனையில் கடந்த 18-ம் தேதி கிறிஸ்தவ இயக்கம் சார்பில் நடந்த நிகழ்ச்சியில் பிரதமர் மோடி, உள்துறை அமைச்சர் அமித் ஷா, இந்துக்கள் மற்றும் தமிழக அமைச்சர்கள், எம்எல்ஏக்கள் குறித்தும், திமுகவின் வெற்றி குறித்தும் பாதிரியார் ஜார்ஜ் பொன்னையா கடுமையாக விமர்சித்து பேசியது சமூக வலைதளங்களில் பரவியது. இதை எதிர்த்து இந்து அமைப்பினர் போராட்டங்கள் நடத்தினர்.

இதையடுத்து, அருமனை போலீஸார், பாதிரியார் ஜார்ஜ் பொன்னையா, நிகழ்ச்சி ஏற்பாட்டாளரும், அருமனை கிறிஸ்தவ இயக்கச் செயலாளருமான ஸ்டீபன் ஆகியோர் மீது 7 பிரிவுகளில் வழக்கு பதிவு செய்தனர். மதுரை வழியாக காரில் சென்னைக்கு தப்ப முயன்ற பாதிரியார் ஜார்ஜ் பொன்னையா நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டு பாளையங்கோட்டை மத்திய சிறையில் அடைக்கப்பட்டார். அங்கு அவருக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டதை தொடர்ந்து, சிறையில் உள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.



▲ கேரளாவுக்கு தப்ப முயன்றபோது கைது செய்யப்பட்ட அருமனை கிறிஸ்தவ இயக்கச் செயலாளர் ஸ்டீபனை அழைத்து வரும் போலீஸார்.

இவ்வழக்கில் தேடப்பட்டு வந்த முக்கிய நபரான ஸ்டீபன், தலைமறைவானார். நேற்று காலை கேரளாவுக்கு காரில் தப்பிச் செல்ல முயன்றபோது, கேரள எல்லையான காரோடு பகுதியில் வைத்து ஸ்டீபனை தனிப்படை போலீஸார் கைது செய்தனர். குழித்துறை அரசு மருத்துவமனையில் அவருக்கு மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டது. பின் அங்குள்ள நீதிமன்றத்தில் அவர் ஆஜர்படுத்தப்பட்டார். அவரை 15 நாள் காவலில் வைக்க நீதிபதி உத்தரவிட்டதைத் தொடர்ந்து, ஸ்டீபன் தூத்துக்குடி சிறையில் அடைக்கப்பட்டார்.

ஸ்டீபன் மீது ஏற்கெனவே மத பிரச்சினை தொடர்பாக பல்வேறு காவல் நிலையங்களில் வழக்குகள் உள்ளதால் அவரை குண்டர் சட்டத்தில் கைது செய்ய போலீஸார் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர். பாதிரியார் ஜார்ஜ் பொன்னையாவை காவலில் எடுத்து விசாரிக்க நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யவும் முடிவு செய்துள்ளனர்.

அசாமில் ஏற்பட்ட நிலச்சரிவில் மரணமடைந்த

# ராணுவ வீரர் உடல் 21 குண்டுகள் முழங்க தகனம்

■ மதுரை

அசாமில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி மரணமடைந்த மதுரை ராணுவ வீரர் உடல் 21 குண்டுகள் முழங்க தகனம் செய்யப்பட்டது.

மதுரை வில்லாபுரம் வீட்டு வசதி வாரியக் குடியிருப்பைச் சேர்ந்த துரைப்பாண்டி மகன் கதிர்வேல்(36). ராணுவ வீரர். இவரது மனைவி சண்முகப்பிரியா(25). இவர்களுக்கு ஹனிஸ்க்(7), பார்த்திவ்(3) ஆகிய 2 மகன்கள் உள்ளனர்.

அசாம் மலைப் பகுதியில் கதிர்வேல் 4 நாட்களுக்கு முன்பு பணியில் இருந்தபோது பலத்த மழை பெய்தது. அப்போது ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி இவர் மரணமடைந்தார். இவரது உடலை ராணுவ அதிகாரிகள் விமானம் மூலம் நேற்று முன்தினம் இரவு மதுரைக்கு கொண்டு வந்தனர்.

மதுரை விமான நிலையத்தில் கதிர்வேல் உடலுக்கு மாவட்ட ஆட்சியர் எஸ்.அனீஷ்சேகர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் வி.பாஸ்கரன், காவல் துணை ஆணையர் தங்கத்துரை உள்ளிட்ட அதிகாரிகள் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினர்.



▲ மதுரை கீரைத்துறை மின்மயானத்தில் கதிர்வேல் உடல் தகனத்தின்போது, 21 குண்டுகளை முழங்கிய ராணுவ வீரர்கள். (உள்படம்) கதிர்வேல்.

இதைத் தொடர்ந்து கதிர்வேல் உடல் வில்லாபுரத்தில் உள்ள அவரது வீட்டில் குடும்பத்தினர், உறவினர்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. அங்கு திருச்சி பிராந்திய ராணுவ மையக் கேப்டன் குல்தீப் ராணா தலைமையில் 22 ராணுவ வீரர்கள் இறுதி அஞ்சலி செலுத்தினர். பின்னர் மதுரை கீரைத்துறை மின் மயானத்தில் 21 குண்டுகள் முழங்க ராணுவ மரியாதையுடன் கதிர்வேல் உடல் தகனம் செய்யப்பட்டது.

## தமிழகத்தில் புதிதாக 1,808 பேருக்கு கரோனா தொற்று

■ சென்னை

தமிழகத்தில் புதிதாக 1,808 பேருக்கு தொற்று ஏற்பட்டுள்ளது. முதியவர்கள் உட்பட 22 பேர் உயிரிழந்தனர்.

தமிழகத்தில் நேற்று ஆண்கள் 1,046, பெண்கள் 762 என மொத்தம் 1,808 பேர் கரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டனர். இதன்மூலம் பாதிப்பு எண்ணிக்கை 25 லட்சத்து 48,497 ஆக அதிகரித்துள்ளது. இதுவரை 24 லட்சத்து 91,222 பேர் குணமடைந்துள்ளனர். நேற்று மட்டும் 2,447 பேர் குணமடைந்து வீடுகளுக்கு திரும்பினர். தமிழகம் முழுவதும் 23,364 பேர் சிகிச்சையில் உள்ளனர். அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் நேற்று நடுத்தர வயதினர், முதியவர்கள் உட்பட 22 பேர் உயிரிழந்தனர். இதன்மூலம் கரோனாவால் இறந்தோர் எண்ணிக்கை 33,911 ஆக உயர்ந்துள்ளது. சென்னையில் மட்டும் 8,310 பேர் இறந்துள்ளனர்.

முன்னாள் போக்குவரத்துத் துறை அமைச்சர்

# எம்.ஆர்.விஜயபாஸ்கரின் சொத்து மதிப்பு 55 சதவீதம் அதிகரிப்பு

● ஊழல் தடுப்பு போலீஸார் தகவல்

■ கரூர்

கடந்த அதிமுக ஆட்சியில் மாநில போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்த எம்.ஆர். விஜயபாஸ்கரின் சென்னை, கரூர் வீடுகள், கரூரில் உள்ள அவரது தம்பி, உறவினர்கள், உதவியாளர்களின் வீடுகள், நிறுவனங்களில் ஜூலை 22-ம் தேதி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு போலீஸார் சோதனை நடத்தினர்.

அதில் முதலீடுகள், பரிவர்த்தனைகள், சொத்துகள் குறித்த முக்கிய ஆவணங்கள் மற்றும் ரூ.25.56 லட்சம் ரொக்கம் கைப்பற்றப்பட்டதாக ஊழல் தடுப்பு, கண்காணிப்புப் பிரிவு தெரிவித்தது.

இதுகுறித்து முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் கரூரில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் கூறும்போது, "திமுக அரசின் பழிவாங்கும் நடவடிக்கையின் முதல்கட்டம்தான் இந்த சோதனை. சட்டப்படி எதிர்கொள்வோம். கைப்பற்றப்பட்ட பணத்துக்கு உரிய ஆவணங்கள் உள்ளன. சம்மன் அனுப்பும்போது ஆவணங்களை சமர்ப்பித்து பணத்தை திரும்பப் பெறுவோம்" என்றார்.

இந்நிலையில், முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர், அவரது மனைவி விஜயலட்சுமி, தம்பி சேகர் ஆகியோர் மீது, வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்ததாக கரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு போலீஸார் தாமாக முன்வந்து (சுமோட்டாவாக) ஜூலை 21-ம் தேதி வழக்கு பதிவு செய்துள்ளனர்.

அதில், முன்னாள் அமைச்சர் எம்.ஆர். விஜயபாஸ்கர் வருமானத்துக்கு அதிகமாக 55 சதவீத சொத்துக்களை சேர்த்ததாக ஊழல் தடுப்புப் பிரிவு போலீஸாரின் முதல் தகவல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், கடந்த 2016 சட்டப் பேரவைத் தேர்தலில் வேட்பு மனுத் தாக்கலில் ரூ.2.51 கோடி சொத்து இருந்ததாக தெரிவித்தவர், கடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் ரூ.8.62 கோடியாக அதிகரித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார். அவர் அமைச்சராக இருந்த போது வரவு-செலவுகளை ஆராய்ந்ததில் இந்த தகவல் வெளிவந்ததாக முதல் தகவல் அறிக்கையில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

## பெண் காவல் ஆய்வாளரிடம் 7.5 பவுன் நகை பறிப்பு

■ ஜோலார்பேட்டை

திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டை அடுத்த சின்னகம்மியம்பட்டு தாசரிவட்டம் பகுதியைச் சேர்ந்தவர் சம்பத் மனைவி புனிதா (44). இவர், திருப்பத்தூர் மாவட்ட க்யூ பிராஞ்ச் பிரிவு ஆய்வாளராக பணியாற்றி வருகிறார்.

இந்நிலையில், முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்ற பேரறிவாளன் பரோலில் ஜோலார்பேட்டையில் உள்ள அவரது வீட்டில் தங்கியுள்ளதால், அங்கு பாதுகாப்பு பணியையும் புனிதா கூடுதலாக கவனித்து வந்தார்.

நேற்று முன்தினம் இரவு 11 மணிக்கு பணியை முடித்துக்கொண்டு இரு சக்கர வாகனத்தில் வீட்டுக்கு புறப்பட்டார். சின்னகம்மியம்பட்டு கிராம நிர்வாக அலுவலகம் அருகே சென்றபோது எதிரே மற்றொரு இரு சக்கர வாகனத்தில் வந்த மர்ம நபர், புனிதா கழுத்தில் அணிந்திருந்த 7.5 பவுன் தங்கச் சங்கிலியை பறித்துக்கொண்டு தப்பினார். இது குறித்து ஜோலார்பேட்டை காவல் நிலையத்தில் புனிதா புகார் செய்தார். அதன்பேரில், போலீஸார் கண்காணிப்பு கேமராக்களை ஆய்வு செய்து விசாரிக்கின்றனர். எஸ்.பி. சிபி சக்கரவர்த்தி கூறும்போது, "கேமரா காட்சிகளை கொண்டு 4 பேர் மீது சந்தேகம் எழுந்துள்ளது. மர்ம நபர் விரைவில் பிடிபடுவார்" என்றார்.

சென்னை ஈசிஆர் கார் விபத்தில்

# நடிகை யாஷிகா ஆனந்த் படுகாயம்

● ஹைதராபாத்தை சேர்ந்த பெண் தோழி உயிரிழப்பு

■ மாமல்லபுரம்

மாமல்லபுரத்தை அடுத்த சூளேரிக்காடு ஈசிஆர் சாலையில் கார், சென்டர் மீடியனில் மோதிய விபத்தில் நடிகை யாஷிகா ஆனந்த் மற்றும் ஆண் நண்பர்கள் படுகாயமடைந்தனர். மேலும், ஹைதராபாத்தைச் சேர்ந்த பெண் தோழி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

செங்கல்பட்டு மாவட்டம், மாமல்லபுரம் பகுதிக்கு நேற்று முன்தினம் இரவு நடிகை யாஷிகா ஆனந்த், ஹைதராபாத்தைச் சேர்ந்த வந்திரெட்டி பவனி என்ற பெண் தோழி மற்றும் ஆண் நண்பர்கள் இருவருடன் உணவகத்துக்கு வந்ததாகத் தெரிகிறது. பின்னர், நள்ளிரவில் உணவகத்தில் இருந்து சென்னை நோக்கி இவர்கள் அனைவரும் காரில் ஈசிஆர் சாலையில் சென்றனர்.



▲ யாஷிகா ஆனந்த்

காரை யாஷிகா ஆனந்த் ஓட்டிச் சென்றுள்ளார். அப்போது, சூளேரிக்காடு பகுதியில் அதிவேகமாக சென்ற கார் கட்டுப்பாட்டை இழந்து, சாலையின் சென்டர் மீடியனில் மோதி அருகே உள்ள பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதில், நடிகையின் பெண் தோழி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். தகவல் அறிந்த மாமல்லபுரம் போலீஸார், சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று, காயமடைந்தவர்களை மீட்டு பூஞ்சேரியில் உள்ள விபத்து முதலுதவி சிகிச்சை மையத்துக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும், மேல் சிகிச்சைக்காக நடிகை யாஷிகா மற்றும் அவரது இரு ஆண் நண்பர்கள் சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மேலும், இறந்தவரின் உடலை பிரேத பரிசோதனைக்காக செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். சம்பவம் தொடர்பாக வழக்குப் பதிவு செய்த மாமல்லபுரம் போலீஸார், மதுபோதையில் அதிவேகமாக கார் ஓட்டியதால் விபத்து ஏற்பட்டதா என விசாரணை மேற்கொண்டுள்ளனர்.


AMRITA VISHWA VIDYAPEETHAM DEEMED TO BE UNIVERSITY
School of Engineering
CHENNAI | COIMBATORE
மற்றும்
இந்து தமிழ் திசை
வழங்கும்
உயர்வுக்கு உயர் கல்வி
இணைந்து வழங்குவோர்
SAVEETHA ENGINEERING COLLEGE
CHENNAI INSTITUTE OF TECHNOLOGY
பிளஸ் 2 முடித்த மாணவர்களுக்கான சிறப்பு ஆன்லைன் வழிகாட்டி நிகழ்ச்சி
COMPUTER SCIENCE & COMMUNICATION
Date: 30.07.2021 (Friday) Timing: 4:30pm to 6:30pm
COMMERCE & CHARTERED ACCOUNTANCY
Date: 31.07.2021 (Saturday) Timing: 4:30pm to 6:30pm
AEROSPACE & AERONAUTICAL
Date: 01.08.2021 (Sunday) Timing: 4:30pm to 6:30pm
To participate in the event, register
https://bit.ly/3zwpBWu
Like us @ https://www.facebook.com/hindutamilevents
Subscribe Us @ YouTube https://bit.ly/3dHj4Q9


# கும்பகோணம் நிதி நிறுவன மோசடி வழக்கில் மேலும் 2 பேர் கைது

● பால்பண்ணையில் கோட்டாட்சியர் ஆய்வு

■ கும்பகோணம்

கும்பகோணம் நிதி நிறுவன மோசடி வழக்கில், அங்கு பணியாற்றிய மேலும் 2 ஊழியர்கள் கைது செய்யப்பட்டனர்.

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் ஸ்ரீநகர் காலனி தீட்சிதர் தோட்டத்தைச் சேர்ந்தவர் எம்.ஆர்.கணேஷ். இவரது சகோதரர் எம்.ஆர்.சுவாமிநாதன். இவர்கள் இருவரும் நிதி நிறுவனம் நடத்தி கோடிக்கணக்கான ரூபாய் மோசடி செய்ததாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில், கும்பகோணத்தைச் சேர்ந்த ஜபருல்லா- பைரோஜ்பானு தம்பதியர், அந்த நிதி நிறுவனத்தில் தாங்கள் முதலீடு செய்த ரூ.15 கோடியை தராமல் ஏமாற்றிவிட்டதாக கொடுத்த புகாரின்பேரில், மாவட்ட குற்றப்பிரிவு போலீஸார் வழக்கு பதிவு செய்து, நிதி நிறுவன பொது மேலாளர் ஸ்ரீகாந்த்(56) என்பவரை கடந்த 21-ம் தேதி கைது செய்தனர். மேலும், நிதி நிறுவன அதிபர்களான எம்.ஆர்.கணேஷ் சகோதரர்களை தேடி வருகின்றனர்.

இந்நிலையில், நிதி நிறுவனத்தில் கணக்காளர்களாக பணியாற்றிய கும்பகோணம் டபீர் கீழத் தெருவைச் சேர்ந்த மீரா(30), அவரது தம்பி ஸ்ரீதர் (29) ஆகியோர் நேற்று முன்தினம் இரவு வெளியூருக்குச் செல்ல முயன்றபோது, கும்பகோணம் பேருந்து நிலையத்தில் இருவரையும் தனிப்படை போலீஸார் கைது செய்து, மாவட்ட குற்றப்பிரிவு போலீஸாரிடம் ஒப்படைத்தனர்.

### பால்பண்ணையில் ஆய்வு

இதற்கிடையே, கும்பகோணம் கீழகொற்கை, மருதாநல்லூரில் உள்ள எம்.ஆர்.கணேஷுக்கு சொந்தமான 3 பால் பண்ணைகளில் உள்ள மாடுகளுக்கு போதிய தீவனம் இல்லாமல் பசியில் இருப்பதால், அவற்றை அருகில் உள்ள கோசாலைக்கு மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஆட்சியருக்கு செல்போன் வாயிலாக காவிரி விவசாயிகள் பாதுகாப்பு சங்கத்தினர் கோரிக்கை விடுத்தனர்.

இதையடுத்து, கும்பகோணம் கோட்டாட்சியர் சுகந்தி தலைமையில் கால்நடை மருத்துவர்கள், வருவாய்த் துறையினர் நேற்று 3 பால் பண்ணைகளுக்கும் சென்று, அங்குள்ள மாடுகளின் உடல்நலம், தீவனங்களின் இருப்பு நிலவரம் குறித்து ஆய்வு செய்தனர். மேலும், ஆடுதுறை அருகே கோவிந்தபுரத்தில் உள்ள கோசாலை மாடுகளை பராமரிப்பது தொடர்பாக, திருவிடைமருதூர் வட்டாட்சியர் ஆய்வு செய்து, ஆட்சியருக்கு தகவல் அளித்தார்.

இந்து தமிழ் திசை

# வணிக வீதி

அறிவே செல்வம்

திங்கள், ஜூலை 26, 2021

vanigaveedhi@hindutamil.co.in



# மாஸ்டர் கார்டுக்குத் தடை

## நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்படுமா?

**இந்தியாவில் நடைபெறும் டிஜிட்டல் பரிவர்த்தனையில்40 சதவீதம் மாஸ்டர்கார்டு மூலம் நடைபெறுகிறது என்கிறது ஒரு புள்ளிவிவரம். பணமதிப்பிழப்பு, கரோனா பாதிப்புகளுக்குப் பிறகு, நாட்டின் பொருளாதாரம் மீண்டெழும் நேரத்தில், நுகர்வு சக்திக்கு ஊக்கமாக விளங்கும் இத்தகைய கிரெடிட் கார்டுகளின்தடை கொஞ்சம் பொருளாதார சுணக்கத்தையே உண்டாக்கும்.**



ஆடிட்டர் ஜி.கார்த்திகேயன்
karthi@gkmtax.com

**இந்தியாவில், 2016-ம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட பண மதிப்பு நீக்க நடவடிக்கைக்குப் பிறகு, டிஜிட்டல் பண பரிவர்த்தனை நடவடிக்கைகள் அதிகமானது. கிரெடிட் கார்டு, டெபிட் கார்டு, மொபைல் செயலி வாயிலாக பணம் செலுத்துவதும் பெறுவதும் அதிகரித்தது. கரோனா பரவலுக்குப் பிறகு கடந்த இரண்டு வருடங்களாக, யு.பி.ஐ., (Unified Payments Interface) வாயிலாக, ஜி-பே, ஜியோ-பே, அமேசான்-பே, போன்-பே, பேடிஎம், வாட்ஸ்அப்-பே போன்ற மொபைல் செயலி வழி பணப் பரிவர்த்தனை மேலும் அதிகரித்துள்ளது. இந்தப் பரிவர்த்தனைகள் என்.பி.சி.ஐ., (National Payments Corporation of India) வின் கீழ், ரிசர்வ் வங்கி கட்டுப்பாட்டின் கீழ்வருகிறது.**



முன்பு வங்கிகளில் பணம் செலுத்தவும், பணம் எடுக்கவும், பொதுமக்கள் நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டியிருந்தது. வர்த்தக நிறுவனங்களின், ஒருநாளின், பெரும்பாலான பொழுது, வங்கி நடவடிக்கைகளிலேயே கழிந்தது. கிரெடிட், டெபிட் கார்டுகளும், ஏ.டி.எம்., பயன்பாடுகளும் வந்தபின், வங்கி கணக்குகளில் பணம்செலுத்துவதும், பணம் எடுப்பதும் மிகவும் சுலபமானது. ரொக்கத்தை கத்தை, கத்தையாக பர்சில் எடுத்துச் செல்லாமலேயே, ஒரு அட்டை வாயிலாக அனைத்தையும் வாங்க முடிந்தது. பயணங்கள் எளிதாயின.

பணம் செலவழிப்பதும் பாதுகாப்பாக இருந்தது. ஒரு காலத்தில், குறிப்பிட்ட வாடிக்கையாளர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டு வந்த கிரெடிட் கார்டுகள், பின்னர் மக்களிடையே பணப் புழக்கம் அதிகரிக்கவும், நுகர்வு கலாச்சாரத்தை நிலைநிறுத்தவும், விருப்பமுள்ளவர்கள் அனைவருக்கும் வழங்கப்பட்டது. வாடிக்கையாளர்களின் வருமான அளவு, கிரெடிட் ஸ்கோர் அடிப்படையில் கடன் அட்டை(கிரெடிட்கார்டு) வரம்பு நிர்ணயிக்கப்பட்டது.

கிரெடிட்கார்டு வாயிலாக செலவழிக்கும் பணத்தை, குறிப்பட்ட கால இடைவெளிக்குள் திரும்ப செலுத்தி விடலாம். அந்த நாட்களுக்கு வட்டிகிடையாது என்பதால், அதைப் பயன்படுத்தி, மக்கள் பொருட்கள் வாங்க ஆரம்பித்தனர். இதனால் மேற்கத்திய பொருளாதார கலாச்சாரம் இங்கும் பரவியது. கிரெடிட்கார்டு கையில் இருந்தால், எதற்கும் ஆசைப்படலாம் என்றும் ஆனது. இப்படி, கடந்த10 ஆண்டுகளாக, கிரெடிட் கார்டு புழக்கம், நுகர்வு கலாச்சாரத்தை செழிக்க வைத்தது. அதனால், நாட்டின் பொருளாதாரம் செழித்தது. வங்கிகளின் நடவடிக்கைகள் பெருகியது. மக்களின் தேவைகள் பூர்த்தியானது.

இப்படியான கிரெடிட், டெபிட், பிரீபெய்டு கார்டுகள், தங்கள் வாடிக்கையாளர்களுக்காக, அந்தந்த வங்கிகளாலும், என்.பி.எப்.சி. ( Non-Banking Financial Company) எனப்படும் வங்கி அல்லாத பிற நிதி நிறுவனங்களாலும் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு வங்கியும் தங்கள் பெயரில் கிரெடிட்/டெபிட் கார்டு வழங்கினாலும், ஒவ்வொருவரும் தனித்தனியாக அவற்றை நிர்வகிப்பது, கண்காணிப்பதும் சிரமம். இந்திய அளவிலும், சர்வதேச அளவிலும் இதற்கான 'பேமண்ட் செட்டில்மெண்ட் கேட்வே'க்கள் உள்ளன. அதில், விசா கார்டு, மாஸ்டர் கார்டு போன்ற பன்னாட்டு நிறுவனங்கள் முதன்மை இடங்களில் உள்ளன.

உலகம் முழுவதும் பெரும்பாலான நாடுகளில் உள்ள வங்கிகள், என்.பி.எப்.சி.க்கள் இவற்றின் சேவையைப் பயன்படுத்துகின்றன. 1966 இல் தொடங்கப்பட்டு பல்வேறு நாடுகளில், 25,000க்கும் மேற்பட்ட வங்கி/ நிதி நிறுவனங்களுக்கு சேவை அளிக்கும் மாஸ்டர் கார்டின்2020 ஆம் ஆண்டு வருமானம், 1,530 கோடி அமெரிக்க டாலர். உலகின் 2வது பெரிய 'பேமண்ட் கேட்வே' ஆக மாஸ்டர் கார்டு திகழ்கிறது. ஆகஸ்ட்2020 கணக்கின்படி, 5.8 கோடி கிரெடிட் கார்டுகள் பயன்பாட்டில் உள்ளதாக ஒரு புள்ளி விவரம் தெரிவிக்கிறது.

மத்தியில் மோடி தலைமையிலான பாஜக அரசு பொறுப்பேற்றதும், டிஜிட்டல் இந்தியா, டிஜிட்டல் பேமன்ட், அனைவருக்கும் வங்கிக்கணக்கு, வங்கி பரிவர்த்தனைகளை ஊக்குவிப்பது போன்றவை வேகமெடுத்தன. சாலையோர காய்கறி வியாபாரிகளுக்கும், பானி பூரி விற்பவர்களுக்கும் கூட, இணைய வசதியும், டிஜிட்டல் பேமெண்ட் சாதனங்களும் கிடைத்ததால், ரூபாய் நோட்டை தூக்கவேண்டிய அவசியமில்லாமல் போயின. ஷாப்பிங் செல்லும் எல்லோருக்கும் கார்டோ, மொபைல் செயலியோ மட்டும் போதுமானதாக இருக்கிறது.



இது ஒருபுறமிருக்க, டிஜிட்டல் பண பரிவர்த்தனைகளை மத்திய அரசு கண்காணிக்க தொடங்கியது. மேலும், 5 வருடங்களுக்குமுன் பணமதிப்பிழப்பு நடவடிக்கை தொடங்கப்பட்டதன் நோக்கமே, லஞ்சம், ஊழல், வரி ஏய்ப்பு போன்றவற்றால் சம்பாதிக்கப்பட்டு, கணக்கில் காட்டப்படாமல் பதுக்கப்பட்டிருக்கும் கறுப்புப் பணத்தை ஒழிப்பது, தேசப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக விளங்கும், தேசவிரோத சக்திகளுக்கு முறைகேடாக நடக்கும் பணபரிமாற்றத்தை தடுப்பது போன்றவைதான். அதையொட்டி, டிஜிட்டல் பண பரிவர்த்தனைகளிலும் நிறையகட்டுப்பாடுகள் வந்தன.

அதேபோல், அமெரிக்காவை தலைமையிடமாக கொண்டுள்ள மாஸ்டர்கார்டு நிறுவனத்தின் இந்திய வாடிக்கையாளர்களின் நிதிசெயல்பாடு விவரங்கள் அமெரிக்க கம்ப்யூட்டர் சர்வரில் சேமிக்கப்பட்டு வந்தன. அதை மாற்றி, இந்திய சர்வரிலேயே அதன் விவரங்கள் சேமிக்கப்பட வேண்டும். அப்போதுதான், அவசியம் ஏற்படும்போது, ரிசர்வ்வங்கி, தடையற்று கண்காணிக்க முடியும். ஆகவே இந்தியாவுக்குகென்று தனிதகவல் சேமிப்பு முறையை உருவாக்க வேண்டும் என்று இந்திய ரிசர்வ் வங்கி2018ம் ஆண்டு ஏப்ரல் மாதம் மாஸ்டர் கார்டுக்கு அறிவுறுத்தல் கடிதம் அனுப்பியது.

அந்த மாற்றங்களை செய்யாமல், கடந்த3 வருடங்களாக, காலம் தாழ்த்திவந்த காரணத்தால், ஜூலை22 ஆம் தேதிமுதல், மாஸ்டர் கார்டுகள் புதிதாக இந்தியாவில் வழங்குவதற்கு தடை விதித்து இந்தியரிசர்வ் வங்கி உத்தரவிட்டுள்ளது.

இந்த நடவடிக்கை தொடங்கியதுமே, இந்திய ரிசர்வ் வங்கிவழிகாட்டுதலில், 'பேமன்ட் செட்டில்மென்ட் அன்சிஸ்டம்ஸ் ஆக்ட்' கீழ், 'நேஷனல் பேமண்ட் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா', நம் நாட்டுக்கென்று, லாப நோக்கமின்றி உருவாக்கிய, "ரூபே" கார்டுகளை பிரபலப்படுத்துவதற்காகவே, மாஸ்டர் கார்டுக்கு "செக்" வைக்கப்பட்டுள்ளது என்ற பேச்சு கிளம்பியது. தேசப் பாதுகாப்பிற்கான நடவடிக்கை என்று பேசப்பட்டது.

நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும்போது ஒவ்வொரு நாடும் அதற்கேற்ப சட்டங்களை நிறைவேற்றும். அப்படித்தான், ட்விட்டர், பேஸ்புக், வாட்ஸ்அப் போன்ற சமூக வலைதளங்களுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. ரஷ்யா, துபாய், சீனா போன்ற பல நாடுகளில், வாட்ஸ்அப் அழைப்புகளுக்கு அனுமதி இல்லை.

மாஸ்டர் கார்டுக்கு விதிக்கப்பட்ட தடையால் இந்தியாவின் நம்பிக்கை உலக அரங்கில் அதிகரிக்குமே தவிர குறையாது. ஏனெனில் அந்நிய முதலீட்டையோ, வர்த்தகத்தையோ, பண பரிவர்த்தனைகளையோ தடைசெய்யும் நோக்கம் அரசுக்கு இல்லை. "எங்கள் நாட்டு வாடிக்கையாளர் விவரங்கள், எங்கள் நாட்டிலேயே இருக்க வேண்டும்" என்று கேட்பதில் என்னதவறு இருக்கிறது. மாஸ்டர் கார்டு



தடைக்குப்பிறகு ஏற்பட்டுள்ள இப்போதைய சவால் என்னவென்றால், மாஸ்டர்கார்டுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு, அதன் "கேட்வே" வாயிலாக, பரிவர்த்தனைகள் நடத்திவந்த, எச்.டி.எஃப்.சி. வங்கி, ஐ.சி.ஐ.சி.ஐ., வங்கி, எஸ்.பேங்க்,ஆக்சிஸ் வங்கி, ஆர்.பி.எல்., வங்கி, 'பஜாஜ் பின்சர்வ்' போன்றவை தங்கள் வாடிக்கையாளர்களுக்கு புதிய கார்டுகள் வழங்க இயலாது. அவர்கள் புதிய வியாபார கூட்டாளிகளைத் தேடவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இந்த இக்கட்டான சூழலிலும் ஒரு சாதகம் என்னவென்றால், இதை பயன்படுத்தி புதிய தொழில் முனைவுகள் உருவாகலாம். புதிய 'ஸ்டார்ட்-அப்'கள், புதிய விர்ச்சுவல் கார்டுகள்அறிமுகப்படுத்தப்படலாம்.

ஒரு ஆறுதலான விஷயம் என்னவென்றால், இப்போது மாஸ்டர்கார்டு பயன்படுத்தும் வாடிக்கையாளர்கள் யாரும், இந்திய ரிசர்வ் வங்கியின் உத்தரவால் பாதிக்கப்படமாட்டார்கள். இந்தியாவில் நடைபெறும் டிஜிட்டல் பரிவர்த்தனையில்40 சதவீதம் மாஸ்டர்கார்டு மூலம் நடைபெறுகிறது என்கிறது ஒரு புள்ளிவிவரம்.


பணமதிப்பிழப்பு, கரோனா பாதிப்புகளுக்குப் பிறகு, நாட்டின் பொருளாதாரம் மீண்டெழும் நேரத்தில், நுகர்வு சக்திக்கு ஊக்கமாக விளங்கும் இத்தகைய கிரெடிட் கார்டுகளின்தடை கொஞ்சம் பொருளாதார சுணக்கத்தையே உண்டாக்கும். அதை களைய, மத்தியஅரசும், இந்திய ரிசர்வ் வங்கியும், சம்பந்தப்பட்ட பேமன்ட் நிறுவனங்களும் இணைந்து சுமூகமுடிவு காண வேண்டும்.

## திணறடித்து வரும் "யு.பி.ஐ.,"!

விதிமீறல்கள் காரணங்களுக்காக சில மாதங்களுக்கு முன்பு அமெரிக்கன் எக்ஸ்பிரஸ், டைனர்ஸ் கிளப் கார்டுகளைப் புதிதாக விநியோகிக்க தடை விதிக்கப்பட்டது. அதேவரிசையில் இப்போது மாஸ்டர்கார்டு இணைந்துள்ளது. இந்தியாவில் மாஸ்டர்கார்டு, விசா கார்டுகள்தான் அதிகம் பயன்பாட்டில் உள்ளன. அமெரிக்கன் எக்ஸ்பிரஸ், டைனர்ஸ் கிளப் கார்டுகள் எண்ணிக்கைபெரிய அளவில் இல்லை.

இந்தியாவில் வெளிநாட்டு கார்டுகள் பயன்பாட்டுக்கான கட்டுப்பாடு அறிமுகமாகும் சூழல் ஏற்பட்டபோது, "இந்தியாவில்தனி சர்வர் அமைப்பு ஏற்படுத்தினால், சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் நடைமுறை செலவு அதிகரிக்கும்" என்றுகூறிஅமல்படுத்த தயங்கின. மேலும், "இப்படி ஒவ்வொரு நாட்டுக்கும் தனித்தனி சர்வர் அமைக்கப்படும் பட்சத்தில், சர்வதேச அளவில் நடைபெறும் கிரெடிட் கார்டு மோசடிகளைகண்டறிவது சிரமமான செயல்" என்று அமெரிக்க நிறுவனங்கள்கூறின.

இங்கே இன்னொரு விஷயத்தையும் குறிப்பிட வேண்டும், இந்தியா தனக்கான, தனிபேமன்ட் கேட்வே, "யு.பி.ஐ.," உருவாக்கியதும், நம் நாட்டு மக்கள், அதற்கு எளிதாக பழகிப் போனார்கள். கடந்தஜூன் மாதம் மட்டும், 280 கோடி பரிவர்த்தனை வாயிலாக, ரூ. 5.5 லட்சம் கோடிமதிப்புக்கான வர்த்தகம் நடந்துள்ளது. "யு.பி.ஐ.," இன் இந்த இமாலய வளர்ச்சியால், மாஸ்டர்கார்டு போன்ற சர்வதேச "பேமண்ட்' கேட்வே" நிறுவனங்களின் வர்த்தகத்துக்கு போட்டி ஏற்பட்டது. மாஸ்டர் கார்டு பேமண்ட் சேவையை, இந்தியாவில்75 வங்கிகள்/ வங்கி சாரா நிதி நிறுவனங்கள் பயன்படுத்துகின்றன. இந்தியாவில் கார்டு பயன்படுத்துபவர்களின் மூன்றில் ஒரு பகுதியினர், மாஸ்டர்கார்டு வாடிக்கையாளர்களாக உள்ளனர்.



ஓவியம்: முத்து



# விண்ணும் வசப்படும்...

**"வானம் வசப்படும்", "வானம் தொட்டு விடும் தூரம்தான்" - இவ்விரண்டு தலைப்புகளில் தமிழில் கதை, கவிதைகள் பல வந்துள்ளன. நம்பிக்கை ஊட்டும் வார்த்தைகளாக இவை பயன்படுத்தப்படுகின்றன. ஆனால், வானம் வசப்பட்டு பல தசாப்தங்கள் ஆகிவிட்டன. "விண்ணும் வசப்படும்" என்று சொல்லும் காலகட்டத்துக்கு நாம் வந்துவிட்டோம்.**

ஜூலை 11-ம் தேதி லண்டனைச் சேர்ந்த கோடீஸ்வர தொழிலதிபர் ரிச்சர்ட் பிரான்சனும் ஜூலை 20-ம் தேதி அமேசான் நிறுவனத்தின் நிறுவனர் ஜெஃப் பிஸோஸும் விண்வெளிக்குப் பயணித்து திரும்பியுள்ளனர். வரும் செப்டம்பரில் விண்வெளி பயணத்துக்குத் திட்டமிட்டு வருகிறார் எலான் மஸ்க்.

இதுவரையில் விண்வெளிப் பயணம் என்பது அத்துறை விஞ்ஞானிகளுக்கு மட்டுமே சாத்தியமானதாக இருந்தது. ஆனால், தற்போது யார் வேண்டுமானாலும் விண்வெளிக்குச் செல்லலாம் என்ற சூழல் உருவாகியிருக்கிறது.

இதற்கு முன்பு2007-ம் ஆண்டு சார்லஸ் சிமோனியி என்ற கோடீஸ்வரரும் 2008-ல் ரிச்சர்ட் காரியோட் என்ற கோடீஸ்வரரும் விண்வெளி பயணம் மேற்கொண்டனர். அவர்கள் தங்களது ஆசையை பூர்த்தி செய்து கொள்வதற்காக அந்தப் பயணத்தை மேற்கொண்டனர். ஆனால், ரிச்சர்ட் பிரான்சனும் ஜெஃப் பிஸோஸும் ஆசைக்காக மட்டும் விண்வெளிக்குச் செல்லவில்லை. விண்வெளிப் பயணத்தை சுற்றுலாவாக மாற்ற அவர்கள் திட்டமிட்டுள்ளனர். விண்வெளிக்குச் சென்றுவர விரும்பும் வசதி படைத்தவர்களை அழைத்துச் செல்ல முடிவு அவர்கள் செய்துள்ளனர். விண்வெளி சுற்றுலாவில் எலான் மஸ்க்கின் 'ஸ்பேஸ்எக்ஸ்' நிறுவனமும் இணைய உள்ளது.

புவியிலிருந்து 80 கி.மீ முதல் 100 கி.மீ. தூரம் வரையிலான விண்வெளிப் பகுதிக்கு பயணிகளை அழைத்துச் சென்று புவியீர்ப்பு விசை இல்லாத நிலையை உணர வைத்து அவர்களை திரும்ப அழைத்து வருவதே திட்டமாகும்.

70 வயதாகும் ரிச்சர்ட் பிரான்சன் மற்றும் 57 வயதாகும் ஜெஃப் பிஸோஸ் இருவருமே முதல் தலைமுறை கோடீஸ்வரர்கள். இவர்கள் தாங்களாகவே தொழில் தொடங்கி அதில் உச்சம் தொட்டவர்கள். 1960-ம் ஆண்டில் பள்ளிப் படிப்பை பாதியில் நிறுத்தியவர் ரிச்சர்ட் பிரான்சன். தற்போது அவரது வர்ஜின் குழும நிறுவனங்களின் ஆண்டு வருமானம் 2,200 கோடி டாலராகும். ஆன்லைன் புத்தக நிலையத்தை சியாட்டில் புறநகர் பகுதியில் உள்ள தனது வீட்டின் கார் கேரேஜில் தொடங்கிய ஜெஃப் பிஸோஸ், இன்று உலகின் கோடிஸ்வரர்களில் பட்டியலில் முதல் இடத்தில் உள்ளார்.தான் தொடங்கிய 'அமேசான்' நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி பதவியிலிருந்து விலகி, தனது அடுத்த இலக்கான விண்வெளி பயண திட்டத்தில் அவர் களமிறங்கியுள்ளார்.

'வர்ஜின் கேலக்டிக்' நிறுவனம் மூலம் ரிச்சர்ட் பிரான்சனும், 'புளூ ஆரிஜின்' மூலம் ஜெஃப் பிஸோஸும் விண்வெளி பயணத்துக்கான டிக்கெட்டுகளை விற்பனை செய்ய உள்ளனர்.

ரிச்சர்ட் பிரான்சனின் 'வர்ஜின் கேலக்டிக்' ராக்கெட்டில் 6 பேர் பயணிக்க முடியும். இதில் 2 பேர் ராக்கெட் செலுத்தும் பைலட். நான்கு பேர் பயணிகள். தரையிலிருந்து புறப்பட்டு 90 நிமிடத்தில் விண்வெளி பகுதியைத் தொட்டுவிட்டு அங்கு பயணிகளுக்கு எடையற்ற நிலையை உணர வைத்தபின் தரைக்குத் திரும்பும் வகையில் பயண திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. 'வர்ஜின் கேலக்'டிக்கில் பயணம் செய்ய இதுவரையில் 600 பேர் முன்பதிவு செய்துள்ளனர். ஒரு டிக்கெட் விலை ரூ.1.8 கோடி. ஜெஃப் பிஸோஸின் 'புளூ ஆரிஜின்' ராக்கெட்டிலும் 6 பேர் பயணிக்க முடியும். ஒரு டிக்கெட்டின் விலை ரூ.1.4 கோடி. எலான் மஸ்க் நிறுவனமான 'ஸ்பேஸ்எக்ஸ்' ராக்கெட்டில்7 பேர் பயணிக்க முடியும். மூன்று முதல் நான்கு நாட்கள் விண்வெளியில் தங்கி பிறகு தரைக்குத் திரும்பும் வகையில் இவரது நிறுவனம் பயண திட்டத்தை வகுத்துள்ளது.

ஒரு காலத்தில் விமான பயணம் என்பது வசதி படைத்தவர்களுக்கு என்றிருந்தது. கால சுழற்சியில் ஒரு ரூபாய் கட்டணத்துக்குகூட விமான பயணம் சாத்தியம் என்பதை 'டெக்கான் ஏவியேஷன்' இந்தியாவில் நிரூபித்தது.

இப்போது விண்வெளி பயண கட்டணம் கோடியில் இருந்தாலும் அடுத்து லட்சமாகக் குறைய வாய்ப்புள்ளது. வரும் காலங்களில் அதிக நிறுவனங்கள் விண்வெளி சுற்றுலாவுக்கு ராக்கெட் விடும்போது இது மேலும் குறையும். அப்போது, செல்வந்தர்களுக்கும் மட்டுமல்ல அனைவருக்கும் விண்வெளி வசப்படும்.!

TAMILTH ALL 1 National_01 A.M.PRABHAKARAN Time





விவசாயிகள் போராட்டத்தில் உயிரிழந்தவர்கள் குறித்த புள்ளிவிவரங்கள் இல்லை என்று மத்திய வேளாண் அமைச்சர் கூறியிருக்கிறார். இதன்மூலம் விவசாயிகளை மத்திய அரசு இழிவுபடுத்தியுள்ளது.

● **பிரியங்கா காந்தி,** காங்கிரஸ் பொதுச்செயலாளர் ●





கடந்த 2019 மக்களவைத் தேர்தலில் மம்தா தோல்வியை தழுவினார். 2024 தேர்தலிலும் அவர் தோல்வியை தழுவுவது உறுதி. 3–வது முறையாக நரேந்திர மோடியை பிரதமராக்க மக்கள் ஏற்கெனவே முடிவு செய்துவிட்டனர்.

● **திலீப் கோஷ்,** மேற்குவங்க பாஜக தலைவர் ●




| ஒரே நாளில் | இதுவரை |
|---|---|
| 40 ஆயிரம் பேர் குணமடைந்தனர் | 3.05 கோடி பேர் குணமடைந்தனர் |
| 51.18 லட்சம் பேருக்கு தடுப்பூசி | 43.31 கோடி பேருக்கு தடுப்பூசி |
| 17.18 லட்சம் பரிசோதனை | 45.62 கோடி பரிசோதனை |

## சின்னச் சின்னதாய்...

### கொல்லப்பட்டவர் மனைவிக்கு ரூ.15 லட்சம் ஆயுள் காப்பீட்டு கழகம் வழங்க உத்தரவு

**அகமதாபாத்:** குஜராத்தை சேர்ந்தவர் நரேந்திரசின் பார்மர். கடந்த 2009-ம் ஆண்டு இவர் சுட்டுக் கொல்லப்பட்டார். போலீஸார் எப்.ஐ.ஆர். பதிவு செய்து விசாரித்தனர். எனினும், பார்மர் எதற்காகக் கொல்லப்பட்டார், யார் கொன்றது போன்ற எந்த விவரங்களும் தெரியவில்லை என்று கூறி போலீஸார் வழக்கை முடித்துக் கொண்டனர்.

இதற்கிடையில், பார்மர் ஆயுள் காப்பீட்டு கழகத்தில் (எல்ஐசி) வேறு வேறு விதமான 19 பாலிசிகளை எடுத்து வைத்திருந்தார். அவற்றை எல்ஐசி.யில் கொடுத்து, காப்பீட்டு தொகையை வழங்க வேண்டும் என்று பார்மரின் மனைவி சேத்னா கோரினார். ஆனால், "பார்மர் விபத்தில் இறக்கவில்லை. அவர் கொலை செய்யப்பட்டுள்ளார். எனவே, காப்பீடு வழங்க முடியாது" என்று எல்ஐசி கூறிவிட்டது. இதையடுத்து, அகமதாபாத்தில் உள்ள கடந்த 2012-ம் ஆண்டு நுகர்வோர் குறைதீர்ப்பு மையத்தில் சேத்னா முறையிட்டார். அங்கும் சேத்னாவின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. அதன்பின், குஜராத் மாநில நுகர்வோர் குறைதீர்ப்பு ஆணையத்தில் சேத்னா முறையிட்டார். வழக்கை விசாரித்த ஆணையம், "நரேந்திரசின் பார்மருக்கும் கொலை செய்யப்படுவதற்கும் தொடர்பு இல்லை. அவர் யாரையும் ஆத்திரமூட்டும் வகையில் செயல்படவில்லை. மேலும், வேண்டுமென்றே பார்மர் செய்த செயலினால் அவர் கொலை செய்யப்படவில்லை. எனவே, இந்தக் கொலையையும் தற்செயல் மரணமாக கருதி 19 பாலிசிக்கான தொகை ரூ.14.6 லட்சத்தை சேத்னாவுக்கு வழங்க வேண்டும்" என்று உத்தரவிட்டது.



▲ கடந்த 1999-ம் ஆண்டு மே – ஜூலை காஷ்மீரின் கார்கில் பகுதியை ஆக்கிரமிக்க பாகிஸ்தான் ராணுவம் மற்றும் தீவிரவாதிகள் முயற்சித்தனர். அப்போது 'ஆபரேஷன் விஜய்' என்ற பெயரில் அவர்களை இந்திய ராணுவம் விரட்டியடித்தது. இதை நினைவுகூரும் விதமாக ஆண்டுதோறும் ஜூலை 26-ம் தேதி (இன்று) கார்கில் வெற்றி தினம் கொண்டாடப்படுகிறது. போரில் வெற்றி பெற்றது குறித்து இளம் ராணுவ வீரர்களுக்கு மூத்த ராணுவ அதிகாரிகள் நேற்று திராஸ் பகுதியில் எடுத்துக் கூறினர். படம்: பிடிஐ

### கன்வார் யாத்ரீகர்களை தடுக்க உத்தராகண்ட் எல்லையில் போலீஸ் குவிப்பு

**டேராடூன்:** உத்தராகண்ட் மாநிலம் ஹரித்துவாரில் ஆண்டுதோறும் ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் கன்வார் யாத்திரை நடைபெறுவது வழக்கம். இந்த புனித யாத்திரையின் போது, வட மாநிலங்களைச் சேர்ந்த லட்சக்கணக்கானோர் ஹரித்துவாருக்கு வந்து அங்குள்ள கங்கை நதியில் இருந்து நீர் எடுத்து, அதனை தங்கள் பகுதிகளில் இருக்கும் சிவன் கோயிலுக்கு கொண்டு செல்வார்கள்.

கடந்த ஆண்டு கரோனா பரவலால் கன்வார் யாத்திரை ரத்து செய்யப்பட்டது. நடப்பாண்டிலும் கரோனா இரண்டாம் அலை காரணமாக இந்த யாத்திரையை உத்தராகண்ட் அரசு ரத்து செய்தது. எனினும், உத்தரபிரதேச அரசு இந்த யாத்திரைக்கு அனுமதி கொடுத்தது. பின்னர், உச்ச நீதிமன்றத்தின் அறிவுறுத்தலின்பேரில், கன்வார் யாத்திரை ரத்து செய்யப்படுவதாக அம்மாநில அரசு அறிவித்தது.

எனினும், பக்தர்களில் ஒருபகுதியினர் வழக்கம் போல இந்த யாத்திரையை மேற்கொள்ள உள்ளதாக தெரிவித்துள்ளனர்.

இதுபோல் அனுமதியை மீறி, கன்வார் யாத்திரை மேற்கொள்ளும் யாத்ரீகர்களை உத்தராகண்ட் எல்லையிலேயே தடுத்து நிறுத்தி, திருப்பி அனுப்ப அம்மாநில அரசு முடிவு செய்துள்ளது. அதையடுத்து, உத்தரபிரதேசத்துடனான தங்கள் எல்லைப் பகுதிகளில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட போலீஸாரை உத்தராகண்ட் அரசு குவித்துள்ளது.



▲ இமாச்சலப் பிரதேசத்தில் உள்ள சங்லா பள்ளத்தாக்கில் நேற்று ஏற்பட்ட நிலச்சரிவில் பாறைகள் விழுந்ததால் சேதமடைந்த ஆற்றுப் பாலம். இந்த நிலச்சரிவில் சிக்கி 9 சுற்றுலா பயணிகள் உயிரிழந்தனர். படம்: பிடிஐ

## இமாச்சலில் நிலச்சரிவில் சிக்கி 9 சுற்றுலா பயணிகள் உயிரிழப்பு

■ **சிம்லா**

இமாச்சலப் பிரதேசத்தில் நேற்று ஏற்பட்ட பயங்கர நிலச்சரிவில் சிக்கி 9 சுற்றுலா பயணிகள் உயிரிழந்தனர்.

இமாச்சலப் பிரதேச மாநிலம் கின்னோர் மாவட்டத்தில் உள்ளது சங்லா பள்ளத்தாக்கு. இங்கு கடந்த சில தினங்களாக பலத்த மழை பெய்து வருவதால், மலைப் பகுதிகளில் நிலச்சரிவு ஏற்படக் கூடும் என வானிலை ஆய்வு மையம் அண்மையில் எச்சரித்திருந்தது.

இந்நிலையில், நேற்று மதியம் 1 மணியளவில் அங்குள்ள மலைப் பகுதியில் பயங்கர நிலச்சரிவு ஏற்பட்டது. இதில் அங்கிருந்த நூற்றுக் கணக்கான பெரிய பாறைகளும் சரிந்து விழுந்தன. அப்போது, மலை அடிவாரத்தில் இருந்த சுற்றுலா பயணிகளின் கார்கள் மீது பாறைகள் விழுந்ததில் 9 பேர் சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கி பரிதாபமாக உயிரிழந்தனர். 20-க்கும் மேற்பட்டோர் படுகாய மடைந்தனர். அவர்கள் அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால் உயிரிழப்பு அதிகரிக்கக் கூடும் என அஞ்சப்படுகிறது.

இதனிடையே, இந்தப் பாறைகள் விழுந்ததில் அங்கிருந்த ஆற்றுப்பாலம் இடிந்து தரைமட்டமானது. இதனால் அப்பகுதியில் போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக இமாச்சல் அரசு தெரிவித்துள்ளது.

(C) KSL Media Ltd.

### எனது தாயாரை முன்மாதிரியாக எடுத்துக்கொண்டு அனைவரும்

# கரோனா தடுப்பூசியை செலுத்தி கொள்ள வேண்டும்

● மன் கி பாத் நிகழ்ச்சியில் பிரதமர் நரேந்திர மோடி வேண்டுகோள்

■ **புதுடெல்லி**

எனது தாயாரை முன்மாதிரியாக எடுத்துக்கொண்டு அனைவரும் கரோனா தடுப்பூசியை செலுத்திக் கொள்ள வேண்டும் என்று பிரதமர் மோடி வேண்டுகோள் விடுத்தார்.

நரேந்திர மோடி முதன்முதலாக பிரதமராக பதவியேற்ற 2014-ம் ஆண்டு முதல் ஒவ்வொரு மாதத்தின் கடைசி ஞாயிற்றுக்கிழமையன்று, அகில இந்திய வானொலியில் 'மன் கி பாத்' (மனதின் குரல்) நிகழ்ச்சியில் பேசி வருகிறார். இந்நிலையில் நேற்று மன் கி பாத் தொடரின் 79-வது நிகழ்ச்சியில் பிரதமர் மோடி பேசியதாவது:

மற்ற நாடுகளின் கலாச்சாரத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஒரு நல்ல சூழ்நிலையை வளர்ப்பதிலும், இரு நாடுகளுக்கும் இடையிலான கலாச்சாரத்தைப் புரிந்து கொள்வதிலும் மக்கள் கவனம் செலுத்த வேண்டும்.

அண்மையில் ஜார்ஜியாவைச் சேர்ந்த பெண் துறவி கேட்டேவனின் நினைவுச் சின்னங்கள் இந்தியா சார்பில் ஜார்ஜியாவிடம் ஒப்படைக்கப்பட்டன. அதைப் போல சிங்கப்பூரில் சிலாட் சாலையிலுள்ள குருத்வாரா புதுப்பிக்கப்பட்டது.

இதுபோன்ற நிகழ்வுகள்தான் இரு நாடுகளிடையிலான உறவை பலப்படுத்தும். துறவி குயின் கேட்டேவன், ஜார்ஜியாவிலுள்ள அரச குடும்பத்தைச் சேர்ந்தவர். அவரது நினைவுச் சின்னங்களை 500 ஆண்டுகளாக பாதுகாத்து வைத்த கோவா மக்களுக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டுள்ள இந்திய அணிக்கு ஆதரவு அளிக்கும் வகையில் 'விக்டரி பஞ்ச்' என்னும் பரப்புரை சமூக வலைதளத்தில் தொடங்கப்பட்டுள்ளது. இந்த பரப்புரையின் மூலம் இந்திய அணியை நீங்களும் உற்சாகப்படுத்த வேண்டும்.

பாதுகாப்புப் படை வீரர்களின் துணிச்சல் மற்றும் ஒழுக்கத்தின் அடையாளமே கார்கில் போர். இதற்கு உலகமே சாட்சி. கார்கில் விஜய் திவஸ் நாள் கொண்டாடப்பட உள்ளது. எனவே, கார்கில் போர் வீரர்களுக்கு நாம் நமது வீர வணக்கத்தை செலுத்தி கொள்வோம்.

இப்போதெல்லாம், மணிப்பூர் உக்ருல் பகுதியில் ஆப்பிள் சாகுபடி பிரபலமடைந்து வருகிறது.

இதற்காக, இமாச்சல் சென்று பயிற்சி எடுத்து கொள்கிறார்கள். அதில் ஒருவர் ரிங்ஃபாமி. இவர் ஒரு ஏரோநாட்டிக்கல் இஞ்சினியர். கரோனாவுக்கு பிறகு, பெர் பழத்தின் சாகுபடி அதிகரித்துள்ளது.

திரிபுரா உனகோடியை சேர்ந்த இளம் நண்பரான பிக்ரம்ஜித் சக்மா பெர் பழ விவசாயம் மேற்கொண்டு லாபம் சம்பாதித்துள்ளார். அது மட்டுமின்றி, மற்றவர்களையும் ஊக்குவிக்கிறார்.

கரோனா பரவலை கட்டுப்படுத்த மத்திய அரசு தீவிர முயற்சி மேற்கொண்டு வருகிறது. நோய் பரவாமல் இருக்க நாம் அனைவரும் தடுப்பூசி செலுத்தி கொள்ள வேண்டும். இந்த விஷயத்தில் எனது தாயாரை முன்மாதிரியாகக் கொள்ளவேண்டும்.

100 வயதை நெருங்கும் எனது தாயார் 2 டோஸ் தடுப்பூசிகளையும் செலுத்திக் கொண்டுள்ளார். நானும் செலுத்திக் கொண்டுள்ளேன். தடுப்பூசி செலுத்திக் கொள்வதால் சில மணி நேரங்களுக்கு மட்டுமே காய்ச்சல் இருக்கும். அதற்காக பொதுமக்கள் பயப்படக்கூடாது. எந்தவித அச்சமும் இல்லாமல் பொதுமக்கள் தடுப்பூசியைப் போட்டுக் கொள்ளுதல் நலம். இதுவரை 42 கோடிக்கும் அதிகமான மக்கள் தடுப்பூசியை எடுத்துக் கொண்டுள்ளனர். தடுப்பூசி செலுத்திக் கொள்ளாமல் இருப்பது அபாயகரமானது. திருவிழாக்களின் மக்கள் கரோனா வழிகாட்டுதல் நெறிமுறைகளை பின்பற்ற வேண்டும். இவ்வாறு பிரதமர் மோடி பேசினார். - பிடிஐ

### தமிழக பெண்ணுக்கு பிரதமர் பாராட்டு

மன் கி பாத் நிகழ்ச்சியில் பிரதமர் நரேந்திர மோடி மேலும் பேசியதாவது:

தமிழகத்தின் நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த ராதிகா சாஸ்திரி என்ற பெண், அம்பர்க்ஸ் திட்டத்தை தொடங்கியுள்ளார். மலைப்பகுதிகளில் உள்ள நோயாளிகளுக்கு போக்குவரத்து வசதிகள் எளிதாக கிடைப்பதை இத்திட்டம் நோக்கமாக கொண்டுள்ளது. அவர் நடத்தும் சிற்றுண்டி விடுதியில் பணிபுரியும் நண்பர்களிடம் இருந்து நிதி திரட்டி உதவி வருகிறார் ராதிகா. இதனால், தற்போது, ஆறு அம்பர்க்ஸ் வண்டிகளை வாங்கி அவர் உதவி செய்து வருகிறார். அவரது முயற்சிக்கு எனது பாராட்டுக்கள்.

இதேபோல் ஒடிசா மாநிலம் சம்பல்பூர் மாவட்டம் பாபுபலி கிராமத்தைச் சேர்ந்த தினக்கூலித் தொழிலாளி ஐசக் முண்டா, உள்ளூர் உணவு வகைகளை தயார் செய்வது எப்படி, பழங்கால உணவுகளைத் தயார் செய்வது எப்படி, தனது கிராமத்தின் வரலாறு, தனது வாழ்க்கை முறை, குடும்ப விவகாரம், உணவு பழக்க வழக்கங்கள் போன்றவற்றை தனது யூடியூப் சேனலில் வெளியிட்டு நிறைய சம்பாதிக்கிறார். மற்றவர்களுக்கும் வழிகாட்டியாக இருக்கிறார். அவரது முயற்சி பல காரணங்களுக்காக வேறுபட்டது என்று நான் நினைக்கிறேன். குறிப்பாக இதன் மூலம், நகரங்களில் வசிக்கும் மக்கள் தங்களுக்கு அதிகம் தெரியாத வாழ்க்கை முறையைப் பார்க்க வாய்ப்பு கிடைக்கிறது. ஐசக் முண்டா கலாச்சாரம் மற்றும் உணவு வகைகளை சமமாக கலப்பதன் மூலம் சமூக வலைத்தளங்களில் கொண்டாடப்பட்டு வருகிறார். இவ்வாறு மோடி பாராட்டினார்.

## கடந்த 24 மணி நேரத்தில் 39,742 பேருக்கு தொற்று உறுதி

● கேரளா 46 சதவீதம் பேருடன் முதலிடம்

■ **புதுடெல்லி**

நாடு முழுவதும் கடந்த 24 மணி நேரத்தில் 39,742 பேருக்கு கரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. ஒரு நாளில் 535 பேர் உயிரிழந்துள்ளனர்.

மத்திய சுகாதார அமைச்சகத்தின் புள்ளிவிவரப்படி நேற்று காலையுடன் முடிந்த 24 மணி நேரத்தில் நாடு முழுவதும் 39,742 பேருக்கு புதிதாக கரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதில் 46 சதவீதம் பேருடன் (18,531) கேரளா முதலிடத்தில் உள்ளது. இதுபோல 24 மணி நேரத்தில் நாடு முழுவதும் கரோனாவால் 535 பேர் உயிரிழந்துள்ளனர். மொத்த உயிரிழப்பு 4.2 லட்சமாக அதிகரித்துள்ளது.

நாடு முழுவதும் கரோனாவுக்கு சிகிச்சை பெறுவோர் எண்ணிக்கை கடந்த 24 மணி நேரத்தில் 765 குறைந்து, 4.08 லட்சமாக உள்ளது. இது ஒட்டுமொத்தமாக பாதிக்கப்பட்டோரில் 1.31 சதவீதம் ஆகும்.

இதுவரை 45.62 கோடி மாதிரிகள் பரிசோதனை செய்யப் பட்டுள்ளன. ஒரு நாளில் 17.18 லட்சம் மாதிரிகள் பரிசோதிக் கப்பட்டன. நாடு முழுவதும் 43.31 கோடி தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. இதில் ஒரு நாளில் மட்டும் 51.18 லட்சம் டோஸ் செலுத்தப்பட்டது என்று சுகாதாரத் அமைச்சகம் கூறியுள்ளது. - பிடிஐ



▲ அசாம் மாநிலம் குவாஹாத்தியில் உள்ள காமாக்யா தேவி கோயிலுக்கு மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா நேற்று சென்று வழிபட்டார். அமித் ஷாவை கோயில் நிர்வாகிகள் வரவேற்று அழைத்துச் சென்றனர். படம்: பிடிஐ

### உயிரிழந்த முதியவரிடம் இருந்து எடுத்து 23 கி.மீ. தூரத்தை 22 நிமிடத்தில் கடந்து

# பிஎஸ்எப் காவலருக்கு கல்லீரல் மாற்று சிகிச்சை

● விரைந்து செல்ல உதவிய டெல்லி கிரீன் காரிடார்

■ **புதுடெல்லி**

டெல்லியில் பிஎஸ்எப் வீரருக்கு பொருத்துவதற்காக 23 கி.மீ. தூரத்தை 22 நிமிடத்தில் கல்லீரலுடன் டாக்டர்கள் விரைந்து சென்றுள்ளனர். இதற்கு பசுமை சாலைதான் உதவியுள்ளது.

மத்திய பிரதேச மாநிலம் குவாலியரைச் சேர்ந்த எல்லைப் பாதுகாப்புப் படை (பிஎஸ்எப்) காவலர் (47) ஒருவர் கல்லீரல் பாதிக்கப்பட்டு, 'லிவர் கோமா' நிலைக்கு சென்றார். அவருக்கு கல்லீரல் மாற்று அறுவைச் சிகிச்சை ஒன்றுதான் வழி என்று டாக்டர்கள் கூறியுள்ளனர். அதற்காக கல்லீரலுக்குப் பதிவு செய்துவிட்டு காத்திருந்தார்.

இந்நிலையில், தெற்கு டெல்லியில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் 70 வயது முதியவர் ஒருவர் மூளை சாவு அடைந்தார். அவரது கல்லீரலை தானம் அளிக்க அவரது குடும்பத்தினர் முன்வந்தனர். இதையடுத்து, அந்த மருத்துவமனையில் இருந்து பிஎல்கே மேக்ஸ் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனைக்கு கல்லீரல் கொண்டு செல்லப்பட்டு பிஎஸ்எப் வீரருக்கு டாக்டர்கள் பொருத்தி உள்ளனர்.

இதுகுறித்து பிஎல்கே மருத்துவமனை கல்லீரல் மாற்று அறுவைச் சிகிச்சை பிரிவு தலைவருமான டாக்டர் அபிதீப் சவுத்ரி நேற்று கூறியதாவது:

பிஎஸ்எப் காவலர் கடந்த மே மாதம் பிஎல்கே மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவரது கல்லீரல் முற்றிலும் பாதிக்கப்பட்டிருந்தது. அவரது குடும்ப உறுப்பினர்களின் கல்லீரல் அவருக்கு பொருந்தவில்லை. இதையடுத்து கல்லீரல் தானத்துக்காகக் காத்திருந்தார். தெற்கு டெல்லி மருத்துவமனையில் உயிரிழந்த முதியவரின் கல்லீரலை தானம் தர அவரது குடும்பத்தினர் ஒப்புதல் அளித்த தகவல் கிடைத்தது.

உடனடியாக எங்கள் மருத்துவமனையை சேர்ந்த ஒரு டாக்டர்கள் குழுவினர் அங்கு அனுப்பி வைக்கப்பட்டனர். மற்றொரு குழுவினர் பிஎல்கே மருத்துவமனையில் உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சைக்கான முன்னேற்பாடுகளில் இறங்கினர். தெற்கு டெல்லியில் இருந்து பிஎல்கே மருத்துவமனை 23 கி.மீ. தூரம் உள்ளது. கல்லீரலை விரைவாக எடுத்து வர போலீஸாரின் உதவியை நாடினோம். அவர்களும் டெல்லி கிரீன் காரிடார் சாலையில் போக்குவரத்தை சீர்படுத்தி தயார் நிலையில் இருந்தனர்.

தெற்கு டெல்லி மருத்துவமனையில் எங்கள் டாக்டர்கள் குழுவினர் இரண்டரை மணி நேரத்தில் முதியவரின் உடலில் இருந்து கல்லீரலை பத்திரமாக எடுத்தனர். பின்னர் ஆம்புலன்சில் கிரீன் காரிடார் சாலை வழியாக 22 நிமிடத்தில் மருத்துவமனையை அடைந்தனர். போலீஸாரின் உதவியால் 23 கி.மீ. தூரத்தில் இருந்து வெறும் 22 நிமிடத்தில் கல்லீரல் விரைவாக வந்து சேர்ந்தது.

அதன்பின், பிஎஸ்எப் காவலருக்கு கல்லீரல் மாற்று அறுவைச் சிகிச்சை 7 மணி நேரம் நடைபெற்றது. இந்த சிகிச்சை வெற்றி அடைந்துள்ளது. இதன் மூலம் காவலர் புது வாழ்வு பெற்றுள்ளார். முதியவரை இழந்து சோகத்தில் இருந்தாலும், உறுப்பு தானத்துக்கு முன்வந்த அவரது குடும்பத்தாருக்கு எங்கள் டாக்டர்கள் குழு சார்பாக நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். உறுப்பு தானம் என்பது பலருடைய உயிரைக் காப்பாற்றக் கூடியது. கல்லீரலை விரைந்து கொண்டு வர உதவிய போலீஸார் மற்றும் அனைத்து அதிகாரிகளுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். இவ்வாறு அபிதீப் சவுத்ரி கூறினார். - பிடிஐ

# பருவநிலை மாற்றத்துக்கு எதிரான போரை பிரதமர் மோடி தலைமையேற்று நடத்துகிறார்

● மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா பெருமிதம்

■ **ஷில்லாங்**

பருவநிலை மாற்றத்துக்கு எதிரான போரை பிரதமர் நரேந்திர மோடி தலைமையேற்று நடத்துகிறார் என்று மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தெரிவித்துள்ளார்.

மேகாலயாவின் சோரா பகுதியில் தரிசு நிலத்தை வனப்பகுதியாக மாற்றும் திட்டத்தை அமைச்சர் அமித் ஷா நேற்று தொடங்கிவைத்தார். அப்போது அவர் பேசியதாவது:

மேகாலயாவில் சோரா என்றழைக்கப்படும் சிரபுஞ்சியில் ஆண்டு முழுவதும் மழை பெய்தது. ஆனால் பருவநிலை மாறுபாட்டால் தற்போது மழைப்பொழிவு குறைந்திருக்கிறது. பருவநிலை மாறுபாடு பிரச்சினைக்கு தீர்வு காண மேகாலயா அரசும், மத்திய அரசும் இணைந்து சோரா பகுதியில் தரிசு நிலத்தை வனப்பகுதியாக மாற்றும் திட்டத்தை செயல்படுத்த உள்ளது.

இதன்படி அடுத்த 3 ஆண்டுகளில் 1,000 ஹெக்டேர் நிலத்தில் 10 லட்சம் மரங்கள் நடப்படும். இதில் 80 சதவீத மரங்கள் நீண்ட காலம் நிலைத்திருக்கும் மரங்களாக இருக்கும். 20 சதவீத மரங்கள் கால்நடைகள், பூ, மூலிகை சாகுபடி சார்ந்ததாக இருக்கும். புதிய வேளாண் நுட்பத்தில் வனப் பகுதியை உருவாக்குகிறோம். இதன் மூலம் 3 ஆண்டுகளுக்குப் பிறகு மரங்களைப் பேண வேண்டிய அவசியம் இருக்காது. அசாம் ரைபிள்ஸ் படை வீரர்கள் இத்திட்டத்தில் இணைந்து பணியாற்றுவார்கள்.

பருவநிலை மாற்றத்துக்கு எதிரான போரை பிரதமர் நரேந்திர மோடி தலைமையேற்று நடத்துகிறார். பிரதமரின் வழிகாட்டுதலின்படி கரியமில வாயுவை கட்டுப்படுத்த நாடு முழுவதும் ஏழைகளுக்கு சமையல் காஸ் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. பிரதமரின் முயற்சியால் நீர்மின் திட்டங்கள், சூரிய மின் திட்டங்களில் இந்தியா முன்னோடியாக உள்ளது. சர்வதேச அளவில் பருவநிலை மாறுபாட்டை தடுக்க பாரீஸ் ஒப்பந்தத்தை அமல்படுத்த பிரதமர் உறுதி பூண்டுள்ளார்.

நாடு முழுவதும் மத்திய பாதுகாப்புப் படைகள் கடந்த 2 ஆண்டுகளில் மட்டும் 1.48 கோடி மரக்கன்றுகளை நட்டுள்ளன. இன்றைய தினத்தில் மட்டும் மத்திய பாதுகாப்புப் படை வீரர்கள் 16.31 லட்சம் மரக்கன்றுகளை நட்டுள்ளனர்.

இவ்வாறு அவர் பேசினார்.

மேகாலயாவில் சோரா குடிநீர் திட்டம், வடகிழக்கு மாநிலங்களை இணைக்கும் ஐஎஸ்பிடி பேருந்து சேவை திட்டம், உம்பாலி மருத்துவமனையில் ஆக்சிஜன் ஆலை உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை அமைச்சர் அமித் ஷா தொடங்கி வைத்தார்.



புதிய வேளாண் சட்டங்களுக்கு எதிராக டெல்லியில் விவசாயிகள் தொடர் போராட்டம் நடத்தி வருகின்றனர். அவர்களுக்கு ஆதரவாக உத்தர பிரதேச விவசாயிகள் காஜியாபாத்தில் நேற்று டிராக்டர் பேரணி நடத்தினர். படம்: பிடிஐ

## வங்கதேசத்துக்கு 200 டன் ஆக்சிஜன் அனுப்பிய இந்தியா

**புதுடெல்லி**

வங்கதேசத்தைச் சேர்ந்த கரோனா நோயாளிகளுக்காக, பேனாபோல் என்ற இடத்துக்கு மருத்துவ ஆக்சிஜன் அனுப்ப மத்திய அரசு முடிவு செய்தது. அதற்காக, தென்கிழக்கு ரயில்வே மண்டலத்தில் இயங்கும் சக்ரதர்பூர் பிரிவில் இதற்கான பணிகள் நடந்தன. பின்னர், ரயில் மூலம் வங்கதேசத்துக்கு மருத்துவ ஆக்சிஜன் அனுப்பி வைக்கப்பட்டது.

இதுகுறித்து மத்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் ட்விட்டர் பக்கத்தில், "அண்டை நாடுகளுக்கு முதல் முன்னுரிமை என்ற கொள்கையின்படி வங்கதேசத்துக்கு ரயில் மூலம் 200 மெட்ரிக் டன் மருத்துவ ஆக்சிஜன் அனுப்பி வைக்கப்பட்டது" என்று கூறியுள்ளார்.

நாட்டிலேயே முதல்முறையாக

## வாக்காளருக்கு லஞ்சம் கொடுத்த வழக்கில் டிஆர்எஸ் பெண் எம்.பி.க்கு 6 மாதம் சிறை

**ஹைதராபாத்**

வாக்காளர்களுக்கு வாக்களிக்க லஞ்சம் கொடுத்ததாக நாட்டிலேயே முதல்முறையாக தெலங்கானா ராஷ்ட்ர சமிதி கட்சியைச் சேர்ந்த பெண் எம்.பி.க்கு 6 மாதம் சிறை தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

தெலங்கானா மாநிலத்தில் ஆளும் தெலங்கானா ராஷ்டிர சமிதி கட்சி (டிஆர்எஸ்) சார்பில் 2019 நாடாளுமன்ற தேர்தலில் மகபூபாத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர் மலோத் கவிதா. தேர்தல் சமயத்தில் மலோத் கவிதாவுக்கு வாக்களிக்க வலியுறுத்தி, அவருக்கு நெருங்கியவரான சவுகத் அலி என்பவர் வாக்காளர்களுக்கு தலா 500 ரூபாய் வீதம் பணப்பட்டுவாடா செய்தபோது தேர்தல் பறக்கும் படையினரால் கையும் களவுமாக பிடிபட்டார்.

விசாரணையில், மலோத் கவிதா கொடுத்த பணத்தை, அவருக்கு வாக்களிப்பதற்காக வாக்காளர்களுக்கு லஞ்சமாக கொடுத்தேன் எனவும் ஒப்புக் கொண்டார். இந்த வழக்கில் முதல் குற்றவாளியாக சவுகத் அலியும் 2-வது குற்றவாளியாக மலோத் கவிதாவும் சேர்க்கப்பட்டனர். இந்த வழக்கின் விசாரணை நாம்பள்ளியில் உள்ள சிறப்பு நீதிமன்றத்தில் நடந்து வந்தது.

இந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம் நேற்று தீர்ப்பு வழங்கியது. அதில் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதால் எம்.பி. மலோத் கவிதா மற்றும் சவுகத் அலி ஆகிய இருவருக்கும் தலா 6 மாதம் சிறை தண்டனையும், இருவருக்கும் தலா 10,000 ரூபாய் அபராதமும் விதிக்கப்படுவதாக கூறப்பட்டுள்ளது.

**மேல்முறையீடு**

மேல்முறையீடு செய்வதற்கு வாய்ப்பளிக்கும் வகையில் மலோத் கவிதாவுக்கு ஜாமீன் வழங்கி நீதிபதி உத்தரவிட்டார். இதன் மூலம் வாக்காளர்களுக்கு லஞ்சம் கொடுத்து வாக்கு பெற முயன்றதற்காக இந்தியாவிலேயே முதல் முறையாக பதவியில் உள்ள எம்.பி. ஒருவருக்கு சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. - பிடிஐ

(C) KSL Media Ltd.

கொல்கத்தா அரசு மருத்துவமனையில்

## பிணவறை உதவியாளர் பணிக்கு பொறியாளர் உட்பட 8,000 பேர் போட்டி

**கொல்கத்தா**

கொல்கத்தா அரசு மருத்துவமனையில் பிணவறை உதவியாளர் பணிக்கு 100 பொறியாளர்கள் உட்பட 8,000 பேர் விண்ணப்பித்துள்ளனர்.

கடந்த 2019 நவம்பர் மாத புள்ளிவிவரத்தின்படி மேற்குவங்கத்தில் வேலைவாய்ப்பின்மை சதவீதம் 6.1 ஆக இருந்தது. கரோனாவால் எழுந்த அசாதாரண சூழ்நிலையால் அந்த மாநிலத்தில் வேலைவாய்ப்பின்மை சதவீதம் 17.4 ஆக அதிகரித்திருக்கிறது. அதாவது 6 பேரில் ஒருவருக்கு வேலை இல்லை.

மாநிலத்தின் வேலையில்லா திண்டாட்டத்தை உறுதிப்படுத்தும் வகையில், கொல்கத்தாவில் உள்ள என்ஆர்எஸ் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பிணவறை உதவியாளர் பணிக்கு பொறியாளர்கள் உட்பட 8,000 பேர் விண்ணப்பித்துள்ளனர்.

என்ஆர்எஸ் மருத்துவமனையில் 6 பிணவறை உதவியாளர் பணியிடங்கள் காலியாக உள்ளன. இவற்றை நிரப்ப கடந்த டிசம்பர் இறுதியில் விளம்பரம் வெளியிடப்பட்டது. இந்த பணிக்கான கல்வித் தகுதி 8-ம் வகுப்பு ஆகும். வயது வரம்பு 18 முதல் 40 வயது வரை என்றும் மாதம் ரூ.15,000 ஊதியம் வழங்கப்படும் என்றும் விளம்பரத்தில் அறிவிக்கப்பட்டது.

பிணவறை உதவியாளர் பணிக்கு 100 பொறியாளர்கள், 500 முதுநிலை பட்டதாரிகள், 2,000 பட்டதாரிகள் உட்பட 8,000 பேர் விண்ணப்பித்தனர். அதிர்ச்சி அடைந்த மருத்துவமனை நிர்வாகம், பல கட்ட ஆய்வுகளுக்குப் பிறகு 8,000 பேரில் இருந்து 784 பேரை தேர்வு செய்துள்ளது.

இதுகுறித்து மருத்துவமனை தலைவர் சைபால் குமார் முகர்ஜி கூறும்போது, தேர்வு செய்யப்பட்ட 784 பேருக்கு வரும் ஆகஸ்ட் 1-ம் தேதி எழுத்துத் தேர்வு நடத்தப்படும். அதன் பிறகு நேர்முகத் தேர்வு நடத்தப்படும். ஏற்கெனவே பிணவறைகளில் பணியாற்றியோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்" என்று தெரிவித்தார்.

பிணவறையில் பணியாற்ற பொறியாளர்கள், முதுநிலை பட்டதாரிகள் போட்டியிடுவது, மேற்கு வங்கத்தின் வேலையின்மை அவலத்தை அம்பலப்படுத்துகிறது என்று எதிர்க்கட்சித் தலைவர்கள் குற்றம் சாட்டி உள்ளனர். - பிடிஐ

ஒலிம்பிக் திருவிழாவின் 3-ம் நாள்

## மேரிகோம், பி.வி.சிந்து மணிகா பத்ரா முன்னேற்றம்

**டோக்கியோ**

டோக்கியோ ஒலிம்பிக்கில் மகளிருக்கான துப்பாக்கி சுடுதலில் இந்தியாவின் மனுபாகர் ஏமாற்றம் அளித்தார். குத்துச்சண்டையில் மேரி கோம், டேபிள் டென்னிஸில் மணிகா பத்ரா, பாட்மிண்டனில் பி.வி.சிந்து ஆகியோர் அடுத்த சுற்றுக்கு முன்னேறினர்.

டோக்கியோ ஒலிம்பிக் திருவிழாவின் 3-வது நாளான நேற்று மகளிருக்கான குத்துச்சண்டையில் 51 கிலோ எடைப் பிரிவில் இந்தியாவின் மேரி கோம் 4-1 என்ற கணக்கில் டொமினிகாவின் மிகுஎலினா ஹெர்னாண்டஸ் கார்சியாவை வீழ்த்தி கால் இறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறினார். ஆடவருக்கான லைட்வெயிட் குத்துச்சண்டையில் இந்தியாவின் மணீஷ் கவுசிக் 1-4 என்ற கணக்கில் இங்கிலாந்தின் லூக் மெக்கார்மேக்கிடம் தோல்வியடைந்தார்.

டேபிள் டென்னிஸில் ஆடவர் ஒற்றையர் பிரிவு 2-வது சுற்றில் இந்தியாவின் சத்தியன் 11-7, 7-11, 4-11, 5-11, 11-9, 12-10, 11-6 என்ற செட் கணக்கில் ஹாங் ஹாங்கின் சியு ஹேங் லாமிடம் தோல்வியடைந்தார். மகளிர் ஒற்றையர் பிரிவு 2-வது சுற்றில் இந்தியாவின் மணிகா பத்ரா 3-வது சுற்றுக்கு முன்னேறினார்.

ஆடவர் ஹாக்கியில் இந்திய அணி 1-7 என்ற கோல் கணக்கில் ஆஸ்திரேலியாவிடம் தோல்வியடைந்தது. இந்திய அணி சார்பில் தில்பிரீத் சிங் மட்டும் ஒரு கோல் அடித்தார். ஆடவருக்கான நீச்சல் போட்டியில் 100 மீட்டர் பேக்ஸ்டிரோக்கில் இந்தியாவின் ஸ்ரீஹரி நட்ராஜும் மகளிர் பிரிவில் மானா படேலும் அரை இறுதிக்கு முன்னேறத் தவறினர்.

மகளிருக்கான பாய்மரப்படகில் இந்தியாவின் நேத்ரா குமணன் இரு சுற்றுகளின் முடிவில் ஒட்டுமொத்தமாக 49 புள்ளிகளுடன் 27-வது இடத்தில் உள்ளார். ஆடவர் பிரிவில் இந்தியாவின் விஷ்ணு சரவணன் முதல் சுற்றில் 14-வது இடம் பிடித்தார்.

மகளிருக்கான ஆர்டிஸ்டிக் ஜிம்னாஸ்டிக்கில் இந்தியாவின் பிரணதி நாயக் இறுதிச் சுற்றுக்கு தகுதிபெறத் தவறினார்.

மகளிர் டென்னிஸ் இரட்டையர் பிரிவு முதல் சுற்றில் இந்தியாவின் சானியா மிர்சா, அங்கிதா ரெய்னா ஜோடி 6-0, 6-7, 8-10 என்ற செட் கணக்கில் போராடி உக்ரைனின் நாடியா, லியுட்மிலா கிச்செனோக் ஜோடியிடம் தோல்வியடைந்தது.

பாட்மிண்டனில் மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் இந்தியாவின் பி.வி.சிந்து 21-7, 21-10 என்ற செட் கணக்கில் இஸ்ரேலின் கேசேனியா பொலிகார்போவாவை வீழ்த்தினார்.

படகு வலித்தலில் ஆடவருக்கான லையிட்வெயிட் டபுள்ஸ் ஸ்கல்ஸ் பிரிவில் இந்தியாவின் அர்ஜூன் லால் ஜாட், அர்விந்த் சிங் ஜோடி அரை இறுதிக்கு முன்னேறியது. துப்பாக்கி சுடுதலில் ஆடவருக்கான 10 மீட்டர் ஏர் ரைபிள் பிரிவில் இந்தியாவின் தீபக் குமார், திவ்யான்ஷ் சிங் பன்வார் ஆகியோரும் மகளிருக்கான 10 மீட்டர் ஏர் பிஸ்டல் பிரிவில் இந்தியாவின் மனு பாகர், யஷஸ்வினி சிங் தேஸ்வால் ஆகியோரும் பதக்க சுற்றுக்கு தகுதி பெறத் தவறினர்.

லங்டா, காகோரி உள்ளிட்ட சுவையான

## மாம்பழங்களை பிரதமர் மோடிக்கு அனுப்பிய முதல்வர் ஆதித்யநாத்

**லக்னோ**

உத்தர பிரதேசத்தின் லங்டா, காகோரி உள்ளிட்ட சுவையான மாம்பழங்களை பிரதமர் நரேந்திர மோடி, மத்திய அமைச்சர்களுக்கு முதல்வர் யோகி ஆதித்யநாத் அனுப்பி வைத்துள்ளார்.

உத்தர பிரதேசத்தில் மே 3-வது வாரம் தொடங்கி ஆகஸ்ட் வரை மாம்பழ சீசன் நீடிக்கும். அந்த மாநிலத்தின் தசேரி, சவுதா, லங்டா, காகோரி உள்ளிட்ட மாம்பழ வகைகள் சுவை மிகுந்தவை. இந்த மாம்பழங்களை பிரதமர் நரேந்திர மோடி, மத்திய அமைச்சர்களுக்கு முதல்வர் யோகி ஆதித்யநாத் அனுப்பி வைத்துள்ளார்.

ஒவ்வொரு மாம்பழ பெட்டியிலும் முதல்வரின் வாழ்த்து கடிதமும் வைக்கப்பட்டிருக்கிறது. "உ.பி.யின் தசேரி உள்ளிட்ட பல்வேறு மாம்பழ வகைகள் இந்தியா மட்டுமன்றி உலகம் முழுவதும் பிரபலமாக உள்ளன. இந்த மாம்பழங்களின் சுவையும் இனிப்பும் நிச்சயம் உங்களுக்குப் பிடிக்கும்" என்று கடிதத்தில் முதல்வர் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் முக்தர் அப்பாஸ் நக்வி கூறும்போது, "எனக்கு லங்டா வகை மாம்பழங்களை முதல்வர் யோகி அனுப்பி உள்ளார். அவ ருக்கு நன்றி" என்றார்.

பாஜக ஆளும் மாநிலங்களின் முதல்வர்களுக்கும் யோகி ஆதித்யநாத் மாம்பழங்களை அனுப்பி வைத்துள்ளார். ஆனால் எதிர்க்கட்சிகள் ஆளும் மாநில முதல்வர்களுக்கு மாம்பழங்கள் அனுப்பவில்லை.

**ராகுலுக்கு மாம்பழம் பிடிக்காது**

இதுகுறித்து மாநில அரசு வட்டாரத்தினர் கூறும்போது, "காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தியின் வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாக பரவி வருகிறது. அந்த வீடியோவில், உத்தர பிரதேச மாம்பழங்கள் எனக்கு பிடிக்காது என்று ராகுல் கூறியுள்ளார். அவருக்கும் எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங் களின் முதல்வர்களுக்கும் உத்தர பிரதேச மாம்பழங்கள் பிடிக்காது. எனவே அவர்களுக்கு மாம்பழங்களை அனுப்பவில்லை" என்று தெரிவித்தனர்.

ரஷ்யாவைச் சேர்ந்த போலீஸ் அதிகாரி வீட்டில்

## தங்கத்தில் மின்னும் கழிப்பறை, விளக்கு, கதவுகள், படிகள்


● லஞ்சப் பணத்தில் வாங்கியது விசாரணையில் அம்பலம்

**மாஸ்கோ**

ரஷ்யாவைச் சேர்ந்த ஊழல் போலீஸ் அதிகாரியின் வீட்டில் தங்கத்தில் கழிப்பறை, சர விளக்கு, தங்கமுலாம் பூசிய கதவுகள், படிகள் அமைக்கப்பட்டிருப்பதைப் பார்த்து உலகமே வியந்துள்ளது.

ரஷ்யாவின் ஸ்ட்ராவ்போல் பிராந்தியத்தைச் சேர்ந்த போலீஸ் கர்னல் அலெக்சாய் சஃபோனோவ். இவர் தனக்கு கீழே பணிபுரியும் 35 அதிகாரிகளுடன் சேர்ந்து ஒரு மாஃபியா கும்பலை வழி நடத்தியதாக குற்றம் சாட்டப்பட்டு, லஞ்சம் வாங்கிய சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் மீது பல்வேறு வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில், அவரது வீட்டை போலீஸார் சோதனையிட்டனர். அப்போது அவரது வீட்டில் தங்கத்தினால் ஆன சரவிளக்குகள், தங்க முலாம் பூசிய கதவுகள், படிக்கட்டுகள், தங்கமுலாம் பூசப்பட்ட நாற்காலி, மேஜை உள்ளிட்ட மரச்சாமான்கள் உள்ளன. இதைக் கண்டதும் போலீஸ் அதிகாரிகள் ஆச்சர்யத்தில் ஆழ்ந்தனர்.



தங்கத்தில் அமைக்கப்பட்டுள்ள கழிப்பறை.

பின்னர் அந்த வீட்டில் இருந்த கழிப்பறையைத் திறந்து பார்த்தபோது அங்கிருந்த டாய்லட் சீட்டும் தங்கத்தில் செய்யப்பட்டு இருந்தது. சஃபோனோவ் தனக்குக் கிடைத்த ஊழல் பணத்தில் தனது வீட்டை தங்கத்தால் செதுக்கியுள்ளார் என்று தி மாஸ்கோ டைம்ஸ் பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அலெக்சாய் சஃபோனோவ் மீதுள்ள குற்றச்சாட்டு உறுதியானால் அவருக்கு 8 முதல் 15 ஆண்டுகள் வரை சிறை தண்டனை கிடைக்கும் என்றும் அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், விசாரணை நடத்திய போலீஸார் அந்த வீட்டில் எடுத்த புகைப்படங்கள், வீடியோக்களை யூடியூபில் வெளியிட்டுள்ளனர். தங்கத்தினால் ஆன பொருட்கள் மட்டுமல்லாமல் அந்த வீட்டையே சொர்க்கபுரியாக மாற்றி வைத்துள்ளார் அலெக்சாய் சஃபோனோவ். வீட்டினுள் அழகான புல்வெளியும் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் விலை உயர்ந்த ஆடம்பர கார்களும் அங்கு நிறுத்தப்பட்டுள்ளன.

கடந்த 20-ம் தேதி யூடியூபில் பதிவேற்றப்பட்ட அந்த வீடியோவை இது வரை பல லட்சம் பேர் பார்த்துள்ளனர். மேலும் 3.45 லட்சம் பேர் அந்த வீடியோவுக்கு லைக்கும் போட்டுள்ளனர்.

கடந்த சில ஆண்டுகளாக அலெக்சாய் சஃபோனோவும் அவரது கீழ் உள்ள அதிகாரிகளும் சுமார் ரூ.1.92 கோடி அளவுக்கு பணத்தை லஞ்சமாக பெற்றுள்ளதும் விசாரணையில் தெரியவந்துள்ளது. வர்த்தகத்துக்காக வாகனங்களுக்கு போலியான அனுமதி தருதல் உள்ளிட்ட பல்வேறு குற்றச்செயல்களில் அவர்கள் ஈடுபட்டு வந்துள்ளனர்.

## மீராபாய் சானுவுக்கு வாழ்நாள் முழுவதும் பீட்சா டோமினோஸ் அறிவிப்பு

**புதுடெல்லி**

ஒலிம்பிக்கில் வெள்ளிப் பதக்கம் வென்ற மீராபாய் சானுவுக்கு வாழ்நாள் முழுவதும் இலவசமாக பீட்சா வழங்கப்படும் என டோமினோஸ் உணவகம் அறிவித்துள்ளது.

டோக்கியோவில் நடைபெற்று வரும் ஒலிம்பிக் போட்டியில் இந்தியாவைச் சேர்ந்த மீராபாய் சானு, பளுதூக்குதல் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்றார். இந்த ஒலிம்பிக்கில் இந்தியாவுக்கான முதல் பதக்கம் இதுவாகும்.

இதனிடையே, இந்த வெற்றி தொடர்பாக மீராபாய் சானு, தனியார் செய்தி நிறுவனத்துக்கு பேட்டி அளித்திருந்தார். அதில், "ஒலிம்பிக் பயிற்சிக்காக பல மாதங்களாக நான் டயட்டில் இருந்ததால், பீட்சா சாப்பிட வேண்டும் என விரும்புகிறேன்" எனக் கூறியிருந்தார்.

இந்நிலையில், இவரது இந்தப் பேட்டியை டோமினோஸ் நிறுவனத்துக்கு டேக் செய்த ட்விட்டர் பயனர் ஒருவர், மீராபாய் சானு இந்தியா திரும்பியதும், அவருக்கு பீட்சா வழங்குமாறும் இதற்கான செலவை தான் ஏற்றுக் கொள்வதாகவும் தெரிவித்திருந்தார்.

இதைப் பார்த்த டோமினோஸ் நிறுவனம், "இந்தியாவுக்கு பெருமை சேர்த்திருக்கும் மீராபாய் சானுவுக்கு அவரது வாழ்நாள் முழுவதும் இலவசமாக பீட்சா வழங்க முடிவு செய்துள்ளோம்" எனத் தெரிவித்துள்ளது.

சட்டவிரோதமாக நுழைய முயன்றதாக

## அசாமில் 7 குழந்தைகள் உட்பட 24 ரோஹிங்கியா முஸ்லிம்கள் கைது

**குவாஹாட்டி**

அசாமில் கடந்த 2 நாட்களில் சட்டவிரோதமாக நுழைய முயன்றதாக 7 குழந்தைகள் உட்பட 24 ரோஹிங்கியா முஸ்லிம்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மியான்மரில் கடந்த 2017-ல் நடந்த வன்முறை காரணமாக ஏராளமான ரோஹிங்கியா முஸ்லிம்கள் அந்நாட்டைவிட்டு வெளியேறி வங்கதேசத்துக்குள் அகதிகளாக நுழைந்தனர். அவர்கள் வங்கதேச எல்லை அருகில் உள்ள காக்ஸ்பஜார் பகுதியில் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அவ்வப்போது வேலை தேடி இந்தியாவுக்குள் சட்டவிரோதமாக நுழைய முயல்வதும் அவர்களை கைது செய்வதும் வழக்கமாக உள்ளது.

இந்நிலையில், அசாமின் கரிம்கஞ்ச் மாவட்டம் பதார்பூரில் கடந்த 24-ம் தேதி சில்சர்-அகர்தலா ரயிலில் ஏற முயன்ற 6 குழந்தைகள், 3 பெண்கள் உட்பட 15 ரோஹிங்கியா முஸ்லிம்களை அரசு ரயில்வே போலீஸார் (ஜிஆர்பி) கைதுசெய்தனர். இவர்கள் அனைவரிடமும் முறையான ஆவணங்கள் எதுவும் இல்லாததால், சட்டவிரோதமாக இந்தியாவுக்குள் நுழைந்தவர்களாக கருதப்படுவார்கள் என ரயில்வே போலீஸார் தெரிவித்துள்ளனர்.

இதுபோல, குவாஹாட்டி ரயில் நிலையத்தில் 3 பெண்கள், ஒரு குழந்தை உட்பட 9 ரோஹிங்கியா முஸ்லிம்கள் நேற்று காலையில் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் ஐ.நா. அகதிகள் ஆணையத்தின் போலி அடையாள அட்டை இருந்ததாக ரயில்வே போலீஸார் தெரிவித்து உள்ளனர்.

மத்திய உள்துறை இணையமைச்சர் நித்யானந்த் ராய் நாடாளுமன்றத்தில் கடந்த வாரம் கூறும்போது, "உரிய பயண ஆவணங்கள் இல்லாமல் இந்தியாவில் நுழையும் வெளிநாட்டினர் சட்டவிரோதமாக குடியேறியவர்கள் என கருதப்படுவர். இதுபோல பயண ஆவணம் காலாவதியான பிறகும் இங்கு தங்கியிருப்போர் மீதும் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்" என்றார். - பிடிஐ